# உங்கள் வாழ்நாள் பலனை நீங்களே அறிந்து கொள்ளுங்கள்



தமிழறிஞர்
**கே.வி. குணசேகரம்**

குணம் பிரசுரம்

# உங்கள் வாழ்நாள் பலனை நீங்களே அறிந்து கொள்ளுங்கள்

கிரகமாற்றங்கள், தசை, புத்தி, லக்கன பலன், இராசி பலன், கோசார பலன். சந்திர ராசிப்பலன். குரு, சனி. ராகு,கேது மாற்றப் பலன் தினப்பலன். லக்கன வீடு முதல் 12 பாவங்களில் கிரகங்கள் நிற்கும் பலன், திருமணப் பொருத்தம் போன்ற அனைத்தையும் எழுதியுள்ளார். சாதாரணமான ஒரு மனிதன் இந்நூலைக் கற்றுப் புரிந்துகொள்ளலாம். மிகவும் இலகுவான மொழிநடையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

விலை :

விநியோகம் : லங்கா புத்தகசாலை
கு.டு. 1இ14இ டயஸ்பிளேஸ்,
குணசிங்கபுர,
கொழும்பு ~12

# என்னுரை

இதுவரை வேதம், உபநிடதங்கள், திருவருட்பயன், சிவஞானபோதம், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், பகவத்கீதை, இதிகாச புராணங்களைப் படித்து அதில் உள்ள தத்துவங்களைச் சிறுவர்களும் புரிந்து கொள்ளக் கூடியதாக கதைகள் எழுதினேன். அவற்றில் சோதிடம் சம்பந்தமாக ஏராளமான தகவல்கள் உள்ளன. புராண, இதிகாச நாயகர்கள் கிரகங்களின் தாக்கத்தினால் பல இன்னல்களை அனுபவித்துள்ளனர்.

சிவபெருமானைக்கூட குரு பத்தில் இருந்த போது பிச்சையெடுக்க வைத்தாகப் புராணங்கள் கூறுகின்றன. இது போல சூரன், வாலி, இராவணன், அரிச்சந்திரன், துரியோதனன், பாண்டவர்கள், திரௌபதை, நளன் போன்றோரைக் கிரகங்கள் ஆட்டிப் படைத்துள்ளன.

திருவள்ளுவர் விதி என்ற அதிகாரத்தில் கூறிய பத்துக் குறள்களையும் வரலாற்று நாயகர்களின் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் கிரகங்களின் தன்மை புரிய வரும். விதி உதவி செய்யாவிட்டால் கற்றவர்களால் தமது புலமையை வெளிப்படுத்த முடியாது. தனவந்தனால் பணத்தை அனுபவிக்க முடியாது. வரலாற்றில் பெரும் பெரும் புலவர்கள் மானமிழந்து, அடிமைப்பட்டு, அவமானப்பட்ட வரலாறுகளைப் பார்த்தால் அது விதியின் செயலாகத்தான் இருக்கும். ஒரு காலத்தில் கம்பன், காளிதாசர், காளமேகம் போன்ற பெரும் பெரும் புலவர்கள் பெரும் அவமானப்பட்டனர். அதற்குக் காரணம் விதி. விதி என்பது கிரகமாற்றம். நம்முன்னோர் உலகில் உள்ள எல்லாவற்றையும் ஆராய்ந்து முடிவுகளைக் கூறியுள்ளனர். அவர்கள் கூறியுள்ளதற்கு மேலாக இன்றைய விஞ்ஞானிகள் எதையும் கூறவில்லை. இன்னும் ஆயிரம் வருடங்களுக்குப் பின் நிகழப்போகும் கிரகணங்கள், பூமி அதிர்ச்சிகள்,புயல்கள், வெள்ளப்பெருக்குகள் பற்றி பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறிவிட்டனர்.இதன்படி பூமியைத் தவிர்ந்த எந்தக் கிரகங்களிலும் உயிர்கள் இல்லை. அங்கு உயிர்கள் வாழ முடியாது என்றும் கூறியுள்ளனர்.

மனிதனின் வாழ்வில் பல ஆயிரம் பிரச்சினைகள் வந்து போகின்றன. அவை யாவும் கிரக மாற்றத்தால் தான் வந்து துன்பத்தையும் இன்பத்தையும் மாறிமாறித் தருகின்றன என்று நினைத்தால் மனக்குழப்பம், வெறுப்பு, நிம்மதிக்குறைவு என்பன வரமாட்டாது. எனது வாழ்வில் பல்வேறு பிரச்சினைகள் வந்தன. நான் கடுமையாக உழைத்தேன். கல்விக்காக உயிரையும் கொடுத்தேன். அதைக் கல்விப்புலம் சார்ந்த யாரும் மதிக்கவில்லை. உரிய மதிப்புத் தரவில்லை. அதிகாரிகள் தாம் விரும்பியவர்களுக்கும், தமது மனைவி, மக்கள் இனத்தவர்கள் விரும்பியவர்களுக்குமே பதவிகளைக் கொடுத்தனர். அதனால்தான் யாழ்ப்பாணத்தின் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்தது. நான் நிம்மதியை இழந்து துன்பப்பட்டேன். பலரைக் குறை கூறினேன். பலருடன் பிரச்சினைப்பட்டேன். இப்போ இந்நூலை எழுதிய பின்பு தான் மனக்குழப்பம் நீங்கியது. வள்ளுவன் கூறிய விதியென்ற கிரகமாற்றம் தான் மனித நடத்தைகளையும் மேம்பாடுகளையும் செய்விக்கிறது. என்று புரிந்து கொண்டேன். இன்பமான சம்பவங்கள் நடந்த காலங்களையும் துன்பமான சம்பவங்கள் நடந்த காலங்களையும் எண்ணிப் பார்த்த போது அவை விளங்கின. 1985,2001,2006ஆம் ஆண்டுகள் மிகமிக நல்ல ஆண்டுகளாக அமைந்தன. அந்த ஆண்டுகள் பல முக்கிய சம்பவங்கள் நடைபெற்றன. இன்பமான சம்பவங்களும் துன்பமான சம்பவங்களும் நடைபெற்ற காலப்பகுதியை ஆராய்ந்த போது அக்காலத்தில் எனது சாதகத்தில் கிரகங்கள் உள்ள நிலைதான் அதற்குக் காரணமாயின என்று இப்போது புரிகிறது.

எனது சாதகத்தில் உள்ள கிரக நிலைப்படி நான் இதுவரை உலகில் வாழ்ந்தவர்கள் எழுதாத, புதிய புதிய இலக்கியக்களை எழுதுவேன் என்றும், அவை எழுத வாசிக்கத் தெரிந்தவர்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமையும் என்றும், அதனால் தமிழும், சமயமும் பெரும் எழுச்சி பெறும் என்றும் சோதிடர்கள் கூறினர். இப்போது அது உண்மையென்று தெரிகிறது. பகவத்கீதை, திருவருட்பயன், சிவஞானபோதம், சமய தத்துவங்கள், பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் அனைத்தும் பொருத்தமான கதைகளாக்கப்பட்டுள்ளன. இது, இதுவரை நடவாத ஒன்று. இன்று இவை யாவும் எழுத வாசிக்கத் தெரிந்த அனைவருக்கும் விளங்கும்.

அத்துடன் இவ் இலக்கியங்கள் இருக்கும் வரை இக்கதைகளும் இருக்கும். பகவத்கீதை, திருவருட்பயன் என்பவற்றுக்கான கதைகள் மிகவும் சிறப்பானவை. பொருத்தமானவை என்று பலரும் கூறியுள்ளனர். அதனால் எனது இலக்கியங்கள் சாகா வரம் பெற்றவை. பகவத்கீதை அழிந்தால் தான் எனது பகவத்கீதைக்கான கதைகளும் அழியும். எனது ஆக்கங்கள் யாவும் நிரந்தரமானவை. அவை மனிதன் உள்ளவரை இருந்து எனது பெயரைச் சொல்லும். இன்று எனது இலக்கியங்களை விமர்சிப்பாரில்லை. அதற்குக் காரணம். தத்துவங்களுக்குக் கதைகள் பொருந்துமா என்ற பயம். அடுத்தது எனது ஆக்கங்களை விமர்சிக்க ஆயிரக்கணக்கான நூல்களைக் கற்க வேண்டும். 3000 பாடல்களைக் கொண்ட திருமந்திரத்திற்கே கதை எழுதுகிறேன். அது சந்நிதியான் ஆச்சிரம வெளியீடான ஞானச்சுடரில் தொடர்ந்து வெளிவருகிறது. திருவள்ளுவர் மாலையில் உள்ள பாடல்களை எழுதிய புலவர்கள் பலர் பிரபலமில்லாதவர்கள். அவர்களின் ஆக்கங்கள் எவையும் இன்று இல்லை. ஆனால் அவர்கள் திருவள்ளுவர் மாலையால் வாழ்கின்றார்கள். அது போலத்தான் இன்று எனது நூல்களை விமர்சித்தவர்கள் பல்லாயிரம் ஆண்டுகளின் பின்பும் பேசப்படுவர்.அது போல எனது கல்விச் செயற்பாடுகளும் பேசப்படும். எனது கல்விச் செயற்பாடுகள் பற்றி விரிவாக எனது நூல்களில் எழுதியுள்ளேன். இவை பற்றி இந்நூல் எழுதக்காரணம் என்னவென்றால் இன்நூல் தமிழர் வாழும் வீடுகளில் எல்லாம் என்றும் இருக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. கிரகங்களின் நகர்வைக் கொண்டு அவை மனிதருக்குக் கொடுக்கப்போகும் இன்பதுன்பங்களை ஞானிகள் தமது அனுபவத்திற்கு எட்டியவாறும், சரித்திர புராண, இதிகாச நாயகர்களின் வாழ்க்கையைக் கொண்டும் கணித்திருக்கிறார்கள். சோதிடம் ஒரு கணிதம். கணித முறைப்படி கணிதம் கற்பதைப் போன்று சோதிடமும் கணித முறைப்படி கணிக்கப்படுகிறது. இராகும் கேதுவும் சாயாக்கிரகங்கள். ஆதி காலத்தில் இவ்விரண்டு கிரகங்களும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஏழு கிரகங்களைக் கொண்டே சோதிடம் கணிக்கப்ட்டது. வராகமித்திரன் என்ற சோதிடர் 6000 வருடங்களுக்கு முன் எழுதிய 'பிரகத் ஜாதகம்' என்ற நூலில் ராகு கேதுக்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை. அதன் பின்பு தான் இராகு கேதுக்கள் சேர்க்கப்பட்டன. இக்கிரகங்கள் எந்த ராசியில் உள்ளனவோ

அல்லது எந்தக் கிரகத்தோடு கூடியுள்ளனவோ அக்கிரகங்களின் நகர்வைக் கொண்டுதான் பலாபலன்கள் கணிக்கப்படுகிறது.

ஒன்பது கிரகங்களைக்கொண்டு பலன்களைக் கணித்தபோதும் இறைவன் மனிதனுக்குக் கொடுத்த மூளையைக் கொண்டு இவற்றின் பலன்களைக் கட்டுப்படுத்தலாம். இறைவன் மனிதனுக்குச் சகல வல்லமைகளையும் கொடுத்துள்ளான். அவன் கொடுத்த மூளையால் எதையும் நன்கு ஆய்வு செய்து பலாபலன்களை உணர்ந்து செயற்பட்டால் மனிதனுக்குத் துன்பமே வராது. கடவுள் பக்தியும், ஒழுக்கமான வாழ்வும் தான தர்மங்களும் கிரகங்களின் தாக்கத்தைப் படிப்படியாகக் குறைத்து இல்லாமல் செய்யும்.

மனிதனுக்குப் பகைவர்கள் பலர் இருக்கிறார்கள். அது போல நண்பர்களும் இருக்கிறார்கள். பகைவனோடு பகைத்தால் கேடு உண்டாகும். நண்பர்களோடு முரண்பட்டால் தீமை ஏற்படாவிட்டாலும் நன்மை கிடைக்காது. இது போன்றது தான் கிரக நிலையும். கிரகங்கள் பகைக்கும் போது அவற்றைப் பிரீதிப்படுத்தல் வேண்டும். அப்படிப் பிரீதிப்படுத்தினால் தீமைகள் குறையும். எதிரியை எதிரியாக நினைக்காது அன்பு காட்டினால் அவன் நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யான். பட்டணத்தில் பலர் வர்த்தக நிலையங்களை வைத்திருக்கின்றனர். ஒரே பொருளை ஒரே விலையில் எல்லோரும் விற்றாலும் ஒரு சிலரின் கடைகளில் தான் வியாபாரம் ஓகோவென்று நடக்கிறது. இதற்குக் காரணம் அவர்களது கிரக நிலை, ஒருவரின் சாதகத்தில் சந்தினுக்கு 6,7,8 ஆம் வீடுகளில் சுபக்கிரகங்களான குரு, புதன், சுக்கிரன் ஒன்றாகவோ தனித்தனியாகவோ இருந்தால் பணம் கொட்டும். இது போலச் சந்திரனுக்கு 8ஆம் அல்லது 12ஆம் வீட்டில் குரு இருந்தால் பெருங்கஷ்டங்கள் ஏற்படும். குருவுடன் ராகு,கேது அல்லது சனி சேர்ந்திருந்தால் சாதகன் மதப்பற்றில்லாதவனாக இருப்பான். இவர்களது கிரகங்களின் சேர்க்கையே பலன்களைக் கொடுக்கிறது.

நான் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் அதிபராக 16 ஆண்டுகள் கடமையாற்றிய பின் நல்லூர்க் கோட்டக்கல்விப் பணிப்பாளராகப் பதவி ஏற்று ஓய்வு பெற்ற பின் நான் வீணாக நாவலர் தமிழ் வித்தியாலயத்தில்

கடமையாற்றியுள்ளேன் என்று துன்பப்படுவதுண்டு. ஆனால் அக்காலத்தில் அருமையான இனிய அனுபவங்களைப் பெற்றேன். அவை தான் இன்றும் என் மனதை இனிக்கப்பண்ணுகின்றன. அதுவும் விதிதான் எனது நூல்கள் தமிழ்நாட்டு ஆதீனங்களாலும், பல்கலைக் கழகங்களாலும் சிறப்பானவை என்று கூறப்பட்ட போதும் இலங்கையில் எந்த விருதோ பட்டமோ கிடைக்கவில்லை. இங்கு தமக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் தான் விருதுகள் பட்டங்கள் கொடுக்கிறார்கள். அதுவும் விதிதான்.

1872ஆம் ஆண்டு ஆறுமுகநாவலர் பருத்தித்துறை வீதியால் வடமராட்சிக்குச் சென்று வந்தபோது கோப்பாயில் சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாது வீதிகளில் அலைந்து திரிவதைக் கண்டு மனம்வருந்தி ஒரு பாடசாலையை அமைத்தார். அப்பாடசாலையைப் பற்றிய தகவல்கள் எதையும் ஆதாரபூர்வமாக அறியமுடியவில்லை. எனது பாட்டனார் 1900 ஆம் ஆண்டளவில் நாவலர் வித்தியாலயத்தில் கல்வி கற்றவர். எனது தந்தையாரும் தாயாரும் நாவலர் வித்தியாலயத்திலேயே கல்வி கற்றனர். நானும் கல்வி கற்றேன். அதன்பின் 1989ஆம் ஆண்டு அதிபராக அவ் வித்தியாலயத்தில் கடமையேற்றேன். ஆனால் அதற்கு முன்னைய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. அதைவிட நான் நாவலர் வித்தியாலத்தைப் பற்றிக்கேள்விப்பட்டவற்றை எனது நூல்களில் எழுதியுள்ளேன். அத்துடன் நாவலரின் சிலையைப் பாடசாலையில் அமைத்துள்ளேன்.

நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் எனது சேவைக் காலத்தில் புகழ்பூத்த ஆசிரியையாக இருந்தவர் திருமதி..ஜெயமணி சற்குணபாலன். பெயருக்கேற்றது போல எந்தக் கருமத்தைக் கொடுத்தாலும் வெற்றியடையச் செய்பவர். அத்துடன் சகல நற்குணங்களையும் கொண்ட குழந்தை மனம் கொண்டவர். சங்கீதம், நடனம், நாடகம். உடற்பயிற்சி, விஞ்ஞானம் போன்ற துறைகளில் மாணவர்களைப் பயிற்றுவித்து கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் அகில இலங்கை ரீதியில் பரிசுகள் பெற வைத்தவர். ஊனுறக்கம் இல்லாது, இரவு பகல் பாராது தன்னைப் பாடசாலைக்கு அர்ப்பணித்தவர். இவரைப் போன்றதொரு ஆசிரியரைக் காணமுடியாது. சகலகலா வல்லவரான அவர் என்னோடு 01.10.1989 ஆம் ஆண்டு

நாவலர் தமிழ் வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று வந்து 02.12.2013 ஆம் ஆண்டு ஓய்வு பெறுகிறார். முயற்சியும், சேவை மனப்பாங்கும், அன்பும், மகிழ்ச்சியும், பிறர்க்குதவும் பண்புகளும் கொண்ட அவரின் எதிர்காலம் சிறப்புக்கள் மிகுந்ததாக இருக்கும்.

இந்நூல் ஒரு மனிதனின் வாழ்நாட் பலன் முழுவதையும் கூறுகிறது. அப்பலனை எப்படி அறிந்து கொள்வதென்றும் கூறப்பட்டுள்ளது. இதன்படி ஒருவன் தனதும் தனது குடும்பத்தினதும் வாழ்நாளில் நடைபெறும் பலன்களை அறிய முடியும். இந்நூலை கணனி மயப்படுத்தி தந்த திருமதி. கௌசலா நாகராஜனுக்கும் இந்நூலை உலகெங்கும் விற்பனை செய்து தரும் லங்கா புத்தகசாலை உரிமையாளர் திரு.கந்தசாமி ராஜேந்திரன் அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன். எனது நூல்களை www.gunasegaram.com என்ற இணையத்தள முகவரியில் பார்வையிடலாம். எனது நூல்கள் அனைத்தையும் லங்கா புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**குணம் பதிப்பகம்,** **கே.வி. குணசேகரம்**
**பிள்ளையார் கோவிலடி,** **கோட்டக்கல்விப்**
**பணிப்பாளர்**
**கோப்பாய் மத்தி, கோப்பாய்,**
**(ஓய்வு நிலை)**
**ஸ்ரீலங்கா.**

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்
23 - ஆவது குரு மகா சன்னிதானம்
**சீர் வளர் சீர் சிவப்பிரகாச தேசிக**
**பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்**

திருவாவடுதுறை - 609 803
நாகை மாவட்டம்
**தொலைபேசி எண்: 04364 - 232021**

நாள்: 7.7.2010

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க

இலங்கைத் தமிழறிஞராகிய திருவாளர் கே.வி. குணசேகரம் அவர்கள் திருவருட்பயன் சாத்திரம் குறித்தும். மாயை குறித்தும் கதைகளுடன் கூடிய விளக்கங்கள் தந்து நூல்கள் வெளியிட்டிருப்பது கண்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

அரிய தத்துவக் கருத்துக்களை கதைகள் மூலமாக விளக்கி எளிதாக்குவதும், மனதில் நிலையாகத் தங்கிட வழிவகுப்பதும் பாராட்டுக்குரிய முயற்சி. பல இடங்களில் கதைகளும், கருத்துக்களும் பொருத்தமுற அமைந்துள்ளன. நுட்பமான தத்துவங்களைப் படிப்படியாக விளக்கித் தெளிவாக்குவதில் நூலாசிரியர் திறமை மிக்கவராக விளங்குகிறார். மேலும் ஆராய்ந்து துணிய வேண்டிய செய்திகளும் உள்ளன.இலங்கைத் தமிழறிஞர் திருவாளர் கே.வி. குணசேகரம் அவர்களின் சைவத் தமிழ்ப்பணிகள் மேன்மேலும் சிறந்து தழைக்க வேண்டுமென நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களை சிந்தித்து வாழ்த்துகிறோம்.

**இணைப்பு:** திருநீற்றுச் செல்வம்.

சீர்வளசீர் சிவப்பிரகாச தேசியக பரமாச்சாரிய சுவாமிகள்
திருவாவடுதுறை ஆதினம்.

| | | | |
|---|---|---|---|
| மீனம்<br>பூரட்டாதி 4ம் பாதம்<br>உத்திரட்டாதி<br>ரேவதி | மேஷம்<br>அச்சுவினி<br>பரணி<br>கார்த்திகை 1ம் பாதம் | ரிஷபம்<br>கார்த்திகை 2,3,4ம் பாதம்<br>ரோகிணி<br>மிருகசீரிடம் 1,2ம் பாதம் | மிதுனம்<br>மிருகசீருடம் 3, 4ம் பாதம்<br>திருவாதிரை<br>புனர்பூசம் 1,2,3ம் பாதம் |
| கும்பம்<br>அவிட்டம் 3,4ம் பாதம்<br>சதயம்<br>பூரட்டாதி 1,2,3ம் பாதம; | **ராசி மண்டலம்** | | கடகம்<br>புனர்பூசம் 4ம் பாதம்<br>பூசம்<br>ஆயில்யம் |
| மகரம்<br>உத்திராடம் 2,3,4ம் பாதம்<br>திருவோணம்<br>அவிட்டம் 1,2ம் பாதம் | | | சிம்மம்<br>மகம்<br>பூரம்<br>உத்தரம் 1ம் பாதம் |
| தனுசு<br>மூலம்<br>பூராடம்<br>உத்திராடம் 1ம் பாதம் | விருச்சிகம்<br>விசாகம் 4ம் பாதம்<br>அனு‘ம்<br>கேட்டை | துலாம்<br>சித்திரை 3,4ம் பாதம்<br>சுவாதி<br>விசாகம் 1,2,3ம் பாதம் | கன்னி<br>உத்தரம் 2,3,4ம் பாதம்<br>அத்தம்<br>சித்திரை 1,2ம் பாதம; |

**ராசிகள் - 12**

1. மே‘ம்
2. ரி‘பம்
3. மிதுனம்
4. கடகம்
5. சிம்மம்
6. கன்னி
7. துலாம்
8. விருச்சிகம்
9. தனுசு
10. மகரம்
11. கும்பம்
12. மீனம்

**நட்சத்திரங்களை; - 27**

1. அஸ்வினி
2. பரணி
3. கார்த்திகை
4. ரோகிணி
15. சுவாதி
16. விசாகம்
17. அனு‘ம்
18. கேட்டை

5. மிருகசீரிடம்
6. திருவாதிரை
7. புனர்பூசம்
8. பூசம்
9. ஆயில்யம்
10. மகம்
11. பூரம்
12. உத்தரம்
13. அத்தம்
14. சித்திரை
19. மூலம்
20. பூராடம்
21. உத்திராடம்
22. திருவோணம்
23. அவிட்டம்
24. சதயம்
25. பூரட்டாதி
26. உத்திரட்டாதி
27. ரேவதி

**கிரகங்களின் தத்துவங்கள்**

சூரியன், செவ்வாய், குரு – ஆண்கிரகங்கள்
சந்திரன், சுக்ரன், ராகு - பெண் கிரகங்கள்
புதன், சனி, கேது - அலிக்கிரகங்கள்

**கிரஹங்களின் ரத்தினங்கள்**

| | | |
|---|---|---|
| சூரியன் | - | மாணிக்கம் |
| சந்திரன் | - | முத்து |
| செவ்வாய் | - | பவளம் |
| புதன் | - | பச்சை |
| குரு | - | புஷ்பராகம் |
| சுக்ரன் | - | வைரம் |
| சனி | - | நீலம் |
| ராகு | - | கோமேதகம் |
| கேது | - | வைடூர்யம் |

**கிரகங்களின் தூபதீபம்**

| | |
|---|---|
| சூரியன் | -சந்தணம் |
| சந்திரன் | - சாம்பிராணி |
| செவ்வாய் | - குங்கிலியம் |
| புதன் | - கற்பூரம் |
| குரு | - ஆம்பல் |
| சுக்ரன் | - லவங்கம் |
| சனி | - கருங்காலி |
| ராகு | - கடுகு |
| கேது | - செம்மரம் |

**கிரகங்களின் வாகனங்கள்**

| | |
|---|---|
| சூரியன் | - மயில்,தேர் |
| சந்திரன் | - முத்து, விமானம் |
| செவ்வாய் | - அன்னம் செம்போத்து,சேவல் |
| புதன் | - குதிரை, நரி |
| குரு | - யானை |
| சுக்ரன் | - கருடன், குதிரை, மாடு, விமானம் |
| சனி | - காக்கை, எருமை |
| ராகு | - ஆடு |
| கேது | - சிம்மம் |

## கிரக மறைவு ஸ்தானங்கள்

சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது – லக்னத்துக்கு 8, 12ல் இருந்தால் மறைவு.
சந்திரன், புதன், குரு – லக்னத்துக்கு 3,6,8,12ல் இருந்தால் மறைவு

## கிரகங்கள் ராசியில் சஞ்சரிக்கும் கால அளவுகள்

சூரியன் ஒவ்வொரு ராசியிலும் 1 மாதம் சஞ்சரிப்பான்.
சந்திரன் ஒவ்வொரு ராசியிலும் 2 ¼ நாள் சஞ்சரிப்பான்.
செவ்வாய் ஒவ்வொரு ராசியிலும் 1 ½ மாதங்கள் சஞ்சரிப்பான்

புதன் ஒவ்வொரு ராசியிலும் 1 மாதம் சஞ்சரிப்பான்.
குரு ஒவ்வொரு ராசியிலும் 1 வருடம் சஞ்சரிப்பான்.
சனி ஒவ்வொரு ராசியிலும் 2 ½ வருடங்கள் சஞ்சரிப்பான்.
ராகு ஒவ்வொரு ராசியிலும் 1 ½ வருடங்கள் சஞ்சரிப்பான்.
கேது ஒவ்வொரு ராசியிலும் 1 ½ வருடங்கள் சஞ்சரிப்பான்.
சுக்ரன் ஒவ்வொரு ராசியிலும் 1 மாதம் சஞ்சரிப்பான்.
**(வக்ரம், அதிசாரம், ஸ்தம்பனம் காரணமாக ராசியில் சஞ்சார கால அளவுகள் மாறும்)**

## கிரகங்களின் ஆட்சி, உச்சம், நீசம், மூலதிரிகோணம்

| கிரகம் | ஆட்சி | உச்சம் | நீசம் | மூலதிரிகோணம் |
|---|---|---|---|---|
| சூரியன் | சிம்மம் | மே‘ம் | துலாம் | சிம்மம் |
| சந்திரன் | கடகம் | ரி‘பம் | விருச்சிகம் | ரி‘பம் |
| செவ்வாய் | மேடம், விருச்சிகம் | மகரம் | கடகம் | மே‘ம் |
| புதன் | மிதுனம், கன்னி | கன்னி | மீனம் | கன்னி |
| குரு | தனுசு, மீனம் | கடகம் | மகரம் | தனுசு |
| சுக்ரன் | ரி‘பம், துலாம் | மீனம் | கன்னி | துலாம் |
| சனி | மகரம், கும்பம் | துலாம் | மே‘ம் | கும்பம் |
| ராகு | கன்னி | ரி‘பம் | விருச்சிகம் | ரிபம் |
| கேது | மீனம் | விருச்சிகம் | ரி‘பம் | விருச்சிகம் |

## கிரகங்களின் நட்பு வீடுகள்

| | | |
|---|---|---|
| சூரியன் | - | விருச்சிகம், தனுசு, கடகம், மீனம் |
| சந்திரன் | - | மிதுனம், சிம்மம், கன்னி |
| செவ்வாய் | - | சிம்மம், தனுசு, மீனம் |
| புதன் | - | ரி'பம், சிம்மம், துலாம் |
| குரு | - | மே'ம், சிம்மம், கன்னி, விருச்சிகம் |
| சுக்ரன் | - | மிதுனம், தனுசு, மகரம், கும்பம் |
| சனி | - | ரி'பம், மிதுனம் |
| ராகு,கேது | - | மிதுனம்,கன்னி,துலாம்,தனுசு,மகரம்,மீனம் |

## கிரகங்களின் பகை வீடுகள்

| | | |
|---|---|---|
| சூரியன் | - | ரி'பம், மகரம், கும்பம் |
| செவ்வாய் | - | மிதுனம், கன்னி |
| புதன் | - | கடகம், விருச்சிகம் |
| குரு | - | ரி'பம், மிதுனம், துலாம் |
| சுக்ரன் | - | கடகம், சிம்மம், தனுசு |
| சனி | - | கடகம், சிம்மம், விருச்சிகம் |
| ராகு,கேது | - | கடகம், சிம்மம் |
| சந்திரன் | - | எல்லா வீடுகளும் நட்பு (பகை கிடையாது) |

## கிரகங்களின் பார்வை

எல்லா கிரகங்களும் தான் இருக்கும் இடத்திலிருந்து 7 வது வீட்டைப் பார்ப்பார்கள்.

செவ்வாய், தான் இருக்கும் இடத்திலிருந்து 4,7,8 ஆம் வீடுகளைப் பார்க்கும் தன்மை உண்டு. (4உம், 8உம் விசே'ப் பார்வை)

குரு, தான் இருக்கும் இடத்திலிருந்து 5,7,9ஆம் வீடுகளைப் பார்ப்பார் (5உம்,9உம் விசே'ப் பார்வை)

சனி, தான் இருக்கும் இடத்திலிருந்து3,7,10 ஆகிய வீடுகளைப் பார்ப்பார்கள். (3ம்,10ம் விசே'ப் பார்வை)

## கிரகங்களின் மார்க்கம்

சூரியன், சந்திரன், செவ்வாய், குரு, சனி, புதன், சுக்ரன் ஆகிய 7கிரகங்களும் ராசியைப் பிரதஷிணமாகச் சுற்றி வருவார்கள். (Clockwise)

ராகுவும், கேதுவும் எதிர்ப்புறமாகச் சஞ்சாரம் செய்வார்கள் (Anti – Clockwise)

## அடுத்த ராசிகளின் பார்வை

கிரகங்கள் ஒரு இராசியில் சஞ்சரித்தபின் அடுத்த ராசிக்கு மாறுவார்கள். அப்படி மாறுமுன் அடுத்த ராசிக்குரிய பலனைச் சாதகர்களுக்குக் கொடுக்கத் தொடங்குவர்.

சூரியன் - 5 நாட்களுக்கு முன்பும்,

புதன்,சுக்கிரன் - 7 நாட்களுக்கு முன்பும்

செவ்வாய் - 8 நாட்களுக்கு முன்பும்

குரு - 2 மாதங்களுக்கு முன்பும்

ராகு,கேது - 3 மாதங்களுக்கு முன்பும்

சனி - 6 மாதங்களுக்கு முன்பும் பலன் கொடுக்கத் தொடங்குவர்.

## புத்தி, அந்தரம்

சாதகருக்கு ஒரு தசை நடக்கும் போது ஒன்பது கிரகங்களும் தனித்தனியாகப் பலன் தருவார்கள். இதைக் கிரகங்களின் தசை, புத்தி விபரம் என்பார்கள்.

### தசை

தசை என்பது மனிதனின் வாழ்நாளில் கிரகங்கள் ஆட்சி செலுத்தும் கால அளவாகும். தீர்க்காயுள் உடைய ஒருவர் 120 வருடங்கள் வாழ்வானென்று சோதிட நூல்களும், வேதங்களும் கூறுகின்றன. இந்த 120 வருட வாழ்வில் ஒன்பது கிரகங்களும் வரிசைக் கிரமமாகப் பலன் கொடுக்கும். ,ருந்தபோதும் இக்கிரகங்கள் சோதிட விதிகளுக்கேற்பவே கால அளவைக் கொண்டிருக்கும்.

## கிரகங்கள் ஆட்சி செலுத்தும் கால அளவு

| | கிரகம் | வருடங்கள் |
|---|---|---|
| 1 | கேது | 07 |
| 2 | சுக்கிரன் | 20 |
| 3 | சூரியன் | 06 |
| 4 | சந்திரன் | 10 |
| 5 | செவ்வாய் | 07 |

| | | |
|---|---|---|
| 6 | ராகு | 18 |
| 7 | குரு | 16 |
| 8 | சனி | 19 |
| 9 | புதன் | 17 |

## முதல் தசை

ஜாதகனுடைய பிறந்த நட்சத்திரத்தை வைத்து முதல் தசை கணக்கிடப்படும். ஒருவர் திருகோண நட்சத்திரத்தில் பிறந்தால் சந்திர தசை ஆரம்பமாகும். அது போல ஆயிலிய நட்சத்திரத்தில் பிறந்தால் புதன் தசை ஆரம்பமாகும். அதன் பின்மேலுள்ள வரிசைப்படி தசை தொடங்கும். திருகோணத்தில் பிறந்தவருக்கு சந்திர தசை முடியச் செவ்வாய் தசை ஆரம்பமாகும். அதன்பின் ராகு தசை ஆரம்பமாகும். பின் வரிசைக்கிரமப்படி செல்லும்.

## தசையை அறியும் விதம்

27 நட்சத்திரங்களையும் சோதிட நூலாசிரியர்கள் ஒன்பது பிரிவுக்குள்அதாவது ஒன்பதுகிரகங்களுக்குள் அடக்கியுள்ளனர். இது வரிசைக்கிரமப்படி பிரித்ததல்ல. வரிசையாக ஒன்பது கிரங்களுக்கும் நட்சத்திரங்களைக் கொடுத்துப் பின் பத்தாவது நட்சத்திரத்தை முதலாவது கிரகத்திற்குக் கொடுத்துள்ளனர்.

**அதன் விபரம் இது:**

| | **நட்சத்திரங்கள்** | **தசை** |
|---|---|---|
| 1 | அச்சுவினி,மகம், மூலம் | கேது |
| 2 | பரணி,பூரம்,பூராடம், | சுக்கிரன் |
| 3 | கார்த்திகை,உத்திரம்,உத்தராடம் | சூரியன் |
| 4 | ரோகினி,அத்தம்,திருவோணம் | சந்திரன் |
| 5 | மிருகசீரிடம்,சித்திரை,அவிட்டம் | செவ்வாய் |
| 6 | திருவாதிரை,சுவாதி,சதயம் | ராகு |
| 7 | புனர்பூசம்,விசாகம்,பூரட்டாதி, | குரு |
| 8 | பூசம்,அனுசம்,உத்தரட்டாதி, | சனி |
| 9 | ஆயிலியம்,கேட்டை,ரேவதி | புதன் |

அச்சுவினி,மகம்,மூலம், ஆகிய நட்சத்திரங்களில் பிறந்த சாதகருக்கு கேது தசை ஆரம்பமாகிறது. இவ்விதம் அடுத்ததடுத்த நட்சத்திரக்கூட்டங்களில் பிறந்தவர்களுக்கு அந்த நட்சத்திரக் கூட்டத்திற்குரிய கிரகத்தின் தசை ஆரம்பமாகும். இத்தசை ஆரம்பமானால் அத்தசைக்குரிய முழுக்காலத்திற்கும் இருக்கமாட்டாது. திருகோணத்தில் பிறந்த ஒருவர் சந்திர தசையில் உள்ள பத்து வருடங்களையும் அனுபவிக்க முடியாது. ஏனெனில் திருகோண நட்சத்திரத்தில் பிறப்பவர் அந்த நட்சத்திரம் ஆரம்பமான முதல் விநாடியிலேயே பிறந்தால் தான் முழுப்பலனையும் அனுபவிப்பார். இது பெரும்பாலும் நடைபெறுவது இல்லை. நட்சத்திரம் ஆரம்பமான பின் 60 நாழிகைகள் உள்ள நாளில் 30 நாழிகை கழித்துப் பிறந்தால் அவனது தசைக்காலம் அரைவாசி குறைவடையும். இதன்படி அவன் சந்திர தசையை ஐந்து வருடங்களே அனுபவிப்பான். அதன் பின் செவ்வாய் தசையும், அதன் பின் ராகு தசையையும் அனுபவிப்பான். இதற்கு ஜனன கால தசாசே'ம் என்று பெயர். தசையைக் கணிக்கும் போது சாதகரின் சாதகத்தைப் பார்த்து சந்திர மகாதசையில் கெர்ப்ப காலம் நீங்கி இருப்புக் காலம் பற்றி அறிந்த பின்பே கணித்தல் வேண்டும்.

1949 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 25 ஆம் திகதி இரவு 12 மணி 18 நிமிடத்தில் பிறந்த ஒருவரின் புத்தி விபரம். இவர் இரவு 12மணி 18 நிமிடத்தில் திருவோண நட்சத்திரம் 2 ஆம் பாதத்தில் பிறந்தால் சத்திர திசையில் பிறந்துள்ளார். அதில் கர்ப்பகால இருப்பு நீக்கி இருப்பு 5 வருடங்கள் 2 மாதங்கள் 22 நாட்கள். இவரது தசை புத்தி பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| சந்திர தசை | 5 | .2 | 22 |
| செவ்வாய் தசை | 7. | 0 | 00 |
| ராகு தசை | 18. | 0. | 00 |
| குரு தசை | 16. | 0. | 00 |
| சனி தசை | 19. | 0. | 00 |
| | 65 . | 2. | 22 |

இச்சாதகருக்கு 46 வயதில் இருந்து 65 வயது வரை சனி தசை நடைபெறுகிறது. அதன் விபரம் முன் தரப்பட்டுள்ளது. 25.03.1949 – 14.06.2014 சனி தசையின் பின் 17 வருடங்கள் புதன் தசை நடைபெறும். அதன் விபரம், இது

| | |
|---|---|
| புதன் தசை | 65.02.22 |
| புதன் தசை முடிவு | 17.00.00 |
| | 82.02.22 |

17.06.2031 ஆம் ஆண்டு வரை புதன் தசை நடைபெறும். இந்தப் பதினோழு வருடங்களும் பின்வருமாறு அமையும்.

**புதன் தசை புத்தி விபரம்**

| | வருடம் | மாதம் | நாள் |
|---|---|---|---|
| புதன் புத்தி | 02. | 04 | 27 |
| கேது புத்தி | ~ | 11 | 27 |
| சுக்கிர புத்தி | 02 | 10 | 00 |
| சூரிய புத்தி | ~ | 10 | 06 |
| சந்திர புத்தி | 01 | 05 | ~ |
| செவ்வாய் புத்தி | | 11 | 27 |
| ராகு புத்தி | 02 | 06 | 18 |
| குரு புத்தி | 02 | 03 | 06 |
| சனி புத்தி | 02 | 08 | 09 |
| | 17 | 00 | 00 |

இப் புத்தியில் நடைபெறும் பலன்களை தசா புத்திப் பலன் என்று குறிப்பிட்ட இடத்தில் அறிந்து கொள்ளவும் 1949 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 25 ஆம் திகதி இரவு 12 மணி 18 நிமிடத்தில் திருவோண நட்சத்திரம் 2ஆம் பாதத்தில் பிறந்தவரது சாதகம் இது.

| | | | |
|---|---|---|---|
| புதன்<br>சூரிய<br>சுக்,செ | ராகு | 6 | 7 |
| 3 | கிரக நிலை | | 8 |
| சந்<br>வியா | | | சனி |
| லக் | 12 | கேது | 10 |

| | | | |
|---|---|---|---|
| 10 | ராகு | சந்<br>சனி | லக் |
| வி | நவாம்ச<br>நிலை | | 2 |
| 8 | | | புதன்<br>சுக் |
| 7 | 6 | சூரியன்<br>செவ்<br>கேது | 4 |

## புத்தி

புத்தி என்பது தசையின் ஒரு பாகம். ஒரு தசைக்குள் மற்றைய கிரகங்கள் வரிசையாக வந்து சாதகருக்குப் பலன் கொடுக்கும் காலம் புத்தி எனப்படும். தசைஎந்தக் கிரகத்திற்கு உரியதோ அதன் புத்தி முதலில் ஆரம்பமாகும். உதாரணமாக சூரிய தசையின் பிறந்தவர்களுக்கு முதலில் சூரியபுத்தி ஆரம்பமாகிப் பின் சந்திரபுத்தி செவ்வாய் புத்தி என ஆரம்பித்துச் சுக்கிர புத்தியுடன் முடிவடையும். இதுபோலவே மற்றைய கிரகங்களின் தசைகளின் புத்திகள் நடைபெறும். தசையும் புத்தியும், கேது, சுக்கிரன், சூரியன், சந்திரன், செவ்வாய், ராகு, குரு, சனி, புதன் என்ற முறையில் வரிசையாக வரும்.

## புத்தியின் பலன்

ஒரு தசையில் சாதகனுக்குக் கெடுதலான பலன்மட்டும் நடைபெறாது. அது போல நன்மையான பலன் மட்டும் நடவாது. இரண்டும் கலந்தே நடைபெறும். உதாரணமாகச் சனிதசை,நடைபெறும் 19

வருடங்களும் நன்மையும் நடக்கும் தீமையும் நடக்கும். அது அவரவர் சாதகத்தைப் பொறுத்தது. அத்துடன் புத்திகளையும் பொறுத்தது, சனி தசையில் குருபுத்தி 2 வருடங்கள் 6 மாதங்கள் 12 நாட்கள் நடைபெறும். இக்காலத்தில் சாதகருக்கு நல்ல பலன்கள் பலவும் நடைபெறும். அடுத்து சனி தசையில் ராகு புத்தி நடக்கும். 2 வருடங்கள் 10 மாதங்கள் 06 நாட்களும் பெரும்பாலும் தீய பலன்களே நடைபெறும். இதனால் சாதகர் சனி தசையில் உள்ள 19 வருடங்களும் தீயபலன்கள் தான் நடைபெறும் என எண்ணக்கூடாது.

## தசா புத்திப் பலன்கள்

**சூரிய தசை 06 வருடங்கள்**

1) **சூரிய புத்தி 3 மாதம் 18 நாட்கள்**

பந்துக்களால் தீமை, கலகம், கர்பநாசம், மனச்சஞ்சலம், கொடுக்கல்வாங்கலில் பிணக்கு மனைவி பிள்ளைகளினால் துயரம், அலைச்சல், வேலைத்தளத்தில் முரண்பாடு, தொழிலில் நட்டம்.

2) **சந்திரபுத்தி 6 மாதங்கள்**

தொழிலால் அதிக வருமானம், மகிழ்ச்சி, குடும்பத்தில் குதூகலம், அரசமதிப்பு, பெண்களின் உறவால் துயரம், கண்நோய்

3) **செவ்வாய்புத்தி 4 மாதம் 06 நாட்கள்**

நோயால் அதிக செலவு, எதிரிகளால் தொல்லை, தொழிலால் நட்டம், வாகனம், தீயால் தீங்கு, நண்பர் விரோதம், குடும்பத்தில் கலகம், மேலதிகாரிகள் பகை.

4) **ராகுபுத்தி 10 மாதம் 24 நாட்கள்**

கடன்தொல்லை, கூட்டுத்தொழில் நாசம், குடும்ப விரோதம், எதிரிகளால் துன்பம், நல்ல உறவுகள் நீங்கல், ஆயுத பயம், சகோதரர்களால் தொல்லை, குடும்பப் பிரிவு

5) **குருபுத்தி 9 மாதம் 18 நாட்கள்**

கல்வியில் உயர்ச்சி, நண்பர்களால் உதவி, குடும்பத்தில் மகிழ்ச்சி, பணவரவு, சத்துரு ஜயம், உறவினர்களால் உதவி, காரியானுகூலம்.

6) **சனிபுத்தி 11 மாதம் 12 நாட்கள்**

பலவழிகளாலும் துன்பம், எதிரிகளின் தொல்லை அதிகரிப்பு, புத்திரரால் துன்பம், குடும்பப் பிரிவு, விஷபயம், நோய் அதிகரித்தல், தனிமைப்படல், வெறுப்பு.

7) **புதன் புத்தி 11 மாதம் 06 நாட்கள்**

இடமாற்றம், சுற்றத்தவர் பகை, குடும்பத்தில் கலகம், நிம்மதிக்குறைவு, வீண்பழி கேட்டல், நினைத்தவை நிறைவேறாமை. தொழிலில் நட்டம், கடன்படல்

8) **கேது புத்தி 4 மாதம் 06 நாட்கள்**

மறதி, வெறுப்பு, குடும்பப் பிரிவு, இடர்தரும் இடமாற்றம், மானக்கேடு, தொழிலால் நட்டம், மேலதிகாரிகளின் வெறுப்புக்குள்ளாதல், வாக்கு வாதம், மனமுறிவு.

9) **சுக்கிர புத்தி, ஒருவருடம்**

மனதுக்கினியவை நடத்தல், தொழிலில் விருத்தி, பணம் சேர்தல், திருமணம் நடைபெறல், வீடு கட்ட காணி வாங்க முயலுதல், நோய் நீங்குதல், சுபகாரியங்கள் நடத்தல்.

**02 சந்திர தசை 10 வருடங்கள்**

1) **சந்திரபுத்தி 10 மாதங்கள்**

நினைத்தவை கைகூடல், காதல் கனிவு, புகழ், கீர்த்தி, பணம் பெருகல், தொழில் விருத்தி, குடும்பத்தில் மகிழ்ச்சி, உறவினர் நண்பர் சேர்க்கை, கல்வியில் மேன்மை, தொழிலில் உயர்வு

2) **செவ்வாய் புத்தி 7 மாதம்**

வீண் விரோதம், முரண்படல், வழக்குகள் வருதல், பொருள் இழப்பு, துட்ட பெண்களின் சகவாசம், தொழிலில் நட்டம், மேலோர் சீற்றம்.

3) **ராகுபுத்தி 1 வருடம் 06 மாதங்கள்**

பொருள் இழப்பு, எதிரிகளால் தொல்லை, நோய் அதிகரித்தல், வீண் செலவு, பணமுடை குடும்பத்தவரால் செலவு, பெரியோர் பகை, மனக்குழப்பம், பிடிவாதப் போக்கு.

4) **குருபுத்தி, 1 வருடம் 04 மாதங்கள்**

எதிரிகள் வசப்படுதல், பொன் பொருள் சேர்க்கை, காணி பூமிவாங்குதல், வியாபாரத்தில் பெரும் இலாபம், பெரியோரின் உதவி. குடும்ப மகிழ்ச்சி, பதவி உயர்வு

5) **சனி புத்தி 1 வருடம் 7 மாதம்**

நோய்கள் அதிகரிப்பு, வீண் செலவு, பொருள் இழப்பு, எதிரிகளால் தொல்லை, தொழிலில் நட்டம், தூரதேசப் பயணம், வீண்பழி கேட்டல், அவதானக் குறைவு.

6) **புதன் புத்தி 1 வருடம் 5 மாதம்**

குடும்பத்தில் மகிழ்ச்சி, இனசனங்களால், புத்திரர்களால் மகிழ்ச்சி, உதவி, நினைத்தவை நடைபெறல், தொழில் விருத்தி, பெரியவர்களால் பாராட்டு, புகழ், கௌரவம் உயர்தல்.

7) **கேது புத்தி 07 மாதம்**

வாகன விபத்து, அக்கினி பீடை, நோய்கள் அதிகரிப்பு, நண்பரால் கேடு, அரச தண்டனை பெறல், தொழில் இழப்பு, புகழ் நாசம், கௌரவம் பாதிப்பு.

8) **சுக்கிரபுத்தி 1 வருடம் 08 மாதங்கள்**

நோயின் தாக்கம் அதிகரித்தல், நண்பர் பகை, தொழிலில் நட்டம், விருப்பமில்லாத இடமாற்றம், குடும்பத்தில் விரோதம், சகோதர வழியால் செலவு

9) **சூரிய புத்தி 06 மாதங்கள்**

இனம் தெரியாத நோய் வருத்தல், அதிக கோபம், கண், காது, இருதயத்தில் வியாதி உண்டாகுதல், மனக்குழப்பம், பெற்றோர் பகை, பெரியவர்களின் விரோதம்.

03) **செவ்வாய் தசை 07 வருடங்கள்**

1) **செவ்வாய் புத்தி 4 மாதம் 27 நாள்**

அடிமைப்படல், விலங்குகளால் ஆபத்து உண்டாதல், அரச பயம், வியாதி, குடும்பப் பிரச்சினைகளால் நிம்மதி இழப்பு, பகைவரின் வெறுப்பு அதிகரித்தல், ஆயுதத்தினால் காயம், வழக்கு உண்டாதல் என்பன நடைபெறும்.

2) **ராகுபுத்தி 1 வருடம் 18 நாள்**

விஷபயம், உறவினர்களால் தொல்லைகள், பகை உண்டாகுதல், நண்பர் விரோதம், தொழிலில் பாதிப்பு, இடமாற்றம், தோல் வியாதிகளால் அவதி, வாழ்க்கையில் வெறுப்பு உண்டாகுதல், மதிப்பை இழத்தல் ஆகியன நடைபெறும்.

3) **குருபுத்தி 11 மாதம் 6 நாள்**

வரவுக்கு மீறிய செலவு, கொடுக்கல் வாங்கலில் பொருள் இழப்பு, ஏமாற்றம், வழக்குண்டாதல், தொழிலில் பிரச்சினைகள் உருவாகுதல், பிற்பகுதியில் தொழிலால் செல்வம் சேரும் என்பன நடைபெறும்.

4) **சனி புத்தி 1 வருடம் 1 மாதம் 9 நாள்**

வீண் விரோதங்களால் தேவையற்ற சண்டை, மான இழப்பு, நோய்க்கான செலவுகள் அதிகரிப்பு, குடும்பக் கலகம், குடும்பப் பிரிவு,

பிள்ளைகளால் தொல்லை. வழக்கு, மனக்கிலேசம் என்பன உண்டாகும்.

5) **புதன்புத்தி 11 மாதம் 27 நாள்**

செல்வம் பெருகல், தொழிலில் பெரும் உயர்வு, உயர் பதவி பெறுதல், அழகிய பெண்களின் உறவு ஏற்படல், நோய் நீக்கம், குடும்பத்தில் மகிழ்வு, ஆபரணச்சேர்க்கை என்பன உண்டாகும்.

6) **கேது புத்தி 4 மாதம் 27 நாள்**

பெண்களால் துன்பம், குடும்பத்தில் குழப்பம், நோய் அதிகரிப்பு, வரவுக்கு மீறிய செலவு, பெற்றோர் வழியால் பொருள் செலவு, எதிரிகளால் துன்பம் உண்டாகுதல் என்பன உண்டாகும்.

7) **சுக்கிரபுத்தி 1 வருடம் 2 மாதங்கள்**

நினைத்தவை யாவும் நடைபெறுதல், பொருட்கள் சேர்தல், பெண்களால் பெரும் உதவிகள் கிடைத்தல், தெய்வ அனுக்கிரகம், பெரியோர்களின் உதவி, வாகனச் சேர்ககை, பகை விலகல் என்பன உண்டாகும்.

8) **சூரியபுத்தி, 4 மாதம் 6 நாள்**

நோய்கள் அதிகரிப்பு, மனதில் துக்கம் பெருகுதல், பிரயாணங்களின் போது பொருள் இழப்பு, விபத்துக்கள் உண்டாதல், பகை அதிகரித்தல் போன்றன உண்டாகும்.

9) **சந்திரபுத்தி 7 மாதங்கள்**

பூமி வாங்குதல், பூமியால் அதிக இலாபம் பெறல், ஆபரணங்கள் வாங்குதல், வீடு கட்டுதல், மனைவி கர்ப்பமடைதல், புதிய முயற்சி ஆரம்பித்தல், தல யாத்திரை செல்லல் என்பன நடைபெறும்.

**4 ராகு தசை 18 வருடங்கள்**

**1) ராகு புத்தி 2 வருடம் 8 மாதம் 12 நாள்**

மேலதிகாரிகள், பெரியவர்களுடன் பகை கொள்ளல், பொருள் இழப்பு,விஷத்தால்பீடை, குடும்பக் கஷ்டம், பிள்ளைகளுக்கு நோய் உண்டாதல், வழக்கால் செலவு, வீடுமாறுதல், தொழில் இழத்தல், சண்டைகள் உண்டாதல் என்பன நடைபெறும்.

2) **குருபுத்தி 2 வருடம் 4 மாதம் 24 நாள்**

பிரச்சினையில் இருந்து விடுபடல், பணமுடை தீர்த்தல், பெரியவர்கள் உதவி செய்தல், புகழ் கௌரவம், வருமானம் அதிகரித்தல் காரியம் கைகூடுதல் என்பன நடைபெறும்.

**3) சனிபுத்தி 2 வருடம் 10 மாதம் 6 நாள்**

முடிவு பெறாத துன்பம், வழக்கு உண்டாதல், குடும்பத்தில் குழப்பம்,எதிரிகளால் தீமைகள்உண்டாதல், பெரியோர்களைப் பகைத்தல், இடமாற்றம் உண்டாதல், நோயால் செலவு, பிள்ளைகளால் தொல்லை என்பன உண்டாகும்.

4) **புதன்புத்தி, 2 வருடம் 6 மாதம் 18 நாள்**

மேன்மை, தொழில் விருத்தி, முயற்சிகள் பலித்தல், வருமானம் அதிகரித்தல், பொருள், காணி பூமி சேர்தல், மகப்பேறு உண்டாதல், என்பவற்றோடு மேலதிகாரிகளின் வெறுப்பும் உண்டாகும். அவதானம் தேவை.

5) **கேது புத்தி 1 வருடம் 18 நாள்**

உணவு ஒத்துக்கொள்ளாமை, குடும்பத்தவர்களுக்கு நோய் உண்டாகுதல், அதனால் பணச்செலவும், பெண்களால் பொருள்

இழப்பும், கௌரவக் குறைவும், இருப்பிட மாற்றமும் விரோதமும் உண்டாகும்.

6) **சுக்கிரபுத்தி 3 வருடம்**

பொன் பொருள் பூமி சேர்தலும், அலங்காரமான மனை அமைத்தலும், ஆபரணங்கள் வாங்குதலும் பெரியவர்களின் உதவியும், நினைத்த காரியச் சித்தியும், மன மகிழ்வும் பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உண்டாகும்.

7) **சூரியபுத்தி 10 மாதம் 24 நாள்**

நண்பர், பெரியவர்கள், குடும்பத்தினருடன் விரோதமும் மனக்குழப்பமும், வாழ்வில் விரக்தியும், மனைவியுடன் வீண் சண்டையிடுதலும், அதனால் பகையும் கௌரவக் குறைவும், பொருள் இழப்பும் உண்டாகும்.

8) **சந்திரபுத்தி 1 வருடம் 6 மாதம்**

பெரியவர்களின் பகையும் இனசன பந்துக்களின் விரோதமும், பொருள் இழப்பும், பிள்ளைகளால் துன்பமும், நோய்கள் அதிகரித்தலும், விசத்தாலும் விபத்தாலும் துன்பமும் ஏற்படும்.

9) **செவ்வாய் புத்தி 1வருடம் 18 நாள்**

பொருள் இழப்பும், பெரியவர்களால் துன்பமும், பெற்றோர் பிள்ளைகளால் செலவும், ஆபரணங்கள், பூமி, வாகனம் என்பவற்றை விற்கவும், பிறரிடம் அளவுக்கதிகமான கடன் பெறும் நிலையும் உண்டாகும்.

## குரு தசை 16 வருடங்கள்

1) **குருபுத்தி 2 வருடம் 1 மாதம் 18 நாள்**

உயர்ந்த பதவி கிடைத்தல், பெரும் பொருள் சேர்க்கை, விவசாய உற்பத்தி அதிகரிப்பு, பெண்கள் உதவி, கடன் வசூலாதல், வழக்குகளில் வெற்றி, மதிப்பு உயரல், அரச உதவிகள் கிடைத்தல் என்பன நடைபெறும்

2) **சனி புத்தி 2 வருடம் 6 மாதம் 18 நாள்**

வாகனம், பூமி, ஆபரணங்கள் கொள்வனவால் நன்மை, நோய் நீக்கம், பெண்களால் துன்பம், குடும்பத்தின் மீது சந்தேகம் கொள்ளல், இடையிடையே துன்பங்கள் வந்து நீங்குதலும் இடம் பெறும்.

3) **புதன் புத்தி 2 வருடம் 3 மாதம் 6 நாள்**

கலைஞர்களுக்கு மதிப்பு,புகழ், வருமானம் அதிகரிக்கும். செல்வந்தர்களின் தொடர்பால் நன்மை உண்டாகுதலும், பொருள் சேர்க்கையும், பெண்களின் சேர்க்கையால் பொருள் வரவும் உண்டாகும்.

4) **கேது புத்தி 11மாதம் 6 நாள்**

மனைவியின் உடல் நலம் பாதிக்கப்படும். அதனால் செலவுகள் உண்டாகும். வருமானக் குறைவும், உற்றார் உறவினர்களின் தொல்லைகளும், அலைச்சலும், இடமாற்றங்களும், குடும்பக் கஷ்டங்களும் உண்டாகும்.

5) **சுக்கிரபுத்தி 2 வருடம் 8 மாதம்**

உறவினர் நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். பூமியால் வரும் வருமானம் அதிகரிக்கும். செய்தொழில் விருத்தியாகும். சுபச் செலவுகள் உண்டாகும். பொன் பொருட்சேர்க்கை, மனதிற்கினிய சம்பவங்கள் பலவும் உண்டாகும்.

6) **சூரியபுத்தி 9 மாதம் 18 நாள்**

ஆரம்பத்தில் தொழில் விருத்தியும், நினைத்த காரியம் கைகூடுதலும் நடைபெறும். பிற்பகுதியில் ஏமாற்றம், தொழில் கஷ்டம், வருமானக் குறைவு ஏற்படும். சூரிய புத்தியின் முடிவுப் பகுதியில் இவை நீங்கி இன்பம் உண்டாகும்.

7) **சந்திரபுத்தி 1வருடம் 4 மாதம்**

பொன், பொருள், ஆடை ஆபரணச் சேர்க்கை, மதிப்பு, புகழ், கௌரவம் உயர்தல், அலங்கார மனை அமைத்தல், நினைத்தவை நிறைவேறல் போன்றன நடைபெறும்.

8) **செவ்வாய் புத்தி 11 மாதம் 4 நாள்**

பல்வேறு விதமான துன்பங்கள் வரல், பகைவர்களாலும் திருடர்களாலும் பொருள் நஷ்டம். நோய் உண்டாகுதல், வசதியற்ற இடமாற்றம், நினைத்தவை தடைப்படல் என்பன இடம்பெறும்.

9) **ராகுபுத்தி 2 வருடம் 4 மாதம் 24 நாள்**

பகைவர்களால் பெருந்தொல்லை. வழக்குகளால் அவமானம், பொருள் இழப்பு, மனைவியோடும், உறவினரோடும் விரோதம், குடும்பத்தில் கஷ்டம் என்பன இடம்பெறும்.

### சனி தசை 19 வருடங்கள்

1) **சனிபுத்தி 3 வருடங்கள் 2 நாள்**

நோய் அதிகரித்தல், சுற்றத்தார், நண்பர் பகையாதல், பணத்தட்டுப்பாடு,காணி, ஆபரணங்கள் விற்றல், குடும்பத்தில் கலகம் என்பன இடம்பெறும்

2) **புதன்புத்தி 2 வருடம் 2 மாதம் 9 நாள்**

செல்வம் சேரும், கல்வி விருத்தியாகும், பதவி உயர்வு கிடைக்கும். வீடு கட்டல், ஆபரணம் சேரல், அரசால் புகழ், வருமானம், என்பன கிட்டும்.

3) **கேது புத்தி 1 வருடம் 1 மாதம் 9 நாள்**

வாதரோகம் தாக்கும், புத்திரர்களால் துன்பமும் பொருள் இழப்பும் உண்டாகும். நண்பர் பகைவராவர், வேண்டாத செயல்களால் துன்பம் என்பன உண்டாகும்.

4) **சுக்கிரபுத்தி 3 வருடம் 2 மாதம்**

வருமானம் வரும் முயற்சிகள் பலிக்கும். நல்லவர்களின் நட்பும், தனவந்தர்களின் நட்பும், தனவந்தர்களின் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும், உறவினர்களால் உதவியும் கிடைக்கும்.

5) **சூரியபுத்தி 11 மாதம் 12 நாள்**

நோய் காரணமாகப் பணச்செலவு உண்டாகும். வயிறு, கண், காது, நோய், வரும். குடும்பத்தினருக்கு நோய் உண்டாகும். அதனால் பொருட் செலவு ஏற்படும்.

6) **சந்திரபுத்தி 1 வருடம் 7 மாதம்**

பிரச்சினைகள், சண்டை சச்சரவுகள் தனாகத் தேடி வரும். வழக்கில் பொருட்சேதம் உண்டாகும். திருடர் பயம் உண்டு. சேர்த்து வைத்த பொருட்கள் செலவாகும்.

7) **செவ்வாய் புத்தி 1வருடம் 1 மாதம் 9 நாள்**

நிம்மதியின்மையும்,மனக்கிலேசமும் பகையால் உண்டாகும். பலரையும் பகைக்க வேண்டிய நிலை உண்டாகும். அவமானம், பொருட்செலவு, நோய்களின்தாக்கம், பிள்ளை களால் துன்பம் என்பன உண்டாகும்.

8) **ராகுபுத்தி 2 வருடம் 10 மாதம் 9 நாள்**

விஷபயம்,ஏமாற்றப்படுதல், நோய்வாய்ப்படல், பணக்கஷ்டம், தூரதேச வாசம், உறவினரால் தொல்லை, தொழிலில் வருமானமின்மை என்பன உண்டாகும்.

9) **குருபுத்தி 2 வருடம் 6 மாதம் 12 நாள்**

அயலவர், நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். பதவி உயர்வு, வேதன உயர்வு என்பன உண்டாகும். நீண்ட நாள் கனவு பலிக்கும். அரச உதவிகள் தாராளமாகக் கிடைக்கும், மதிப்பு, புகழ், வருமானம் என்பன அதிகரிக்கும்.

## புதன் தசை 17 வருடங்கள்

1) **புதன்புத்தி 2 வருடம் 4 மாதம் 27 நாள்**

நண்பர், சுற்றம், அரசு உதவிகள் கிடைக்கும். நினைத்தவை நிறைவேறும் பொன், பொருள், காணி பூமி, பரிசுகள் சேரும். முதலீடுகள் அதிக லாபம் தரும்.

2) **கேதுபுத்தி 11 மாதம் 27 நாள்**

இடமாற்றத்தால் துன்பம் மேலிடும். நோய்கள் அதிகரிக்கும். கட்டுமீறிய செலவுகள் உண்டாகும். பகை வளரும். வழக்குகள் முரண்பாடுகள் ஏற்பட்டு அவமானம் உண்டாகும்.

3) **சுக்கிரபுத்தி 2 வருடம் 10 மாதம்**

பிள்ளைகள், சுற்றத்தவர், நண்பர்களால் பெரும் உதவிகள் கிடைக்கும். முயற்சி பெரு வெற்றி தரும். பிற நாட்டு உதவிகள் கிடைக்கும். ஆடை, ஆபரணம், காணி, பூமி என்பன சேரும். குடும்பத்தில் மங்கலகரமான நிகழ்வுகள் நடைபெறும்.

4) **சூரியபுத்தி 10 மாதம் 6 நாள்**

அக்கினி, விஷம், வாகனம் என்பவற்றால் தீமை உண்டாகும். நோய், பகை, முரண்பாடு என்பவற்றால் பணச்செலவு உண்டாகும். தொழிலில் பிரச்சினைகள் உண்டாகும். மேலதிகாரிகளின் பகை உண்டாகும்.

5) **சந்திரபுத்தி 1 வருடம் 5 மாதம்**

வாதநோயுள்ளவர்களுக்கு நோய் அதிகரிக்கும். பெண்களால் பிரச்சினைகள் உண்டாகும். அதன் காரணமாகப் பகை, வழக்கு, பணச்செலவு என்பன ஏற்படும். பூமி சம்பந்தமான வழக்குகள் ஏற்படும். பகை அதிகரிக்கும்.

6) **செவ்வாய் புத்தி 11 மாதம் 27 நாள்**

அன்னியரால் துன்பம், பகைவரின் தாக்குதல் அதிகரிக்கும். உஷ்ணரோகங்கள் வரும். பழைய பகை துன்பத்தைக் கொடுக்கும். வீண் பிரச்சினைகளால் தொல்லையும் பணச் செலவும் உண்டாகும்.

7) **ராகுபுத்தி 2 வருடம் 6 மாதம் 18 நாள்**

வீடுமாறுதல், பகைவர்களாலும், தீய நண்பர்களாலும் துன்பம் உண்டாகும். பொருள் இழப்பு, நல்லவர் பகையாதல், மேலோர்பகை, பெற்றாருடன் விரோதம் என்பன உண்டாகும்.

8) **குருபுத்தி 2 வருடம் 3 மாதங்கள்**

மனமகிழ்ச்சியும், அரசர்களால் மதிப்பும், பெரியவர்களின் உதவியும் கிடைக்கும். வீடுகட்ட, காணி, ஆபரணம் வாங்கக்கூடிய நிலை உண்டாகும். பிள்ளைகளால் நன்மை உண்டாகும்.

9) **சனி புத்தி 2 வருடம் 8 மாதம் 9 நாள்**

பொருள் நாசம், விரோதம், பணக்கஷ்டம், நோய்களால் பணச்செலவு, காணி, பூமி ஆபரணங்களை விற்றல், பகை அதிகரித்தல், தொழிலில் நட்டம் என்பன ஏற்படும்.

## கேது தசை 07 வருடங்கள்

1) **கேது புத்தி 4 மாதம் 27 நாள்**

குடும்பத்தவர், நல்ல நண்பர்கள், சுற்றத்தவர்களைப் பகைத்தல், அரசால் பயம், மரணபயம், நோய்களால் செலவு, தொழிலில் நட்டம், காணி பூமியால் பிரச்சினைகள் உண்டாகும்.

2) **சுக்கிரபுத்தி 1 வருடம் 2 மாதம்**

குடும்பத்தில் மகிழ்ச்சி மக்கட்பேறு, நினைத்தவை நிறைவேறல், தொழிலில் அதிக வருமானம், கௌரவம் புகழ் அதிகரித்தல் நடைபெறும். கேது புத்தி, முடிவில் குடும்பத்தில் விரோதம் உண்டாகும்.

3) **சூரியபுத்தி 4 மாதம் 6 நாள்**

வீடு, காணி ஆபரணங்களை விற்றல், இடம் மாறுதல், தலையில் நோய் உண்டாதல், நிம்மதியின்மை, பகை, விரோதம், வழக்கு என்பன உண்டாதல் நடைபெறும்.

4) **சந்திரபுத்தி 7 மாதம்**

பெண்களால் தீமை, பணச்செலவு, முரண்பாடு என்பன உண்டாகும். பிள்ளைகளால் தொல்லை, குடும்பத்தில் கலகம் போன்றன அடிக்கடி நிகழும் சத்திரபுத்தியின் இறுதியில் இவை நீங்கும்.

5) **செவ்வாய் புத்தி 4 மாதம் 27 நாள்**

சண்டைக்குச்செல்லல், நண்பர்கள்,உறவினர்,குடும்பத்தவ ருடன் விரோதம், தொழிலில் முரண்பாடு, மேலதிகாரிகள் பகை, பூமியால் பிரச்சினைகள் என்பன உண்டாகும்.

6) **ராகுபுத்தி 1 வருடம் 18 நாள்**

விஷபயம், பெண்களுக்கு நோய்களின் தாக்கம் அதிகரிப்பு, அரசால் தீமை, தொழிலில் பிரச்சினைகள், வருமானக் குறைவு, செலவு அதிகரிப்பு, நல்லவர்களின் விரோதம், குடும்பத்தில் கலகம் என்பன ஏற்படும்.

7) **குருபுத்தி 11 மாதம் 6 நாள்**

தொழிலால் வருமானம் அதிகரிப்பு. பணச்சேர்க்கை, அழகான மனைவி அமைதல், ஆடை, ஆபரணங்கள், சொத்துக்கள் சேரல், பெரியவர்களின் ஆசி கிடைத்தல், மதிப்பு உயரல் என்பன இடம்பெறும்.

8) **சனிபுத்தி 1 வருடம் 1 மாதம் 9 நாள்**

பல்வேறு வகையில் பொருள் செலவாகும். பண விடயத்தில் ஏமாற்றப்படுதல், தொழிலில் முரண்பாடு, நண்பர்களை விரோதித்தல் பெண்களால் துன்பம், தோல் நோய்கள் ஏற்படல் மனதில் குழப்பம் என்பன உண்டாகும்.

9) **புதன்புத்தி 11 மாதம் 27 நாள்**

புத்திரர்களால் கவலை, உறவினர் பகை, பொருட்சேதம், முயற்சிகள் பலியாமை, வீண் சண்டைகளில் ஈடுபடல், பெரியோரைப் பகைத்தல், அரசால் தீமை என்பன ஏற்படும்.

## சுக்கிர தசை 20 வருடங்கள்

1) **சுக்கிரபுத்தி 3 வருடம் 4 மாதம்**

பொன், பொருள், ஆபரணம், காணி, பூமிசேர்தல், கடன் தீர்தல், செல்வம் பெருகல், புதிய முயற்சி ஆரம்பித்தல், அரசஉதவி கிடைத்தல், நினைத்தவை யாவும் நிறைவேறல் என்பன நடைபெறும். பிற்பகுதியில் துன்பமான சம்பவங்கள் நடக்கும்.

2) **சூரியபுத்தி 1 வருடம்**

துன்பம், பணக்கஷ்டம், பகை வளர்தல், மனைவி மக்களுடன் முரண்படல், வீண் பகையால் வழக்குண்டாதல், தெய்வ நம்பிக்கை குறைவு, மேலதிகாரியுடன் பகை என்பன உண்டாகும்.

3) **சந்திரபுத்தி 1 வருடம் 8 மாதம்**

நினைத்தவை யாவும் நிறைவேறல், மனைவி வழியால் உதவி, பெரியவர்கள், நண்பர்கள், அரசால் உதவி,வித்தை விருத்தி, மனதிற்கு இனிய இடமாற்றம் கிடைத்தல், பிள்ளைகளால் மகிழ்ச்சி என்பன உண்டாகும்.

4) **செவ்வாய் புத்தி 1 வருடம் 2 மாதம்**

நினைத்த பொருட்கள் வாங்குதல், தெய்வ வழிபாடு அதிகரித்தல், பகை விலகல் என்பன உண்டாகும். இருப்பினும் பெண்களால் பொருள் இழப்பு, மானக்கேடு, வீண் சண்டை என்பன உண்டாகும்.

5) **ராகுபுத்தி, 3 வருடம்**

விரக்தியடைதல், குடும்பத்தில் வெறுப்பு, பிள்ளைகளால் துன்பம், பெற்றோருக்கு நோய் உண்டாதல், மருத்துவச் செலவுஉண்டாதல், விஷபயம், தூரதேசம் செல்லுதல், வசதியில்லாத இடமாற்றம் என்பன உண்டாகும்.

6) **குருபுத்தி 2 வருடம் 8 மாதம்**

ரேவதி, உத்திர நட்சத்திரம் உள்ள காலங்களில் நோய் துன்பம் பணச் செலவு என்பன உண்டாகும். தொழிலில் உயர்வும், வருமான அதிகரிப்பும் ஏற்படும். குடும்பத்தினர், அயலவர், உறவினர், பெரியவர்கள் உதவி செய்வார்கள்.

7) **சனிபுத்தி 3 வருடம் 2மாதம்**

இரத்தம் சம்பந்தமான நோய்களின் தாக்கம் அதிகரிக்கும். செலவு வருமானத்தை விட அதிகமாக இருக்கும். மனக்குழப்பம், நிம்மதியின்மை,கடவுளில் பற்றின்மை, விரக்தி என்பன ஏற்படும்

8) **புதன்புத்தி 2 வருடம் 10 மாதம்**

மனைவியால் இன்பம், மனைவி வழியால் பொருள் சேரும். கலைஞர்கள் பாராட்டுப் பெறுவர். அரச மதிப்பும் கிடைக்கும். வெளி நாட்டில் வசிப்போரின் உதவியும், வெளிநாடுகளுக்குச் செல்லும் நிலையும் உண்டாகும்.

9) **கேதுபுத்தி 1 வருடம் 2 மாதம்**

துட்டர்களால் துன்பங்கள் பல வரும். மனைவியாலும் மனைவி வழியாலும் துன்பங்கள் உண்டாகும். விஷபயம் பொருள் இழப்பு, கௌரவம் அழிதல், அரசால் துன்பம் என்பன இடம்பெறும்.

### ஸ்தானப் பலன்

லக்கினம் முதல் 12 ஸ்தானங்களில் உள்ள கிரகங்களின் பலன்.

1) **லக்கனம்** இது ஜன்மம், உயிர், உடல், தோற்றம் பற்றியது.
2) **இரண்டாமிடம்** வாக்குஸ்தானம். குடும்ப சுகம், கல்வி மேன்மை, செல்வம், கண் பார்வை பற்றியது.
3) **மூன்றாமிடம்**, சகோதரஸ்தானம். பேச்சு வல்லமை, புகழ், செல்வாக்கு, சகோதரர் உதவி, யோகம், செல்வம் பற்றியது.
4) **நான்காமிடம்** மாத்ரு ஸ்தானம், தாயின் சுக நலம், வீடு, காணி, பூமி, வித்தை, வியாபாரம் பற்றியது.
5) **ஐந்தாமிடம்** புத்திர ஸ்தானம், சந்ததி, புகழ், கௌரவம், மேற்படிப்பு, தாய்வழி உறவுகள் பற்றியது.
6) **ஆறாமிடம்** ரோக ஸ்தானம், பகைவர், நோய், செலவு, வழக்கு, கடன் பற்றியது.
7) **ஏழாமிடம்** களஸ்திரஸ்தானம். மனைவி அமைவது, நோய் நொடிகள், நண்பர்கள் பற்றியது. இதை மாரகஸ்தானம் என்றும் சொல்வர்.
8) **எட்டாமிடம்** ஆயுள் ஸ்தானம். ஆயுள், மரணம் பற்றியது.
9) **ஒன்பதாமிடம்.** பித்ரு ஸ்தானம். தெய்வ வழிபாடு, தான தர்மம் செய்தல், குருவை மதித்தல், பிரயாணம் பற்றியது. இதைப் பாக்கிய ஸ்தானம் என்றும் சொல்வர்.
10) **பத்தாமிடம்,** ஜீவனஸ்தானம். அரச உதவிகள், தொழில் முன்னேற்றம், ஞானம் பற்றியது
11) **பதினோராமிடம்** லாபஸ்தானம். தொழில், செல்வம், செல்வாக்குப் பற்றியது.

12) **பன்னிரண்டாமிடம்,** விரய ஸ்தானம், செலவு, உறக்கம், தெய்வ பக்தி, மோட்சம் பற்றியது.

## ஸ்தானப் பலன்கள்

**(லக்னம் முதல் 12 ஸ்தானங்களில் அறியவேண்டிய பலன்கள்)**

1) லக்னம் (ஜந்மம்) உயிர், ஜீவன், தேகம், தோற்றம்.
2) இரண்டாமிடம் (வாக்கு ஸ்தானம்) குடும்ப ஸ்தானம், தனம், கண் பார்வை.
3) மூன்றாமிடம், (சகோதரஸ்தானம்) பேச்சு வல்லமை, கீர்த்தி, தைர்யம், இளைய சகோதரன், சகோதரி, காது, ஆள், அடிமை, அணிகலம், போகம்.
4) நான்காமிடம் (மாத்ரு ஸ்தானம்),சுகஸ்தானம், வீடு, வாகனம், நிலம்,மாதா, பந்துக்கள், வித்தை, வியாபாரம்.
5) ஐந்தாமிடம் (புத்திரஸ்தானம்) சந்ததி, புகழ், அம்மான், பிரபுத்வம், மேல்படிப்பு
6) ஆறாமிடம் (புத்திரஸ்தானம்) சத்ருஸ்தானம், சத்ருரோகம், வழக்கு, கடன்.
7) ஏழாமிடம் (ஆயுள்ஸ்தானம்) ஆயுள்,மாரகஸ்தானம், கூட்டாளிகள்
8) எட்டாமிடம் (ஆயுள்ஸ்தானம்) ஆயுள், மரணவழி.
9) ஒன்பதாமிடம்(பித்ருஸ்தானம்) பாக்யஸ்தானம். கடவுள்பக்தி, குரு உபதேசம், தர்மம், சீலம், பிரயாணம்.
10) பத்தாமிடம் (ஜீவனஸ்தானம்) ராஜ்யாதிபத்யம், தொழில், கர்மம், ஞானம்
11) பதினோராமிடம் (லாபஸ்தானம்) மூத்த சகோதர ஸ்தானம், லாபம்.
12) பன்னிரண்டாமிடம் (விரயஸ்தானம்) செலவு, சயனம், மோஷம்.

**முக்கிய ஸ்தானங்கள் விவரமும் பெயரும்**

| | |
|---|---|
| 1~4~7~10 | கேந்திரம் |
| 1~5~9 | திரிகோணம் |
| 2~6~8~11 | பணபரம் |
| 3~12 | ஆபோக்லிமம் |

**சுபர்கள் :** வளர்பிறைச் சந்திரன், குரு, சுக்கிரன், பாபரோடு சேராத புதன் இவர்கள் சுபர்களாவர்.

**பாவிகள் :** சூரியன்,செவ்வாய்,சனி,ராகு,கேது, தேய்பிறைச் சந்திரன், பாபரோடு கூடிய புதன்.

## கேந்திர பலன்

**1,4,7,10** கேந்திரஸ்தானம் எனப்படும். லக்கனத்தில் புதன், குரு இருந்தால் பூரணமான பலன் கிடைக்கும்.

**4ஆவது கேந்திரத்தில்** ~சந்திரன், சுக்கிரன் இருந்தால் பூரண பலன் கிடைக்கும்.

**7ஆவது கேந்திரத்தில்** ~ சனி,இராகு, கேது இருந்தால் பூரண பலன் கிடைக்கும்.

**10ஆவது கேந்திரத்தில்** ~ சூரியன்,செவ்வாய், இருந்தால் பூரணபலன் கிடைக்கும்

**திரிகோண பலன்**

லக்கனம், ஐந்தாம் வீடு, ஒன்பதாம் வீடுகளைத் திரிகோணம் என்பார்கள். இதற்கு லக்சுமி ஸ்தானம் என்று பெயர். இது சுப வீடு. ஐந்தாவது வீடு முக்காற்பலனையும், ஒன்பதாவது வீடு முழுப்பலனையும் கொடுக்கும். இவ்வீடுகளில் கிரகங்கள் தசாநாதன் இவர்கள் இருக்கும் போது மேற்சொல்லப்பட்ட பலனைக் கொடுப்பார்கள்.

## இலக்கின பலன்

மேடம் : இவ் இலக்கினத்தில் பிறந்தோருக்கு அரசமரியாதை கிடைக்கும். சமூகத்துடன் நல்லுறவு இருக்கும். பணியாளர்கள் பலர் இருப்பார்கள். மூர்க்கத்தனமும், சாமர்த்தியமும், மெலிந்த தேகமுடையவர்களாகவும், அழகுள்ளவர்களாகவும், பொறுமை, மனத்திடம், பலம், அறிவு உடையவர்களாகவும் இருப்பார்கள். 4,5,7,10,21,23,25,27 இந்த வயதுகளில் நோய் பலவீனம், விஷ பயம், தூரதேச சஞ்சாரம், வருமானக் குறைவு என்பன உண்டாகும். இந்த இராசிக்காரர்களுக்கு சூரியன், வியாழன் சுப பலன்களையும், சனிசம்பந்தப்பட்ட வியாழன் துன்பமான பலன்களையும் கொடுப்பார்கள்.

இடபம் : இவ் இலக்கினத்தில் பிறந்தோர் களத்திரதோஷம் உள்ளவர்களாகவும், நேர்மையானவர்களாகவும், பிறரின் சொத்தை விரும்பாதவர்களாகவும், வசீகரமானவர்களாகவும், ஆபரணங்களை அணிபவர்களாகவும், அழகான உடைகளை அணிபவர்களாகவும், நல்ல புத்திரர்களைப் பெற்றவர்களாகவும் இருப்பார்கள். சூரியனும், சனியும், புதனும் நல்ல பலன்களைக் கொடுப்பார்கள். சனி ராஜயோகத்தைக் கொடுப்பான். சந்திரனும் வியாழனும் சுக்கிரனும் கெடுதலைக் கொடுப்பார்கள். 5,13,16,19,20,27 வயதுகளில் நோய், துன்பம், பகை, கஷ்டம் உண்டாகும்.

மிதுனம் : இவ் இலக்கினத்தில் பிறந்தவர்கள் மகிழ்ச்சியுடன் இனியவார்த்தை பேசுபவர்களாக இருப்பர். நல்ல பேச்சாளராகவும், மனைவியின் மீது அதிக அன்புள்ளவர்களாகவும், அவளின்

சொல்லைக்கேட்பவர்களாகவும், அடிக்கடி நோய்வாய்ப் படுபவர்களாகவும், புகழை விரும்புபவர்களாகவும், சட்டம் பயில்பவராகவும், சமூகத் தொண்டராகவும் இருப்பார்கள். 2,5,8,10,18,25,27 இந்த வயதுகளில் நெருப்பு, ஆயுதம், வாகனம் இவைகளால் துன்பம் உண்டாகும். இவ் இராசிக்காரர்களுக்குச் சுக்கிரன் நன்மை செய்வான். சூரியன், செவ்வாய், வியாழன் துன்பப்படுத்துவர்.

கடகம் : இந்த இலக்கினத்தில் பிறந்தவர்கள் களத்திர சுகமற்றவர்களாகவும், புத்திசாலியாகவும், பணக்காரராகவும், குரு விசுவாசியாகவும், அற்ப புத்தியுள்ளவர்களாகவும், ஆழ்ந்த சிந்தனையுள்ளவர்களாகவும்,துடுக்கானவர்களாகவும்,முன்கோபியா கவும் இருப்பார்கள். 5,9,14,17,20,25,40 இந்த வயதுகளில் நோய்களின் தாக்கம் இருக்கும். வியாழனும், செவ்வாயும் நன்மை செய்வார்கள். இவர்கள் யோககாரர்கள். இருவரும் கூடியிருப்பது யோகமானது.

சிம்மம் : இந்த இலக்கினத்தில் பிறந்தவர்கள் உணவில் பிரியமுள்ளவர்களாகவும், கம்பீரம், பலம், உறுதி கொண்டவர்களாகவும், தனவந்தர்களாகவும், தெய்வ நம்பிக்கை மிக்கவர்களாகவும் வித்தைகள் பலவும் கற்றவர்களாகவும், சமயோசித புத்தி உள்ளவர்களாகவும், முயற்சியுடையவர் ~களாகவும் இருப்பார்கள் 4,10,27,30 ஆகிய வயதுகளில் நோய், துன்பம், உண்டாகும். இவ்விராசிக்காரர்களுக்கு சூரியன் செவ்வாயினால் நன்மை உண்டாகும். செவ்வாய் யோககாரன். செவ்வாயுடன் சுக்கிரன் கூடியிருந்தால் யோகமுண்டாகும்.

கன்னி : இந்த இலக்கினத்தில் பிறந்தவர்கள், நல்ல நடத்தையுடையவர்களாகவும், தான தருமத்தில் விருப்பும், நம்பிக்கையும், கொண்டவர்களாகவும், இரக்கமுள்ளவர் களாகவும், மனதில் வஞ்சனை உடையவர்களாகவும், பிறரிடமிருந்து பொருட் களைப் பெறுபவராகவும், முயற்சியுடைய வராகவும் இருப்பர். இவர்களுக்கு சுக்கிரனும் புதனும் யோககாரர்கள். இவர்கள் கூடியிருப்பது யோகம். சந்திரன் செவ்வாய்,

வியாழன், பாவிகள். இவர்களுக்கு 13,17,19,42 வயதில் நோய், பணக்கஷ்டம் உண்டாகும்.

துலாம் : இந்த இலக்கினத்தில் பிறந்தவர்கள், அரசின் நன்மதிப்பைப் பெற்றவர்களாகவும், நற்குணமும், பொறுமையும், இரக்கமும், வல்லமையும், அறிவும் உள்ளவர்களாகவும், புகழுமையவர்களாகவும், கருணை பிறர்க்குதவி, சமூகசேவை செய்பவர்களாகவும், புகழுடையவர்களாகவும், பரிமளப் பிரியர்களாகவும் இருப்பர். 7,10,12,19,27 ஆகிய வயதுகளில் அக்கினி, வாகனம், இயற்கையின் சீற்றம் என்பவற்றால் தீமைகள் வரும். சனி, புதன், சுக்கிரனால் நன்மையும், சூரியன், செவ்வாய், வியாழனால் துன்பம் வரும். சந்திரனும், புதனும் யோககாரர்கள். இவர்கள் கூடியிருந்தால் யோகம் உண்டாகும்.

விருச்சிகம் : இவ் இலக்கணத்தில் பிறந்தவர்கள் பிறரை அனுசரித்து வாழ்பவர்களாகவும், தனவந்தவர்களாகவும், அறிவுத்திறன் மிக்கவர் களாகவும், தானதர்மத்தில் விருப்புடையவர்களாகவும், வஞ்சகக் குணங்களை உடையவராகவும், இனபந்துக்களை அன்புடன் உபசரிக்காதவர்களாகவும், குடும்பத்தில் பிரியமுள்ளவர்களாகவும், எடுத்த காரியத்தை முடிப்பவர்களாகவும் இருப்பார்கள். 3,5,9,12,18,40 இந்த வயதில் கண்ட தோஷமுண்டு. அக்கினி பயம், விஷத்தாலும், விபத்துக்களாலும் துன்பம் உண்டாகலாம்.

சூரியன், சந்திரன், வியாழன், சுபர்கள், செவ்வாய், புதன், சுக்கிரன் பாவிகள். சூரியனும், சந்திரனும் யோககாரர்கள். இவர்கள் இருவரும் கூடியிருந்தால் யோகமாகும்.

தனுசு:

இந்த இலக்கணத்தில் பிறந்தவர்கள் நற்குணமுடைய ~வர்களாகவும், உண்மைபேசுபவர்களாகவும், பொருள் உடையவர் ~ களாகவும்,இனசனக்கூட்டத்தைக் கொண்டவர்களாகவும், வித்தை மிகுந்தவர்களாகவும், இருப்பார்கள். 3,4,6,15,18,32,47,இந்த வயதுகளில் கண்டதோஷம் உண்டு. கண் நோய்கள், உஷ்ணநோய்கள் வரும். சூரியன்,

செவ்வாய், சுபர்கள். சுக்கிரன் பாவி. சூரியனும் புதனும் யோககாரர்கள். இவர்கள் இருவரும் கூடியிருப்பது யோகமாகும்.

**மகரம்** : இந்த இலக்கணத்தில் பிறந்தவர்கள். தீய ஆசைகளைக் கொண்டவர்களாகவும், குள்ளப்புத்தி கொண்டவர்களாகவும், சுபநிகழ்ச்சிகளைச் செய்பவர்களாகவும், உபாயமுள்ளவர்களாகவும், சாகசமான வார்த்தைகளைப் பேசுபவர்களாகவும், முன்கோபமுள்ளவர் களாகவும், மனைவியிடம் பிரியமுள்ளவர்களாகவும், இருப்பார்கள். 3,4,7,8,32,37 இந்த வயதுகளில் நோய் பீடைகள் வறுமை என்பன உண்டாகலாம்.

செவ்வாய்,புதன், சுக்கிரன், சுபர்கள். சந்திரனும், வியாழனும் பாவிகள். சுக்கிரன், யோககாரன், சுக்கிரனும், புதனும் சேர்ந்திருந்தால் ராஜயோகம் ஏற்படும்.

**கும்பம்** : இந்த இலக்கணத்தில் பிறந்தவர்கள் நண்பர்களுடன் விரோதம் கொண்டவர்களாகவும், பெண்கள் மீது பிரியமுள்ள வர்களாகவும், திடமாக ஆராய்ந்து முடிவெடுப்பவர்களாகவும், தற்புகழ்ச்சியை விரும்பாதவர்களாகவும், நன்றி மறந்தவர்களாகவும், குள்ளமானவர்களாகவும், மந்த புத்தியுள்ளவர்களாகவும் இருப்பார்கள். 9,10,13,21,30,32 இந்த வயதில் உஷ்ணத்தால் பீடை வாதம் போன்ற நோய்கள் தாக்கலாம்.

சுக்கிரன், புதன், சனி, சுபர்கள். சந்திரன், செவ்வாய், வியாழன் பாவிகள். சுக்கிரன் யோககாரன். சுக்கிரன் செவ்வாயுடன் கூடியிருந்தால் யோகம் உண்டாகும்.

**மீனம்:** இந்த இலக்கணத்தில் பிறந்தவர்கள் சமயப்பற்று உடையவர்களாகவும், சத்தியவான்களாகவும், பொருள் மிகுந்தவர்க ளாகவும், சுகபோகப் பிரியர்களாகவும் வருமானத்தி ற்கு மிஞ்சிய

செலவாளிகளாகவும், முன்னெச்சரிக்கை உடையவர்களாகவும், இரக்க சுபாவம் உடையவர்களாகவும் இருப்பார்கள். 2,4,11.20,28 இந்த வயதுகளில் உஷ்ணரோகம், பித்தரோகம் என்பன உண்டாகும்.

சந்திரன், செவ்வாய், சுபர்கள். சூரியன், புதன், சுக்கிரன், சனி இவர்கள் பாவிகள். செவ்வாயும் வியாழனும் யோககாரர்கள். இவர்கள் கூடியிருந்தால் யோகம் உண்டாகும்.

## ஜன்ம நட்சத்திர பலன்

அச்சுவினி : **முதலாம் பாகம்** தெய்வபக்தி மிக்கவர்களாகவும், தனவந்தர்களாகவும், கல்வியுடன் புத்திக்கூர்மை உள்ளவர்க ளாகவும், புகழுடையவர்களாகவும், பிறரில் நம்பிக்கையில் லாதவர்களாகவும், வீண்வார்தைகள் பேசுபவர்களாகவும் இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம்** பெரியவர்களை மதிப்பவர்களாகவும், அவர்களால் மதிக்கப்படுபவர்களாகவும், மற்றவர்களை எளிதில் புரிந்து கொள்பவர்களாகவும், சொகுசான வாழ்க்கையை விரும்புபவர்க ளாகவும் இருப்பார்கள். சமய அனுட்டானம் உள்ளவர்களாகவும், ஆசிரியர்களாகவும், பிறர்க்கு முன் மாதிரியானவர்களாகவும், அடிக்கடி உஷ்ணம் சம்பந்தமான நோய்கு ஆட்படுபவர்களாகவும் இருப்பார்கள்.

சமயோசித புத்தியுடையவர்களாகவும், அறிவுள்ளவர்களாகவும், தெய்வ நம்பிக்கை மிக்கவர்களாகவும், உண்மை, நேர்மை, பொய் சொல்லாமை, மற்றவர்களை மதிக்கும் பண்புகள் உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

**மூன்றாம் பாதம்**

சமய அனுட்டானமுள்ளவர்களாகவும், ஆசிரியர்களாகவும், பிறர்க்கு முன்மாதிரியானவர்களாகவும், அடிக்கடி உஷ்ணம் சம்பந்தமான நோய்க்கு ஆட்படுபவர்களாகவும், இருப்பார்கள்.

**நான்காம் பாதம்**

சமயோசிதபுத்தி உடையவர்களாகவும், அறிவுள்ளவர்களாகவும், தெய்வநம்பிக்கை மிக்கவர்களாகவும், உண்மை, நேர்மை, பொய் பேசாமை, மற்றவர்களை மதிக்கும் பண்புகள் உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

பரணி : **முதலாம் பாதம்** எதிரிகளைத் தன்வசப்படுத்துபவர் களாகவும், நற்குணமுள்ளவர்களாகவும், திடமான உடலையுடையவர்க ளாகவும், மற்றவர்களைப் புரிந்து கொள்பவர்களாகவும், செய்நன்றி மறவாதவர்களாகவும், செருக்கும் திமிரும் உள்ளவர்களாகவும், காம உணர்ச்சி உடையவர்களாகவும் இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம்** புகழும், கீர்த்தியும் உள்ளவர்களாகவும், மற்றவர்களை எளிதில் கவர்ந்து தனது காரியங்களைச் சாதிப்பவர்க ளாகவும்,தானதர்மங்களில் விருப்பம் உடையவர்கள் ஆகவும், எதிரிகளை வசீகரிப்பவர்களாகவும், பிறரிடம் எளிதில் உதவிகளைப் பெறுபவர்களாகவும் இருப்பார்கள்.

**மூன்றாம் பாதம்** அதிஷ்டசாலிகளாகவும், வெகுசனப் பிரியர்களாகவும், உதவிகள் செய்பவர்களாகவும், மன மகிழ்வுடையவர்களாகவும், சுயநலம் மிக்கவர்களாகவும் இருப்பார்கள்.

**நான்காம் பாதம்** மற்றவர்களின் உயர்வைப் பொறுத்துக் கொள்ளாதவர்களாகவும், பிடிவாதம், செருக்கு, ஆணவம் உள்ளவர்களாகவும், வஞ்சனைகள் கொண்டவர்களாகவும், சண்டைப் பிரியர்களாகவும் இருப்பார்கள்.

கார்த்திகை : **முதலாம் பாதம்** திறமைசாலிகளாகவும், காணிபூமி, வீடுகள் உடையவர்களாகவும் செல்வந்தர்களாகவும், அடிக்கடி நோய்வாய்ப்படுபவர்களாகவும், முரட்டுக்குணங்களை உடையவர் களாகவும், தெய்வபக்தி உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம்** தெய்வபக்தி, சமய நம்பிக்கையில் நாட்டமில்லாதவர்களாகவும், மூர்க்கத்தனமும், தான் நினைத்தவை தான் சரி என்ற எண்ணம் கொண்டவர்களாகவும் கல்வியில் திறமையும், கலைகளில் விருப்பும் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

**மூன்றாம் பாதம்** : கோமாளிகளாகவும், அடுத்தவர்களால் பரிகசிக்கப்படுபவர்களாகவும், பிறரின் வெறுப்புக்கு ஆளாபவர் களாகவும், மந்தபுத்தி உடையவர்களாகவும், பெண்களின் மீது இச்சை கொள்பவர்களாகவும் இருப்பார்கள்.

**நான்காம் பாதம்** வறுமையுடையவர்களாகவும், துன்பங்களை அடிக்கடி சந்திப்பவர்களாகவும், நோயாளிகளாகவும், மனக்குழப்பம் உள்ளவர்களாகவும், பிறரைக் குறை கூறுபவர்களாகவும், சண்டைப் பிரியர்களாகவும் இருப்பார்கள்.

ரோகிணி : **முதலாம் பாதம்** பேராசை உள்ளவராகவும், பெண்களின் மீது விருப்பம் உள்ளவராகவும், அறிஞர்களின் நட்பைப் பெற்றவராகவும், அழகு, கம்பீரம் கொண்டவராகவும், ஊர் சுற்றுபவராகவும், நடுவுநிலைமை உடையவராகவும் கல்வி மான்களாகவும் இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம்** : ஆசார அனுட்டானங்கள் உடையவராகவும், தெய்வ நம்பிக்கை உடையவராகவும், நீதி நியாயகள் உடையவராகவும், சோதிடத்தில் நம்பிக்கை உடையவர்களாகவும், முன்கோபிகளாகவும், பெண்கள் மீது பிரியம் உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

**மூன்றாம் பாதம்** : கல்வியில் ஆர்வமுள்ளவர்களாகவும், ஆராய்ச்சி செய்பவர்களாகவும், கலைகளில் ஆர்வமுள்ளவர்களாகவும், கணித மேதைகளாகவும், மாந்திரீகம் சோதிடம் ஆகியவற்றில் நம்பிக்கை உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

**நான்காம் பாதம்** : அநியாயங்களைப் பொறுக்க மாட்டாதவர்களாகவும், நீதி, நேர்மை உள்ளவர்களாகவும் பெண்களைத் தெய்வமாக மதிப்பவர்களாகவும், செல்வம் செல்வாக்குள்ளவர்களாகவும், புகழ் உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

மிருகசீரிடம் : **முதலாம் பாதம்** அழகும், திறமையும், கல்வியறிவும் நீங்காத செல்வமும் உடையவர்களாகவும் ஆசார அனுட்டானங்களில் நம்பிக்கையில்லாதவர்களாகவும், மனக் குழப்பமுடையவர்களாகவும்,

தெய்வபக்தி உள்ளவர்களாகவும், தல யாத்திரை செய்பவர்களாகவும், பிறரின் உடமைகளில் அவாக் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம் :** நம்பக்கூடியவர்களாகவும், வாக்குத் தவறாதவர்களாகவும்,உண்மை, நேர்மை உடையவர்களாகவும், பிறரின் பொருள்மீது அக்கறை உள்ளவர்களாகவும், முற் கோபிகளாகவும், ஆசார அனுட்டானங்கள் உள்ளவர்களாகவும், காம உணர்வு அதிகம் உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

**மூன்றாம் பாதம்** தாமும் மகிழ்வுடன் இருந்து மற்றவர்களையும் மகிழ்விப்பவராகவும் தெய்வநம்பிக்கையும், ஆசார அனுட்டானங்களில் நம்பிக்கை உடையவர்களாகவும், மென்மையாகவும், அன்பாகவும் பேசிப் பழகுபவராகவும் பரோபகாரிகளாகவும் இருப்பார்கள்.

**நான்காம்பாதம்**தெய்வநம்பிக்கையும், ஆசார அனுட்டானங்களும், கல்வி அறிவும், நுண்மையான புத்தியும் பிறரை நேசிப்பவர்களாகவும், தான தர்மங்கள் செய்பவர்களாகவும், காம உணர்வும், பிடிவாத குணமும் செருக்கும் உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

திருவாதிரை **:முதலாம் பாதம்** மனச்சுத்தம் உடையவர்களாகவும், இனிய சுபாவமுள்ளவர்களாகவும், கல்வியறிவு, திறமை, புத்திக்கூர்மை உள்ளவர்களாகவும், கலகலப்பாகப் பேசிப் பழகும் தன்மை உள்ளவர்களாகவும், பொருளைச் சம்பாதித்துச் சேர்த்து வைத்திருப்ப வராகவும் அழகு உணர்வு உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம்** கண்டிப்பான சுபாவம் உள்ளவர்களாகவும், ஆராயது, கோபம் கொள்ளபவர்களாகவும், இனசன பந்துக்களுடனும் நண்பர்களுடனும் முரண்படுபவராகவும், விவாதங்களில் ஈடுபடுபவர்களாகவும், தைரியசாலிகளாகவும் இருப்பார்கள்.

**மூன்றாம்பாதம்** பிறருடன் ஒத்துப்போகாது முரண்படுபவர்க ~ளாகவும், பிறரைக் கேலி செய்து இன்பம் அடைபவர்களாகவும், அழகு உணர்ச்சி இல்லாதவர்களாகவும், கெட்டவற்றை விரும்புபவர்களாகவும், அடிக்கடி நோய்வாய்ப்படுபவர்களாகவும் கஞ்சர்களாகவும் இருப்பார்கள்.

**நான்காம்பாதம்** பிறரை நம்பாதவர்களாகவும், இன சனபந்துக்கள், நண்பர்கள், அயலவர்களுடன் காரணங்களின்றி முரண்பட்டு அவமானமடைபவர்களாகவும், நீதி, நேர்மை இல்லாதவர்களாகவும், பணம் சம்பாதிப்பதையே நோக்கமாகக் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

புனர்பூசம்: **முதலாம்பாதம்.** பருத்த சரீரம் உடையவர்களாகவும், ஊக்கமில்லாதவர்களாகவும்,உழைப்பில் பற்றில்லாதவர்களாகவும். ஆசைகள் உள்ளவர்களாகவும், கல்வியில் அக்கறை உள்ளவர்களாகவும், செல்வத்தில் பற்றுக் கொண்டவர்களாகவும், திடமான மனம் இல்லாதவர்களாகவும் இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம்** ஆசார அனுட்டானங்களிலும், தெய்வத்தின் மீதும் நம்பிக்கை இல்லாதவர்களாகவும், உறவினர், நண்பர்களுடன் மனம் விட்டுப் பழகாதவர்களாகவும், நாவன்மை உள்ளவர்களாகவும், ஆடம்பரமாக வாழ

விரும்புபவர்களாகவும், அடிக்கடி நோய்வாய்ப்படுபவர்களாகவும் இருப்பார்கள்.

**மூன்றாம் பாதம்** உல்லாசப் பிரியர்களாகவும், ஊர் சுற்றுபவர்களாகவும்,உடல்அழகில் கவனம் செலுத்தாதவர்களாகவும், பிறரால் விரும்பப்படாத ~வர்களாகவும், நீண்ட ஆயுளை உடையவர்களாகவும், குடும்பத்தில் பற்றுள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

**நான்காம் பாதம்** அழகானவர்களாகவும், பிறரைக் கவர்வதில் வல்லவர்களாகவும், பிறருக்கு உதவிகள் செய்வதை விரும்புபவர்களாகவும், தான தர்மப் பிரியர்களாகவும், நன்றி மறவாத குணத்தை உடையவர்களாகவும் திடமான முடிவுகளை எடுப்பவர்களாகவும் இருப்பார்கள்.

பூசம் : **முதலாம் பாதம்** கல்வியில் அக்கறையும், திறமையும் கொண்டவர்களாகவும், தெய்வநம்பிக்கை உடையவர்களாகவும் பெரியவர்களை மதிப்பவர்களாகவும், தான தர்மங்கள் செய்பவர்களாகவும் நல்ல நண்பர்களை உடையவர்களாகவும் இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம்** இரக்க சுபாவம் உள்ளவர்களாகவும், பிறருக்குப் புத்திமதிகள் கூறுபவர்களாகவும், தெய்வபக்தி, ஆசாரம் மிகுந்தவர்களாகவும், செல்வம் உடையவர்களாகவும், குடும்பத்தில் பற்றுள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

**மூன்றாம்பாதம்** கலகலப்பும் வேடிக்கையும் கொண்டவர்களாகவும் இனபந்துக்கள் சூழ்ந்திருப்பவர்களாகவும், கல்வியறிவும், புகழும் கொண்டவர்களாகவும், பிறரால் மதிக்கப்படுபவர் ~களாகவும், எடுத்த செயலைச் செய்து முடிப்பவர்களாகவும் இருப்பார்கள்.

**நான்காம் பாதம்**

எவ்வேளைகளிலும் பிறரோடு முரண்படுபவர்களாகவும், சினங் கொள்பவர்களாகவும், காமம் கொண்டவர்களாகவும், மனைவியை நேசிப்பவர்களாகவும், எதிலும் மனநிறைவு கொள்ளாதவர்களாகவும் இருப்பார்கள்.

ஆயிலியம்: **முதலாம் பாதம்** மற்றவர்களுடன் முரண்படுபவர் ~ களாகவும், பிறரை மதிக்காதவர்களாகவும், அகங்காரம் உள்ளவர்களாகவும். தீயவழியில் செல்வம் சேர்ப்பவர்களாகவும், இரக்கமில்லாதவர்களாகவும், பணத்தில் ஆசையுள்ளவர் ~களாகவும் இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம்**

தீய செயல்களில் நாட்டம் உள்ளவர்களாகவும், தெய்வ நம்பிக்கை குறைந்தவர்களாகவும், உபதேசம், ஆலோசனைகள் செய்பவர்களாகவும், சமூகத்தில் நடைபெறும் வைபவங்களில் கலந்து கொள்ளாதவர்களாகவும் இருப்பார்கள்.

**மூன்றாம் பாதம்**

குடும்பத்தில் பற்றில்லாதவர்களாகவும், மனைவி பிள்ளைகளைச் சந்தேகிப்பவர்களாகவும், அகங்காரம் கொண்டவர்களாகவும், பிறரால் மதிக்கப்படாதவர்களாகவும், நீதி நியாயங்களை உணராதவர்களாகவும், நன்றி இல்லாதவர்களாகவும் இருப்பார்கள்.

**நான்காம் பாதம்**

முரடர்களாகவும், வீண் வார்த்தைகள் பேசுபவர்களாகவும், தீயவர்களுடன் உறவு கொண்டவர்களாகவும், பிறரின் பொருளை அபகரிக்கும் குணம் கொண்டவர்களாகவும், புகழை விரும்பித் தகாத செயல்களைச் செய்யக்கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

மகம் : **முதலாம் பாதம்**

தானதர்மம் என்பவற்றிலும் ஆசார அனுட்டானங்கள், தெய்வ நம்பிக்கை என்பன மிகுந்தவராகவும், செல்வந்தர்களாகவும், அகலமானமார்பும், கல்வியறிவும் அழகும் உள்ளவர்களாகவும், ஆராய்ந்தறியும் தன்மையும், பொதுநல நோக்கும், பிறரை மதிக்கும் தன்மையும் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம்**

துன்பங்கள், துயரங்கள், நட்டங்களை அடிக்கடி சந்திப்பவர்களாகவும், நீதி, நேர்மை, கௌரவம் என்பன உடையவர்களாகவும், எளிதில் உணர்ச்சி வசப்படுபவர்களாகவும், இரக்கம் உள்ளவர்களாகவும், குடும்பப் பற்று மிகுந்தவர்களாகவும் இருப்பார்கள்.

**மூன்றாம் பாதம்**

முடிவுகளை எடுபத்தில் பலவீனர்களாகவும், பிறரை நம்பி வாழ்வை நடத்துபவர்களாகவும், பிறரின் பொருளை விரும்புவர்களாகவும், தைரியம் உள்ளவர்களாகவும், ஆசாரங்களில் நம்பிக்கை உடையவர்களாகவும், சாதுவானவர்களாகவும் இருப்பார்கள்.

**நான்காம் பாதம்**

குடும்பத்திற்கு உரிய குணங்கள் உடையவர்களாகவும், சரும வியாதிகளை உடையவர்களாகவும், பெண்களை நேசிப்பவர் களாகவும், அலங்காரமான வார்த்தைகளைப் பேசி எவரையும் கவர்ந்திழுக்கும் சக்தி உள்ளவர்களாகவும், பெரியோர் மீது மதிப்புடையவர்களாகவும் இருப்பார்கள்.

**பூரம் :** முதலாம் பாதம்

கல்வி, அறிவு, புத்திக்கூர்மை செல்வம் ஆகியன உடையவர்களாகவும், பெரியோரை மதிப்பவர்களாகவும் தர்ம சிந்தனையும், மகிழ்ச்சியும் உடையவர்களாகவும் இருப்பார்கள். தீராத நோய் ஒன்று கூட இருப்பவராகவும் இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம்**

அதிஷ்ட்டம் இல்லாதவர்களாகவும், விவசாயத்தில் விருப்பம் உடையவர்களாகவும், வியாபாரத்தைத் தொழிலாகக் கொண்டவர் களாகவும், மதிப்பு,மேன்மை,புகழ் உடையவர்ளாகவும் எதிலும் திருப்திப்படாதவர்களாகவும் கவலைகள் உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

**மூன்றாம் பாதம்**

நேர்மையும், கடவுள் பக்தியும் சாஸ்திர சம்பிரதாயங்களில் நம்பிக்கைகொண்டவர்களாகவும், இரக்கம் உள்ளவர்களாகவும், பிறர் மீது அன்பும், குடும்பத்தின் மீது பற்றும் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

**நான்காம் பாதம்**

சாத்திர சம்பிரதாயங்களிலும், கடவுளிலும் நம்பிக்கை குறைந்தவர்களாகவும், குடும்பம், உற்றார் உறவினர்களில் அன்பு குறைந்தவர்களாகவும், பெரியவர்களை மதிக்காதவர்களாகவும், தான தர்மம் செய்வதில் ஈடுபாடு இல்லாதவர்களாகவும் இருப்பார்கள்.

உத்தரம் : **முதலாம் பாதம்** குடும்பம் இனசன பந்துக்களின் மீது அன்பு கொண்டவர்களாகவும்,பிள்ளைகளின் எதிர் காலத்தைத் தீர்மானித்து அதற்காக உழைப்பவர்களாகவும், சமூகத்திற்கு உதவிகள் புரிபவர்களாகவும், ஆடம்பரப் பிரியர்களாகவும், செல்வத்தில் பற்று உடையவராகவும் இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம்**

துன்பங்களை அடிக்கடி சந்திப்பவர்களாகவும், மாமிச வகைகளை விரும்பி உண்பவர்களாகவும், மற்றவர்களை மதிக்காதவர்களாகவும், உணவு, உடை என்பவற்றில் பற்றாக்குறை உள்ளவர்களாகவும், வாய்ச் சொல்லில் வீரர்களாகவும், தெய்வ நம்பிக்கை, ஆசார அனுட்டானங்களில் விருப்பம் குறைந்தவர்களாகவும் இருப்பார்கள்.

**மூன்றாம் பாதம்**

மிருகங்கள், பறவைகளில் பற்றுள்ளவர்களாகவும் பூமி சம்பந்தமான தொழில்களில் விருப்பம் உடையவர்களாகவும், தெய்வப் பற்று மிக்கவர்களாகவும், சடங்கு, சம்பிரதாயங்களில் நம்பிக்கை கொண்டவர்களாகவும், நேர்மையானவர்களாகவும், பிறரை மதிப்பவர்களாகவும் இருப்பார்கள்.

**நான்காம் பாதம்**

பெற்றோரின்அன்பு, உதவிகள் கிடைக்கப் பெறாதவர்களாகவும், சிலர் பெற்றோரைச் சிறு வயதில் இழக்கக் கூடியவர்களாகவும், இருப்பார்கள். உண்மை, நேர்மை, வாக்குத் தவறாமை, நன்றி மறவாமை போன்ற நல்ல குணங்கள் யாவும் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

அத்தம் : **முதலாம் பாதம்** அகங்காரமும், தற்பெருமையும் கொண்டவர்களாகவும், செல்வத்தில் மிகுந்த பற்றுக் கொண்டவர்களாகவும், கல்வியறிவும், திறமையும் நல்ல தொழிலும் கொண்டவர்களாகவும், தான தர்மங்களில் விருப்பமும் தெய்வ பக்தியில் சிறந்தவர்களாகவும் முற்கோபிகளாகவும் இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம்**

இளம் வயதில் தாயாரை இழப்பவர்களாகவும், கலைகளில் அதிக விருப்பம் உள்ளவர்களாகவும், திமிர், அகங்காரம், பிறரை மதியாமை போன்ற குணங்களைக் கொண்டவர்களாகவும், பிறரின் மதிப்பைப் பெறாதவர்களாகவும், தைரியசாலிகளாகவும் இருப்பார்கள்.

**மூன்றாம் பாதம்**

வறுமை உடையவர்களாகவும், தந்தையின் உதவிகள் இல்லாதவர்களாகவும், வியாபாரத்தில் திறமை உள்ளவர்களா கவும்,மென்மையான மனத்தை உடையவர்க ~ளாகவும், தெய்வ நம்பிக்கை மிகுந்தவர்களாகவும் இருப்பார்கள்.

**நான்காம் பாதம்**

வலிமையான உடற்கட்டை உடையவர்களாகவும், முயற்சியில் தளராதவர்களாகவும், மகிழ்வுடனும். கலகலப்புடனும் பிறருடன் அன்புடன் பேசுபவர்களாகவும், தாயாரின் மீது அதீத பற்றுக் கொண்டவர்கள்ளாகவும், தெய்வ நம்பிக்கையும், தான தர்மங்களில் விருப்பும் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

சித்திரை **முதலாம் பாதம்** சுயநலம் மிக்கவர்களாகவும். வீண் வார்த்தைகள் பேசுபவர்களாகவும், சமூகத்திடம் பற்றில்லாதவர் களாகவும், உடலில் மச்சங்களை உள்ளவர்களாகவும், செல்வந்தில் பற்றுள்ளவர்களாகவும் பிறருக்கு ஈயாதவர்களாகவும் இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம்**

வறுமைஉடையவர்களாகவும், மனஉறுதி இல்லாதவர்களாகவும், பிறர் கூறுபவற்றை ஆராயாது நம்புபவர்களாகவும் கல்வியில் ஊக்கம் கொண்டவர்களாகவும், உயரமானவர்களாகவும், மற்றவர்களின் கருத்தை அறியாதவர்களாகவும், தீயவர்களை நம்புபவர்களாகவும் இருப்பார்கள்.

**மூன்றாம் பாதம்**

மதிப்பு, மரியாதை, புகழ் உடையவர்களாகவும், தைரிய சாலிகளாகவும், பிறரால் மதிக்கப்படுபவராகவும், மதிநுட்பம் உடையவர்களாகவும், தான தர்ம விருப்பும், பிறருக்கு உதவிசெய்யும் மனப்பாங்கும் கொண்டவர்களாகவும், தெய்வ நம்பிக்கை மிக்கவர்களாகவும் இருப்பார்கள்.

**நான்காம் பாதம்**

எவரையும் கவரக்கூடியவர்களாகவும், கல்வியில் திறமையுடைய வர்களாகவும், செல்வந்தர்களாகவும், எதிலும் வெற்றி பெறுபவர்க ளாகவும், எதிரிகளை வசப்படுத்துபவர்களாகவும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தனது தகுதிகளை மறந்து அடிமைப்படுபவர்களாகவும் இருப்பார்கள்.

சுவாதி **:முதலாம் பாதம்** தெய்வநம்பிக்கையும், ஆசார அனுட்டானங்களைப் போதித்தலும், சோதிடத்தில் அதீத நம்பிக்கை கொண்டவர்களாகவும் இருப்பார்கள். பெரியோர்களின் நட்பும், பொது மக்களின் மதிப்பும் உடையவர்களாகவும், அடிக்கடி கனவுகள் கண்டு இன்புறுபவராகவும், தானதர்மங்கள் செய்யபவர்களாகவும் இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம் :** செல்வத்தினால் உண்டாகும் போகங்களை அனுபவிப்பவர்களாகவும், தைரியமும் நேரான பேச்சும் கொண்டவர்களாகவும், புத்திசாலிகளாகவும், கற்பனையில் சஞ்சரிப்பவர்களாகவும், தெய்வ பக்தியும் விசுவாசமும், ஆசார அனுட்டானங்களில் நம்பிக்கையும் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

**மூன்றாம் பாதம்:** இரட்டை அர்த்தத்துடன் பேசுபவர்களாகவும், கலகக்காரர்களாகவும், தீய செயல்களைச் செய்பவர்களாகவும், தீயவர்களுடன் நட்புக் கொண்டவர்களாகவும், மற்றவர்களைக் கெடுப்பவர்களாகவும், ஆலோசிக்காது பேசிக் கலகம் உண்டு பண்ணுபவர்களாகவும் இருப்பார்கள்.

**நான்காம் பாதம்**

முரடர்களாகவும், முன்கோபியாகவும், பிறரை நம்ப வைத்துத் தீமைகள் செய்பவர்களாகவும், காம உணர்வு அதிகம் உள்ளவர்களாகவும், குடும்பத்தவரை நம்பாதவர்களாகவும் பெற்றோருக்கு உதவிகள் செய்யாதவர்களாகவும் இருப்பார்கள்.

விசாகம்: **முதலாம் பாதம்** வியாபாரத்தில் திறமை உள்ளவர்களாகவும், கல்வியில் திறமை உள்ளவர்களாகவும், புத்தி சாதுரியத்துடன் நடப்பவர்களாகவும், சோதிடம் கற்றவர்களாகவும், இலகுவாகப் பிறரை ஏமாற்றக் கூடியவர்களாகவும், எதையும் செய்யக் கூடியவர்களாகவும், பேசக் கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம்**

தன்னைத்தான் புகழ்பவர்களாகவும், தனக்கு எல்லாம் தெரியும் என்ற எண்ணம் கொண்டவர்களாகவும்,திறமையாக மற்றவர்களைக் கவர்ந்து காரியம் பார்ப்பவர்களாகவும், சோதிடம், அனுட்டானங்களில் நம்பிக்கை உடையவர்களாகவும் இருப்பார்கள்.

**மூன்றாம் பாதம்**

கலகத்தை ஆரம்பித்து வைப்பதில் திறமை மிக்கவர்களாகவும், நிலைமையைப் புரிந்து சமாளித்துக் கொள்ளும் வல்லமை உள்ளவர்களாகவும், திருட்டுக்குணம் உடையவர்களாகவும், சண்டைப் பிரியர்களாகவும், தைரியசாலிகளாகவும் மனத்திடம் மிக்கவர்களாகவும் இருப்பார்கள்.

**நான்காம் பாதம்**

செல்வம், செல்வாக்கு உடையவர்களாகவும், பேச்சிலும் காரியங்களைச் சாதிப்பதிலும் திறமை உள்ளவர்களாகவும், ஆலோசனை வழங்குபவர்களாகவும், சமூகத்திற்கு முன் மாதிரியானவராகவும், தானதர்மத்தை விரும்பிச் செய்பவர்களாகவும் இருப்பார்கள்.

அனுசம் : **முதலாம் பாதம்**

எல்லோரையும் கவரக்கூடியவர்களாகவும், பேசுவதில் வல்லவர்களாகவும், ஆசாரநெறி முறைகளைப் போற்றுபவர் களாகவும், தெய்வநம்பிக்கை மிக்கவர்களாகவும், ஆராயும் தன்மை கொண்டவர்களாகவும், தான

தர்மங்களைச் செய்பவர்களாகவும், மேன்மையான பதவி வகிப்பவர்களாகவும் இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம்**

அரச விசுவாசிகளாகவும், மற்றவர்களைப் புரிந்து காரிய மாற்றுபவர்களாகவும்,கலைகளில் ஈடுபாடு உடையவர்களாகவும், தர்மசிந்தனை உள்ளவர்களாகவும், நண்பர்களுக்கு உதவிகள் செய்பவர்களாகவும், கலகலப்பானவர்களாகவும் இருப்பார்கள்.

**மூன்றாம் பாதம்**

தீய எண்ணங்களை உடையவர்களாகவும், நோய்கள் பலவும் உள்ளவர்களாகவும், பிறரின் காரியங்களைத் தனது காரியம் போல நினைத்துச் செய்கின்றவர்களாகவும், உணவுப் பிரியர்களாகவும், தெய்வநம்பிக்கை கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

**நான்காம் பாதம்**

தனிமையை விரும்புபவர்களாகவும், நண்பர்கள் அதிகம் இல்லாதவர்களாகவும்,குடும்பத்தில் பற்று இல்லாதவர்களாகவும் புகழுக்கு மயங்குபவர்களாகவும், ஆசார அனுட்டானங்களை கைக்கொள்பவர்களாகவும் இருப்பார்கள்.

**கேட்டை : முதலாம் பாதம்**

கலைகளில் வல்லவர்களாகவும், பேச்சு வன்மையும், எழுத்து வன்மையும் உள்ளவர்களாகவும், சுயநலன்கள் உள்ளவர்களாகவும், விகடமாகப் பேசுபவர்களாகவும், அதிகம் காமஉணர்வு உள்ளவர்களாகவும், உடல் வலிமையுள்ளவர் ~களாகவும் குடும்பத்தை நேசிப்பவர்களாகவும் இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம்**

பேச்சால் காரியங்களைச் சாதிப்பவர்களாகவும், விகடமாகவும் கேலியாகவும் பேசுபவர்களாகவும், வயிற்றில் நோய்கள் உள்ளவர்களாகவும், ஆராயாது, கோபம் கொள்பவர்களாகவும், சண்டைப் பிரியர்களாகவும், கலைகளில் திறமை உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

**மூன்றாம் பாதம்**

பிறருடன் முரண்படுபவர்களாகவும், நீதி நியாயங்களை உணராதவராகவும், தனக்குத் தேவையில்லாத விடயங்களில் தலையிட்டு மனவேதனைகள் அடைபவர்களாகவும், தோல் வியாதிகளை உடையவர்களாகவும் முற்கோபக்காரர்களாகவும் இருப்பார்கள்.

**நான்காம் பாதம்**

தனது நலன்களுக்காகத் தீயசெயல்களையும் அஞ்சாது செய்பவர் களாகவும், தன்குலப் பெருமையைக் கூறிப் பெருமைப் படுபவர்களாகவும், மற்றவர்களைக் கெடுக்கும் குணம் கொண்டவர்க ளாகவும், நீதி, நியாயம்

பார்காதவர்களாகவும், தெய்வ நம்பிக்கை குறைந்தவர்களாகவும் இருப்பார்கள்.

**மூலம் : முதலாம் பாதம்**

அற்பமான புத்தியுடையவர்களாகவும், மற்றவர்கள் வாழ்வதைப் பார்த்துப் பொறாமைப்படுபவர்களாகவும், ஏமாற்றுக்குணங்கள் கொண்டவர்களாகவும், தெய்வத்தை வணங்கிய பின் பாவச்செயல்களைச் செய்பவர்களாகவும், யாரையும் நம்பாதவர் களாகவும் இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம்**

கல்வியில் மேம்பட்டவர்களாகவும், குள்ளப்புத்திகள் உள்ளவர்க ளாகவும், பொய் பேசுதல், ஏமாற்றுதல், மந்திர தந்திரங்கள் செய்தல், ஆடம்பரமாக வாழ்தல், பிறருடன் ஒத்துப்போகாது விதண்டாவாதம் பேசுபவராகவும், இருதய நோய்களுக்கு ஆளாகுபவராகவும் இருப்பார்கள்.

**மூன்றாம் பாதம்**

சோம்பல்தன்மை மிக்கவர்களாகவும், ஊர் சுற்றுபவர்களாகவும், தனது நலனில் அதிக அக்கறை கொண்டவர்களாகவும், அழகான உடற்கட்டை உடையவர்களாகவும், பில்லி, சூனியம், ஏவல், மாந்திரீகம் போன்றவற்றில் மிகுந்த நம்பிக்கை உடையவர்களாகவும் இருப்பார்கள்.

**நான்காம் பாதம்**

மிகுந்த மனவலிமையும், கல்வி உடையவர்களாகவும் கல்வி சம்பந்தமான தொழில்களில் மிகுந்த திறமை உடையவர்களாகவும், காரியங்களைச் சாதிப்பதில் வல்லவர்களாகவும், கலகலப்பாகப் பேசித் தனது நலன்களை நிறைவேற்றுபவர்களாகவும் இருப்பார்கள்.

**பூராடம் : முதலாம் பாதம்**

எவ்வேளையிலும் மகிழ்வாக இருப்பவர்களாகவும், கல்வியில் திறமை உடையவர்களாகவும், மேலான தொழிலைச் செய்பவர்களாகவும், மக்களால் விரும்பப்படுபவர்களாகவும், தர்மங்கள் செய்பவர்களாகவும் குடும்பத்தில் பற்று மிகுந்தவர்களாகவும், இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம்**

நண்பர்கள் இல்லாதவர்களாகவும், மக்களால் வெறுக்கப்படுப ~ வர்களாகவும், தீய செயல்களை அஞ்சாது செய்ய விரும்புபவர்களாகவும், குடும்பத்தினரோடு முரண்படுபவர்களா கவும், உறவினர்களால் வெறுக்கப்படுபவர்களாகவும், இருப்பார்கள்.

**மூன்றாம் பாதம்**

பிறருடன் தர்க்கப்படுபவர்களாகவும், தான் நினைத்தவை தான் சரியானவை என்ற பிடிவாத குணம் கொண்டவர்களாகவும், தோல், வியாதிகளை உடையவர்களாகவும், தனவந்தர்களா கவும், தீய எண்ணங்கள் கொண்டவர்களாகவும், இளவயதில் தாயை இழக்கக்கூடியபலன் உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

**நான்காம் பாதம்**

மனவலிமையும், உடல் வலிமையும் கொண்டவர்களாகவும், தனது கருத்துக்களை விட்டுக் கொடுக்காது விவாதிப்பவர்களா கவும், அற்பமான எண்ணங்களையும், குள்ளப் புத்திகளையும் கொண்டவர்களாகவும், பெண்களால் வெறுக்கப்படுபவர்களா கவும், செல்வமுள்ள சுயநலவாதிகளாகவும் இருப்பார்கள்.

உத்திராடம்: **முதலாம் பாதம்**

கல்வியில் மேன்மை உள்ளவர்களாகவும், நல்ல தொழில் பார்ப்பவர்களாகவும்,புத்திசாதுரியத்துடன் நடந்து கொள்பவர்க ளாகவும், சகல வளங்களைப் பெற்றவர்களாகவும், குடும்பத்தில் பற்று மிக்கவர்களாகவும், தான தர்மம் செய்தல், இரங்குதல், போன்ற நற்குணங்கள் உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம்**

கல்வி கேள்விகளில் திறமை மிக்கவர்களாகவும், பேச்சு வன்மை உள்ளவர்களாகவும், சோதிடத்தில் நாட்டம் உள்ளவர்களாகவும், மன உறுதியுள்ளவர்களாகவும், தான தர்மங்களில் ஈடுபடாதவர்களாகவும், தனது காரியத்தை பார்ப்பதில் வல்லவர்களாகவும் இருப்பார்கள்.

**மூன்றாம் பாதம்**

தருணத்திற்கேற்றவாறு அகங்காரமாகப் பேசித்தனது காரியங்களைச் செய்து முடிப்பதில் வல்லவர்களாகவும், சுயநலம், தீய செயல்கள், முன்கோபம்,

பிறரை மதிக்காமை, இரக்கமின்மை போன்ற குணங்களை உடையவர்களாகவும், குடும்பச் செலவையும் கணக்குப் பார்ப்பவர்களாகவும் இருப்பார்கள்.

**நான்காம் பாதம்**

திடமானதேக அமைப்புக் கொண்டவர்களாகவும் தனது காரியங்களைச்செய்து முடிப்பதில் வல்லவர்களாகவும் உறவினரோடு கலகலப்பாகப்பேசி உறவாடி உதவுபவர்களாகவும், தற்பெருமை மிக்கவர்களாகவும், செல்வதைச் சேர்ப்பதில் வல்லவர்களாகவும் இருப்பார்கள்.

திருகோணம் : **முதலாம் பாதம்**

தைரியம் மிக்கவர்களாகவும், கல்வியில் திறமையுள்ளவர்களா கவும், தான் என்ற கர்வம் கொண்டவர்களாகவும், சாத்திர சம்பிரதாயங்களிலும் கடவுளிலும் அதீத நம்பிக்கை கொண்டவர்களாகவும், நண்பர்கள் அதிகம் உள்ளவர்களா கவும், குடும்பத்தினர் மீதும் உறவினர்கள் மீதும் பற்றுக்கொண்டவர் களாகவும் இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம்**

கல்வியாளர்களாகவும், திறமைகள் பலவும் உள்ளவர்களா கவும், கலைகளில் வல்லுனர்களாகவும், தனவந்தர்களாகவும், திறமையுள்ள வர்களை மதிக்கும் தன்மை கொண்டவர்களாகவும், காம உணர்ச்சி அதிகம் உள்ளவர்களாகவும், பிறரை நம்பாதவர்களாகவும், உள்ளதை நேரிற் பேசுபவர்களாகவும் இருப்பார்கள்.

**மூன்றாம் பாதம்**

சமூகசேவைகள் செய்பவர்களாகவும், கற்பனை மிகுந்தவர்களாகவும், மற்றவர்களைப் புரிந்து கொள்பவர்களா கவும், இரக்கம் இல்லாதவர்களாகவும், தானதர்மங்களில் பெருவிருப்பு இல்லாதவர்களாகவும், எளிதில் ஏமாற்றமடையாதவர்களாகவும், அடிக்கடி நோய்வாய்ப்படுபவராகவும் இருப்பார்கள்.

**நான்காம் பாதம்**

செல்வம், செல்வாக்கு உள்ளவர்களாகவும், தான தர்மங்களில் நம்பிக்கை உள்ளவர்களாகவும், காணி, பூமி உடையவர்களா கவும், தீய எண்ணங்கள் உடையவர்களாகவும், கல்வியறிவு உள்ளவர்க ளாகவும், இரக்கமும் அன்பும் கொண்டவர்களா கவும் இருப்பார்கள்.

அவிட்டம் : **முதலாம் பாதம்**

ஆலோசிக்காது தான் நினைத்தபடி கருமமாற்றுபவர்களாகவும், பிறரின் சொற்களைக் கேட்காதவர்களாகவும், காணி, பூமி, செல்வம், செல்வாக்குகள் உள்ளவர்களாகவும், எதையும் துணிவுடன் செய்பவர்களாகவும் இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம்**

குடும்பத்தை அனுசரித்துச் செல்பவர்களாகவும், எந்நேரமும் யோசனையில் இருந்து பல்வேறு வகையான முரணான எண்ணங்களைக் கொண்டவர்களாகவும், அகங்காரம் கொண்டவர்க ளாகவும், பிறரை மதிக்காதவர்களாகவும், அசடுகளாகவும் இருப்பார்கள்.

**மூன்றாம் பாதம்**

கம்பீரம், அழகு, தைரியம் என்பன உடையவர்களாகவும், நீதி, நேர்மை தவறாதவர்களாகவும், கடமை உணர்வு உள்ளவர்களாகவும், தெய்வ நம்பிக்கை மிக்கவர்களாகவும், குடும்பத்தில் பற்றுக் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

**நான்காம் பாதம்**

ஆராயாதுபேசி முரண்படுபவர்களாகவும், தைரியசாலிகளாகவும், உடலில்ரோமம் மிகுந்தவர்களாகவும், பிறரை ஏமாற்றித் தனது காரியத்தைச் சாதிப்பவர்களாகவும், காமக்குணம் மிகுந்தவர்களாகவும், பிறரை மதிக்காதவர்களா கவும், கர்வம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

சதயம் : **முதலாம் பாதம்**

அழகான தோற்றத்தையும் திடமான மனதையும் கொண்டவர்களாகவும், பண்ணைத் தொழிலை விரும்புபவர்களா கவும், தான தர்மங்களில் விருப்பம் கொண்டவர்களாகவும், தனது காரியத்தைச் சாதிப்பவர்களாகவும், வரவுக்கு மிஞ்சிய செலவு செய்பவர்களாகவும் இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம்**

ஏமாற்றுக் குணங்களைக் கொண்டவர்களாகவும், முற்கோபிகளா கவும், தானதர்மங்களில் விருப்பம்உள்ளவர்களாகவும், செயல்வீரர்களாகவும், தீய வழிகளில் செல்வம் சேர்க்கும் தன்மை கொண்டவர்களாகவும், தெய்வ நம்பிக்கை உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

**மூன்றாம் பாதம்**

பொதுநல நோக்கங்கள் கொண்டவர்களாகவும், பிறருக்கு உதவும் தன்மை கொண்டவர்களாகவும், நற்குணங்கள் பலவும் கொண்டவர்களாகவும், எளிதில் உணர்ச்சி வசப்படுபவர்களா கவும், நினைத்தவற்றைச் சாதிப்பவர்களாகவும் இருப்பார்கள்.

**நான்காம் பாதம்**

எதையும் பொறுமையுடன் கேட்டுத் தெரிந்து கொள்பவர்களா கவும், தீர ஆலோசித்து முடிவு எடுப்பவர்களாகவும், நல்ல பண்புகளும், உதவும் மனப்பாங்கும் உள்ளவர்களாகவும், முயற்சியுடையவர்களாகவும், மதிப்பு, புகழ், கௌரவம் என்பன உடையவர்களாகவும், இருப்பார்கள்.

பூரட்டாதி : **முதலாம் பாதம்**

பிறரின் மன இயல்புகளை அறிந்து அதற்கேற்ப நடந்து நல்ல பெயரைப் பெற்றுக் காரியங்களைச் செய்து முடிப்பவர்களா கவும், குடும்பத்துடன் மகிழ்வுடன் வாழ்பவர்களாகவும், குடும்பத்தின் தேவைகளை உடன்நிறைவேற்றுபவர்களாகவும், தெய்வ பக்தியும், மகிழ்ச்சியும் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம்**

குடும்பத்தில் பற்றுள்ளவர்களாகவும், காம உணர்வு உள்ளவர்களாகவும், ஆசார அனுட்டானங்களிலும், கடவுளிலும் நம்பிக்கை கொண்டவர்களாகவும், ஆராயாது பேசுபவர்களா கவும்,பெரியவர்களின்

மதிப்பைப் பெறுபவர்களாகவும், மக்களால் மதிக்கப்படுபவர்களாகவும் இருப்பார்கள்.

**மூன்றாம் பாதம்**

கல்வியில் மேம்பட்டவர்களாகவும். கலைகளில் நாட்டம் உள்ளவர்களாகவும், மற்றவர்களைப் பேச்சால் கவரக்கூடியவர்களாகவும், உணவு வகைகளில் ஆசை அதிகம் உள்ளவர்களாகவும், செல்வம் சேர்ப்பதில் ஆசை உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

**நான்காம் பாதம்**

நீதி, நேர்மை தவறாதவர்களாகவும், சத்தியத்திற்காகப் போராடுபவர்களாகவும், நண்பர்களுடன் கலகலப்பாகப் பேசி எவரையும் கவர்பவர்களாகவும், அழகானவர்களாகவும், உதவிகள் செய்வதில் விருப்புடையவர்களாகவும், மதிப்பு மரியாதை உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

உத்தரட்டாதி : **முதலாம் பாதம்**

திடமான மனமுள்ளவர்களாகவும், தமது திட்டங்களை எளிதில் மாற்றிக் கொள்ளாதவர்களாகவும், மற்றவர்களைக் கவரும் வண்ணம் பேசக்கூடியவர்களாகவும், கல்வி, செல்வம், செல்வாக்குகள் உள்ளவர்களாகவும், தெய்வ நம்பிக்கையும், தான தர்மங்களில் விருப்பும் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம்**

கல்வியில் திறமைசாலிகளாகவும், திடமான மனம் இல்லாதவர்களாகவும், ஆடை ஆபரணங்களை விரும்புபவர்களா கவும், கபட நோக்கங்கள்

உள்ளவர்களாகவும், உதவிகள் பலவும் தேவையறிந்து செய்பவர்களாகவும், தீய நண்பர்களுடன் தொடர்புகள் உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

**மூன்றாம் பாதம்**

தெய்வநம்பிக்கை மிக்கவர்களாகவும், குடும்பத்தினர், உறவினர், நண்பர்களுடன் தேவையின்றி முரண்படுபவர்களாகவும், முற்கோபம் கொண்டவர்களாகவும், கீழான புத்திகளைக் கொண்டவர்களாகவும், ஆராயாது கருமமாற்றுபவர்களாகவும் இருப்பார்கள்.

**நான்காம் பாதம்**

கல்வி, அறிவு, புத்திக்கூர்மை உள்ளவர்களாகவும், குடும்பத்தவர், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரை மதித்து நடப்பவர்களாகவும், தானதருமங்களில் விருப்பு உடையவர்களா கவும், பயிர்ச்செய்கையில் ஆர்வம் உள்ளவர்களாகவும், திருப்தி இல்லாதவர்கள் ஆகவும் இருப்பார்கள்.

ரேவதி : **முதலாம் பாதம்**

கல்வியறிவு உள்ளவர்களாகவும், பிறரின் பேச்சைக் கேளாதவர்களாகவும், குடும்பத்தினரில் அதிக பற்றுக் கொண்டவர்ளாகவும், கலகலப்பானவர்களாகவும், சிறிய விடயங்களையும், பெரிதாக எடுத்து விவாதிக்கும் தன்மை கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

**இரண்டாம் பாதம்**

மிகவும் எளிமையான வாழ்க்கையை விரும்புபவர்களாகவும், ஆராயாது வாதிட்டு முற்கோபத்தால் கலகத்தில் ஈடுபடுபவர்களாகவும், தன்னைப் புகழ்பவர்களாகவும், கர்வம்கொண்டவர்களாகவும், தெய்வ நம்பிக்கையும், ஆசார அனுட்டானங்களில் பற்றுக் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

**மூன்றாம் பாதம்**

வாழ்க்கையில் அடிக்கடி துன்பங்களைச் சந்திப்பவராகவும், எதற்கும் உணர்ச்சி வசப்படுபவராகவும், மற்றவர்களை மதிப்பவர்களாகவும், முயற்சியில்லாதவர்களாகவும், பிறருக்குத் தீங்குகள் செய்பவர்களாகவும், குடும்பத்தவர் அயலவர், நண்பர்களுடன் முரண்படுபவர்களாகவும் இருப்பார்கள்.

**நான்காம் பாதம்**

நீதி,நேர்மை உடையவர்களாகவும், வாக்குத் தவறாதவர் களாகவும், தான தர்மங்கள் செய்பவராகவும், மற்றவர்களின் துன்பங்களில் பங்கேற்பார்களாகவும், எதிரிகளை இலகுவில் வெற்றி கொள்வார்களாகவும், சகல சௌகரியங்களையும் தமது முயற்சியால் தேடிக் கொள்பவர்களாகவும் இருப்பார்கள்.

## சந்திரராசிப் பலன்

மேடம் :

மேடராசியில் பிறந்தவர்கள்கள், செல்வத்திற்கு உரியவர்களா வார்கள், காணி,பூமி, நிலபுலன்களுக்கு உரியவர்களாகவும், புகழும் கீர்த்தியும், அரச கௌரவங்களும் பெறுவார்கள். இவர்கள் சுயநலம் உடையவர்களாகவும், முன்கோபிகளாகவும், மற்றவர்களைப் புரிந்து கொள்ளாதவர்களாகவும், கல்வி, கேள்விகளில் சிறந்தவர்களா கவும், உயர் பதவிகள் வகிப்பவர்களாகவும் இருப்பார்கள்.

இடபம் :

இடபராசியில் பிறந்தவர்கள், தொழிலில் சிறிது சோம்பல் தன்மையும், எதையும் அலட்சியமாக ஏற்கும் பண்புகளும் கொண்டிருப்பார்கள். கணிதத்தை விருப்பிக் கற்பார்கள். அலங்காரப் பிரியர்களான இவர்கள் ஆடை, ஆபரணங்களைச் சேர்ப்பர். சாத்திர சம்பிரதாயங்களில் நம்பிக்கையும், விகடமான போக்கும், குடும்பத்தில் பற்றும், பிள்ளைகளின் முன்னேற்றத்தில் அதிக கவனமும் கொண்டிருப்பார்கள். செல்வம், செல்வாக்குப், பொருள் பண்டங்கள் இருப்பினும் கஞ்சர்களாகவே இருப்பார்கள்.

மிதுனம் :

மிதுன ராசியில் பிறந்தவர்கள், திட்டமிட்டுச் செயலாற்றுவதில் வல்லவர்களாகவும், கணிதத்தில் தேர்ச்சி பெற்றவர்களாகவும், பேச்சு வல்லமை உள்ளவர்களாகவும் இருப்பார்கள். தமது செயலை முடிக்கத் தந்திரங்களைச் செய்வார்கள். ஆசார அனுட்டானங்களில் நம்பிக்கையும்,

கண்டிப்பும், ஈயாத தன்மையும் கொண்டவர்களாகவும், கலைகளில் வல்லவர்களா கவும், தனவந்தர்களாகவும் இருப்பார்கள்.

கடகம் :

கடகராசியில் பிறந்தவர்கள், கல்வியில் திறமையும், கலகலப்பான சுபாவமும், ஆசார அனுட்டானங்களில் அளவுக்கு அதிகமான பற்றுக் கொண்டவர்களாகவும், சுயநலன் மிக்கவர்களாகவும், ஏமாற்றுப் பேச்சும், திறமையும், புகழைத் தேடிச்செல்வபவர்களாகவும் இருப்பார்கள். அன்பு காட்டுவதிலும் அக்கறை கொள்வதிலும் காரிய மாற்றுவதிலும், திட்டமிடல் இருக்கும். மற்றவர்களை எளிதில் நம்பமாட்டார்கள். காரணமின்றி யாருடனும் பழகமாட்டார்கள். சமூகத்திடம் நன்மதிப்புப் பெறாதவர்களாகவும் இருப்பார்கள். தீய வழிகளில் சொத்துச் சேர்ப்பதும், பிறரை ஏமாற்றுவதும் இவர்களுக்குக் கைவந்த கலை.

சிம்மம் :

இந்த ராசியில் பிறந்தவர்கள் எதற்கும் அஞ்சாத தைரியம் உடையவர்களாகவும், வாக்கு வன்மையும், கல்வியில் மேன்மையும், சாத்திர சம்பிரதாயங்களில் நம்பிக்கையும் உடையவர்களாகவும், புகழுடனும் செல்வத்துடனும், சமூகத்தில் நன்மதிப்புடனும் வாழ்பவர்களாகவும் இருப்பார்கள். தொழிலில் ஊக்கமும், செல்வம் சேர்ப்பதில் விருப்பும் கொண்ட இவர்கள் குடும்பத்தவர்களுடன் மகிழ்வுடன் வாழ்வார்கள். மேலான பதவி வகிப்பவர்கள், திமிரும், ஆணவமும் கொண்டு மற்றவர்களை மதிக்காது வாழ்வார்கள்.

கன்னி :

இந்த இராசியில் பிறந்தோர் வாயாடிகளாகவும், அகம்பாவம் மிக்கவர்களாகவும் இருப்பார்கள். செல்வத்தைப் பெற்றிருப்பினும் அடிக்கடி பணத்தட்டுப்பாடு நிலவும். கல்வியறிவும், தயாள குணமும் கொண்ட இவர்கள், பிறருக்கு உதவிகளும் ஆலோசனைகளும் கூறுவார்கள். ஆசார அனுட்டானங்களில் நம்பிக்கை கொண்டுள்ள இவர்கள் பிறருக்கு உதவுவதில் விருப்பமுள்ளவர்களாக இருப்பார்கள். பெற்றோர், உறவினர்கள், நண்பர்களுக்காகச் செலவு செய்தபோதும் உதவி பெறுவோர் இவர்களை மதிக்க மாட்டார்கள்.

துலாம் :

இந்த இராசியில் பிறந்தோர், சகல வசதிகளையும் கொண்டவர்களாக இருப்பார்கள். பொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படமாட்டாது. ஏற்பட்டாலும் பிறர் வலிய வந்து உதவுவார்கள். பெரிய மனிதர்களின் உதவியும் ஒத்தாசைகளும் இவர்களுக்கு எப்போதும் இருக்கும். குடும்பப் பொறுப்புள்ளவர்களாக இருப்பார்கள். தெய்வநம்பிக்கை உள்ள இவர்கள் உறுதியான மனமும், உறுதியான பேச்சும், கண்ணியமானபோக்கும் கொண்டவர்களாகவும், அடுத்தவர்களின் விடயத்தில் தலையிடாதவர்களாகவும், தனது கருமங்களில் அக்கறை கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

விருட்சிகம் :

விருட்சிக ராசியில் பிறந்தவர்கள், தாம் செய்ய நினைப்பதை நன்கு திட்டமிட்ட பின்பே அவதானத்துடன் செய்வார்கள். மனத்தைரியமும் உடற்பலமும் கொண்ட இவர்கள் யாரையும் வசீகரமாகப் பேசிக்காரியத்தைச்

சாதிப்பார்கள். நல்ல பண்பு கொண்ட இவர்களுக்கு உதவப் பலர் காத்திருப்பார்கள். பெரியவர்களின் மீது விசுவாசமும், குடும்பத்தின் மீது பற்றும், கொண்ட இவர்கள் ஆடம்பரப் பிரியர்கள். புகழ்ந்து பேசினால் மயங்கிவிடுவார்கள். சண்டை சச்சரவுகளை விரும்ப மாட்டார்கள். ஆனால் வரும் பிரச்சினைகளைத் தைரியமாக எதிர்கொள்வர்.

தனுசு :

சிறுவயதிலிருந்தே செல்வம், செல்வாக்கு உள்ளவர்களா கவும், கல்வியறிவு மிக்கவர்களாகவும் இருப்பார்கள். தெய்வ வழிபாட்டில் நம்பிக்கையும், குடும்பத்தில் விசுவாசமும், பெரியவர்களின் நட்பையும் பெற்றிருப்பார்கள். தமது காரியங்களைச் சாதிப்பதில் வல்லவர்களாகவும், உயர் பதவியைப் பெறுவதில் அக்கறை உள்ளவர்களாகவும் இருப்பார்கள். அன்பான குடும்பம் அமையும். இறுதிக்காலம் வரை செல்வத்துடன் வாழும் இவர்கள் ஆடம்பரப் பிரியர்கள். சுயநலம் மிக்கவர்கள்.

மகரம் :

இந்த இராசியில் பிறந்தவர்கள், கல்வி, கலை, கேள்விகளில் மேன்மையுள்ளவர்களாகவும், உயர்ந்த எண்ணங்களை உடையவர்க ளாகவும், தெய்வபக்தி மிக்கவர்களாகவும், அந்தஸ்துக்கு ஏற்றவர்களோடு நட்பும், பெரியவர்களின் அன்பும் ஆதரவும் உள்ளவர்களாகவும், நேர்மையான பேச்சும், மதிப்பான வாழ்வும் கொண்டவர்களாக இருந்தாலும், குடும்பத்தில் அடிக்கடி குழப்பங்கள் உண்டாகிக் கலங்குபவர்களாக இருப்பார்கள். தன்னை மதிக்காதவரை மதிக்காத இவர்கள் செய்ய

நினைப்பவற்றைச் செய்து முடித்த பின்பே வேறு விடயங்களில் கவனம் செலுத்துவார்கள். செல்வம் செல்வாக்குடன் பிற்காலத்தல் வாழ்வார்கள்.

## கும்பம் :

இந்த இராசியில் பிறந்தவர்கள் கல்வியாளர்களாகவும், ஆசார அனுட்டானங்களை அனுட்டிப்பவர்களாகவும் இருப்பார்கள். கல்விக்கேற்றபடி உயர் பதவிகள் பெறுவது கடினமானதாக இருக்கும். மற்றவர்களை மதியாத குணமும் பழிவாங்கும் குணமும் கொண்டவர்களாக இருப்பார்கள். தன்னை அளவுக்கு மீறி நம்பும் தன்மையும் அதனால் அவமானமடையும் நிலையும் இருக்கும். குடும்பத்தினர் என்ன செய்தாலும் குறை கூறுபவர்களாகவும் இருப்பார்கள். பெண்களுடனான உறவுகள் பிரச்சினைகளைத் தருவதாக அமையும்.

## மீனம் :

இந்த இராசியில் பிறந்தவர்கள் மனதுக்குள் திட்டமிட்டு இரகசியமாகத் தனது காரியங்களைப் பார்ப்பார்கள். பின் தான் செய்த செயல்களைக்கூறிப் பெருமைப்படுவார்கள். நண்பர்களின் சேர்க்கை குறைவானதாக இருக்கும். பேச்சின்படி வாழ மாட்டார்கள். சொன்னவற்றை உடனே மறந்து இன்னொன்றைச் சொல்வார்கள். பணம் பொருள் ஆடை ஆபரணங்களில் மிக்க பிரியமுள்ளவர்களாக இருப்பார்கள். பிறரை ஏவிக் கருமம் ஆற்றி வாழ்வார்கள். முன்எச்சரிக்கையுடன் வாழ்ந்தாலும் அடிக்கடி சிக்கல்களில் மாட்டிக் கொள்வார்கள்.

# கோசார பலன்

தான் இருக்கும் இடத்தை விட்டு அடுத்த இடத்திற்கு ஒரு கிரகம் செல்வதால் மனிதனுக்கு ஏற்படப்போகும் பலனைக் கோசார பலன் என்பர். ஒரு குழந்தை பிறந்த நேரத்தை அடிப்படையாகக் கொண்டு கிரகங்களின் நிலையைக் கணிப்பது சாதகம் எனப்படும். இதைத் தசாபுத்தி பலன் என்றும் சொல்வர். கிரகங்கள் எப்போதும் அசைந்து கொண்டே இருக்கும். அவ்வசைவின் மூலம் ஒரு கிரகம் ஒரு வீட்டில் இருந்து இன்னொரு வீட்டிற்குச் செல்லும். இந்த இடமாற்றத்தின் பலன்கள் கோசார பலன் எனப்படும். அதனால் ஒருவரது எதிர்காலப் பலனைக்கூறுவதற்கு ஜாதகத்தையும் கோசாரத்தையும் கணித்தல் வேண்டும்.

ஜாதகத்திலும் கோசாரத்திலும் கிரகங்கள் நல்ல இடங்களில் இருந்தால் நல்ல பலன்கள் சாதருக்கு உண்டாகும்.

ஜாதகப் பலன் நன்றாகவும் கோசராபலன் தீதாகவும் இருந்தால் நல்ல பலன்கள் குறைவானதாக இருக்கும்.

ஜாதகப்பலன் நன்றாக இருந்து கோசார பலன் தீதாக இருந்தாலும் நல்ல பலனை எதிர்பார்க்க முடியாது.

கீழுள்ள பலன்களைப் பார்க்கு முன் அந்த வருடப் பஞ்சாங்கத்தை எடுத்துக் கிரகங்களின் நிலையை அறிந்து கொள்ளவும். குரு ஒவ்வொரு ராசியிலும் ஒரு வருடம் சஞ்சரிப்பார். ராகுவும் கேதுவும் ஒரு இராசியில் ஒன்றரை வருடங்கள் சஞ்சரிப்பார்கள். சனி ஒரு ராசியில் இரண்டரை வருடங்கள்

சஞ்சரிப்பார். இதனால் இந்த நால்வரின் பயனே உச்சமாக இருக்கும். ஏழரைச் சனியென்பது பன்னிரண்டாவது, முதலாவது இரண்டாவது ராசிகளில் சனி சஞ்சரிப்பதாகும். இக்காலம் பெரும்பாலும் துன்பங்கள் நிறைந்ததாகவே இருக்கும்.

## சாதகத்தில் சந்திரன் உள்ள இராசிக்குக் கிரகங்களின் பலன்.

**சூரியன் :**

**இலக்கினத்தில் இருந்தால்,** நோய் குடும்பக் கஷ்டம், தொல்லைகள், விரோதம், நட்டம் உண்டாகும்.

**இரண்டில் இருந்தால்,** தொழிலில் நட்டம், காரியக்கேடு, அகால போசனம், குடும்பக் கலகம், நோய் உண்டாகும்.

**மூன்றில் இருந்தால்,** பணவருகை, காரிய சித்தி, சுபச்செலவு, கடன் வசூல், மகிழ்ச்சி உண்டாகும்.

**நான்கில் இருந்தால்,** பெண்களால் துன்பம், அவமானம், பண விரயம், வறுமை, காரியக் கேடு உண்டாகும்.

**ஐந்தில் இருந்தால்,** பகைவரால் தொல்லை, பணக்கஷ்டம், குடும்ப விரோதம், நண்பருடன் பகை, காரியக்கேடு உண்டாகும்.

**ஆறில் இருந்தால்,** தொழில்விருத்தி, பணவரவு, ஆபரணச் சேர்க்கை, நண்பர் உதவி, ஆதாயம் உண்டாகும்.

**ஏழில் இருந்தால்,** அடிமைப்படல், தொழிலில் சிக்கல், அவமானம், பணத்தட்டுப்பாடு பகை உண்டாகும்.

**எட்டில் இருந்தால்,** அரச பயம், தொழில் இழப்பு, விரோதம், பணமுடை பகைவரால் துன்பம் உண்டாகும்.

**ஒன்பதில் இருந்தா**ல், விபத்து, முரண்பாடு, வழக்கு, பணத்தட்டுப்பாடு, நோய் உண்டாகும்.

**பத்தில் இருந்தால்,** முயற்சி பலிதம், தொழில் விருத்தி, பணவரவு, சுபச்செலவு, ஆபரணச்சேர்க்கை உண்டாகும்.

**பதினொன்றில் இருந்தால்,** வருமானம் உயர்வு, தொழில் விருத்தி, காணி பூமிச் சேர்க்கை, புத்திரரால் மகிழ்ச்சி உண்டாகும்.

**பன்னிரண்டில் இருந்தால்,** மனக்கிலேசம், தொழில் மாற்றம், துன்பம், பணக்கஷ்டம், நோய் உண்டாகும்.

**சந்திரன்**

**இலக்கினத்தில் இருந்தால்,**விருந்தினர் வருகை, பெண்களால் உதவி, நிம்மதி, பணச்சேர்க்கை, குடும்பசுகம்.

**இரண்டில்இருந்தால்,** தொழிற்கேடு, குடும்பக்கலகம், பணமுடை, பகை, கலகம்.

**மூன்றில் இருந்தால்,** தனலாபம், ஆடை ஆபரணச்சேர்க்கை, குடும்பத்தில் மகிழ்ச்சி, பகைநீங்கல், மகிழ்ச்சி

**நான்கில் இருந்தால்,** உறவினர் பகை, தன நாசம், தொழிற்கேடு, பகைவரின் தொல்லை, இடமாற்றம்.

**ஐந்தில் இருந்தால்,** நோய் அதிகரித்தல், காரியக்கேடு, மனக்குழப்பம், புத்திரரால் கவலை, பெண்களால் தொல்லை.

**ஆறில் இருந்தால்,** பகைநீங்கல், குடும்பத்தில் மகிழ்ச்சி, தனவரவு, வஸ்திர லாபம், வீடு கட்டல்.

**ஏழில் இருந்தால்,**தனச் சேர்க்கை, பிறநாட்டினரால் உதவி, குடும்பசுகம், கல்வியில் மேன்மை, ஆபரணச் சேர்க்கை.

**எட்டில் இருந்தால்,** கலகம். எதிரிகளால் தொல்லை, இடமாற்றம். களவுபோதல், குடும்பபிரிவு.

**ஒன்பதில் இருந்தால்,** திருடர் பயம், நோய்த்தாக்கம், பணக்கஷ்டம், விஷபயம், தொழிலில் நட்டம்.

**பத்தில் இருந்தால்,** பதவி உயர்வு, தனவரவு, நோய் நீங்கல், சரியான இடமாற்றம், மகிழ்ச்சி

**பதினொன்றில் இருந்தால்,** தொழிலில் வருமானம் அதிகரிப்பு, உறவினர் உதவி, மகிழ்ச்சி, எண்ணியவை கைகூடல், சுகம்.

**பன்னிரண்டில் இருந்தால்,** காரியத்தடை, பகை அதிகரித்தல், மனக்குழப்பம், முரண்பாடு, பணத்தட்டுப்பாடு.

## செவ்வாய் கேது :

**இலக்கினத்தில்இருந்தால்,**பகைவரால் தொல்லை, தொழிற்கேடு, நிம்மதி குறைவு, நட்டம், நோய்

**இரண்டில் இருந்தால்**, முரண்படல், வாக்குவாதம், அரச பயம், பகைவரால் தொல்லை.

**மூன்றில் இருந்தால்**, தெய்வ அனுக்கிரகம், தனவரவு, காரியசித்தி, சத்துரு ஐயம், குடும்பநலம்.

**நான்கில் இருந்தால்**, விஷபயம், கடன்படல், நோய், வரவுக்கதிகமான செலவு, குடும்பக் கஷ்டம்.

**ஐந்தில் இருந்தால்,** குடும்பத்தில் குழப்பம், அரசபயம், எதிரிகளால் தொல்லை, தொழிலில் நட்டம், விபத்து

**ஆறில் இருந்தால்,** பொருட்சேர்க்கை, காணி, பூமி சேருதல், எதிரிகள் உதவல், குடும்பத்தில் மகிழ்ச்சி, வசதியான இடாற்றம்.

**ஏழில் இருந்தால்,** அலைச்சல், திருடர்பயம், குடும்பக்கலகம், சத்துருபீடை, தொழிலில் நட்டம்.

**எட்டில் இருந்தால்,** விபத்து நோயால் செலவு, தீ, விஷபயம், துன்பம் தரும் இடமாற்றம், மனக்குழப்பம்

**ஒன்பதில் இருந்தால்,** பொருள் இழப்பு, பணக்கஷ்டம் நோயால் அவதி, குடும்பநலன் பாதிப்பு, தோல்வி.

**பத்தில் இருந்தால்,** காரியத்தடை, திருடர்பயம், தோல்வியாதி, மனக்குழப்பம், விபத்து.

**பதினொன்றில் இருந்தால்,** தனலாபம், சுபச்செலவு, காரிய வெற்றி, ஆடை ஆபரணச் சேர்க்கை, விரும்பியவை நிறைவேறல்.

**பன்னிரண்டில் இருந்தால்,**

பித்தரோகம், பற்றற்ற நிலை, வீண்கலகம், தொழிலில் சிக்கல், முரண்பாடு.

## புதன்

**இலக்கணத்தில் இருந்தால்,** தொழிற்கேடு, குடும்பத்தில் கலகம் வேண்டாத இடமாற்றம், பிரிவு, பணச்செலவு,

**இரண்டில் இருந்தால்**, முன்கோபம், முரண்பாடு, அவமானம், தூரதேசவாசம், அடிமைப்படல்,

**மூன்றில் இருந்தால்**, எதிரிகளால் துன்பம், குடும்பத்தில் கலகம், அரசபயம், தொழிற்கேடு, பணத்தட்டுப்பாடு.

**நான்கில் இருந்தால்**, பணச்சேர்க்கை, குடும்பத்தில் மகிழ்ச்சி, நினைத்தவை நிறைவேறல், நண்பர் உதவி, நினைத்தவை நடைபெறும்.

**ஐந்தில் இருந்தால்**, குடும்பப்பிரிவு, விரோதம், முன்கோபம், வழக்கு, தூரதேச வாசம்.

**ஆறில் இருந்தால்,** பதவி உயர்வு, தொழில் விருத்தி, பணச்சேர்க்கை, நினைத்தவை நடைபெறும். குடும்பத்தில் மகிழ்ச்சி.

**ஏழில் இருந்தால்,** குடும்பப்பிரிவு. முரண்பாடு, தனவிரையம், தொழிலில் பிரச்சினை, பகைவர் தொல்லை.

**எட்டில் இருந்தால்,** குடும்பத்தில் மகிழ்ச்சி, தனலாபம், ஜெபம், பூமிசேர்க்கை, நண்பர் உதவி.

**ஒன்பதில் இருந்தால்**, நோயால் தொல்லை, பணவிரையம், மனக்கலகம், பிரிவு, நண்பர் விரோதம்.

**பத்தில் இருந்தால்,** குடும்பத்தில் மகிழ்ச்சி, செல்வம் சேர்தல், தொழில் விருத்தி, குடும்பசுகம், புத்திரப்பேறு.

**பதினொன்றில் இருந்தால்,** பலரின் உதவி கிடைத்தல், நோய் அகலுதல், காரிய சித்தி, குடும்ப மகிழ்ச்சி, தொழில் விருத்தி.

**பன்னிரண்டில் இருந்தால்,** எதிலும் தோல்வி, அன்புடையவரைப் விரோதித்தல், நோய், குடும்பக் கஷ்டம், பிரிவு

## குரு

**இலக்கினத்தில் இருந்தால்,** சோம்பல், முன்கோபம், பகையை வளர்த்தல், நிலைமாற்றம், மனக்குழப்பம்.

**இரண்டில் இருந்தால்,**காரியசித்தி, பொருள்சேர்க்கை, பகைவர் பணிதல், தொழில் விருத்தி, குடும்பத்தில் மகிழ்ச்சி.

**மூன்றில் இருந்தால்,** தொல்லை, தொழில் இழப்பு, முரண்படுதல், பணத்தட்டுப்பாடு, அன்பானவரைப் பகைத்தல்.

**நான்கில் இருந்தால்,** நோய்வாய்ப்படல், உறவினர் விரோதம், முன்கோபம், இடமாற்றம், பணக்கஷ்டம்.

**ஐந்தில் இருந்தால்,** பெண்களால் உதவி, புத்திரரால் மகிழ்ச்சி, சுபகாரியம் நடத்தல், ஆடம்பரச்செலவு, காரியச்சித்தி.

**ஆறில் இருந்தால்,** மகிழ்ச்சியின்மை, தூரதேச வாசம், நோய்வாய்ப்படல், பணமுடை, நிம்மதிக்குறைவு

**ஏழில் இருந்தால்,** புகழடைதல், செல்வச்சேர்ககை, காரியசித்தி, பெரியோர் உதவி, தொழில் விருத்தி.

**எட்டில் இருந்தால்,** தடுமாற்றம், கொடிய நோய்களால் அவதி, பணச்செலவு, அடிமைப்படல், முன்கோபத்தால் துன்பம்.

**ஒன்பதில் இருந்தால்,** தனச்சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி, தொழிலில் விருத்தி, நினைத்த காரியம் சித்தி, கொண்டாட்டம்.

**பத்தில் இருந்தால்,** தொழில் இழப்பு, பகைவரின் தாக்குதல், குடும்பக் கலகம், புத்திர விரோதம், நிலை தடுமாற்றம்.

**பதினொன்றில்இருந்தால்,** தொழில் விருத்தி, செல்வச்சேர்க்கை, குடும்பத்தல் மகிழ்ச்சி, நினைத்தவை நடைபெறல்,பதவி உயர்வு.

**பன்னிரண்டில் இருத்தால்,** வசதியற்ற இடமாற்றம், பற்றற்ற நிலை, திருடர்பயம், பொருள் இழப்பு, விரோதம்.

## சுக்கிரன்

**இலக்கணத்தில் இருந்தால்,** பெண்களால் உதவி, நிம்மதி, குடும்ப மகிழ்ச்சி, சமூகத்தில் மதிப்பு, தனச்சேர்க்கை.

**இரண்டில் இருந்தால்,** புகழ், மதிப்பு உயரல், அதிஷ்டம், தனலாபம், குடும்பத்தில் மகிழ்ச்சி

**மூன்றில் இருந்தால்,** பதவி உயர்வு, தொழில் விருத்தி, புத்திரப்பேறு, பெரியோர் உதவி, ஆரோக்கியம்.

**நான்கில் இருந்தால்,** செல்வச்சேர்க்கை, உறவினர் உதவி, தொழில் விருத்தி, மதிப்பு உயர்தல், மகிழ்ச்சி.

**ஐந்தில் இருந்தால்,** தனலாபம், பழைய கடன் வசூல், குடும்ப மகிழ்ச்சி, வசதியான இடமாற்றம், பெரியோர் உதவி.

**ஆறில் இருந்தால்,** தொழிலில் நட்டம், காரியத்தடை, முரண்பாடு, தூரதேச வாசம்,

**ஏழில் இருந்தால்,** பெண்களால் துன்பம், அவமானம், காரியக்கேடு, வீண்பழி கேட்டல், பணச்செலவு.

**எட்டில் இருந்தால்,** காணி,பூமி,சேர்தல், ஆடம்பர மனை அமைத்தல், குடும்பத்தில் மகிழ்ச்சி, பதவி உயர்வு, தொழில் விருத்தி.

**ஒன்பதில் இருந்தால்,** குடும்பத்தில் மகிழ்ச்சி, பெண்களால் உதவி, தனச்சேர்ககை, பூமி வாங்குதல், நினைத்தவை நடத்தல்.

**பத்தில் இருந்தால்,** அவமானம், நிலை தடுமாற்றம், பெண்களால் உபத்திரவம், பணமுடை, தொழில் இழப்பு.

**பதினொன்றில் இருந்தால்,** நினைத்தவை நிறைவேறல், தொழில் விருத்தி, செல்வச்சேர்க்கை, பெண்களால் உதவி, குதூகலம்.

**பன்னிரண்டில் இருந்தால்,** செல்வச்சேர்ககை, காணி,பூமி வாங்குதல், வழக்கில் வெற்றி, தொழிலில் சிறப்பு, நண்பர் உதவி.

## சனி, ராகு

**இலக்கினத்தில் இருந்தால்,** திருடர்பயம்,அக்கினியால் பொருள் அழிவு, இடமாற்றம், நண்பர் பகை, அவமானம்.

**இரண்டில் இருந்தால்,** குடும்பக்கலகம், பொருள் இழப்பு, முரண்பாடு, கோபப்படல், தொழில் இழப்பு.

**மூன்றில் இருந்தால்,** தொழிலில் பெருவெற்றி, எதிரிகளை வெல்வர், காரியசித்தி, தனச்சேர்க்கை, குடும்பத்தில் மகிழ்ச்சி.

**நான்கில் இருந்தால்,** குடும்பப்பிரிவு, மனச்சஞ்சலம், தாயார் நோய்வாய்ப்படல், முரண்பாடு, தூரதேச வாசம்.

**ஐந்தில் இருந்தால்,** குடும்பப்பிரிவு, தனச்சேதம், தொழிற்கேடு, நோய்வாய்ப்படல், மனச்சஞ்சலம்.

**ஆறில் இருந்தால்**, காரிய சித்தி, செல்வச்சேர்க்கை, பிரிந்தவர் சேரல், தொழில் விருத்தி, பெரியோர் உதவி.

**ஏழில் இருந்தால்,** குடும்பத்தில் கலகம், தீயோரின் நட்பு, பணச்செலவு, மனச்சஞ்சலம், அவமானம்.

**எட்டில் இருந்தால்**, தொழிற்கேடு, பணமுடை, குடும்பப்பிரிவு இடமாற்றம், மனக்கிலேசம்,

**ஒன்பதில் இருந்தால்**, காரியத்தடை, தீயோர் சேர்க்கை, அடிமைப்படல், மனக்கிலேசம், பணமுடை

**பத்தில் இருந்தால்**, அவமானம், தொழிலில் சிக்கல், பெண்களால் துன்பம், மகிழ்ச்சிக் குறைவு காரியத்தடை.

**பதினொன்றில் இருந்தால்,** தனலாபம், தொழில் விருத்தி, காணி பூமிச்சேர்க்கை, புகழ்பெற்ற குடும்பத்தில் மகிழ்ச்சி.

**பன்னிரண்டில் இருந்தால்,** பல்வேறு துன்பங்களால் தொழில் இழப்பு, வாக்கு வாதம், தூரதேசவாசம், பணக்கஷ்டம்,

## லக்கின வீடு முதல் பன்னிரண்டு பாவங்களிலும் கிரகங்கள் நிற்கும் பலன்

**ஒருவர் பிறக்கும் போது உள்ள கிரகங்களின் சஞ்சார பலன். சாதகத்தில் உள்ளபடி**

**லக்கின வீடு**

**சூரியன் இருந்தால்.** ஆரோக்கியம், தைரியம், தெய்வபக்தி, ஆசார அனுட்டானங்களில் நம்பிக்கை, கண்பார்வைக் குறைவு என்பன இருக்கும்.

**சந்திரன் இருந்தால்,** வளர்பிறைச் சந்திரனால் ஆரோக்கியம், பக்தி, வித்தை விருத்தி, மேன்மை உண்டு. தேய்பிறைச் சந்திரனால் இவை மாறி அமையும்.

**செவ்வாய் இருந்தால்,** முற்கோபம், தீயோர் சேர்க்கை, விதண்டாவாதம், உஷ்ணநோய்கள் என்பன இருக்கும்.

**புதன் இருந்தால்,** வசீகரமான பேச்சு, கல்வியில் மேன்மை, ஆயுள் விருத்தி, தர்ம சிந்தனை என்பன இருக்கும்.

**குரு இருந்தால்,** தனம்சேரும், ஆயுள் விருத்தி, கல்வியில் மேன்மை, கலைகளில் விருப்பு என்பன இருக்கும்.

**சுக்கிரன் இருந்தால்,** ஆயுள் விருத்தி, குடும்பத்தில் பற்று, உயர் பதவி, பெரியோர் உதவி என்பன இருக்கும்.

**சனி இருந்தால்,** ஆயுள் விருத்தி, முரண்பாடு, கஷ்டம், சோம்பல், பிடிவாதம், முற்கோபம் என்பன இருக்கும்.

**ராகு இருந்தால்,** தெய்வ நம்பிக்கை குறைவு, குழந்தைப் பேறின்மை, மனக்குழப்பம், என்பன உண்டு.

**கேது இருந்தால்,** குழந்தைச் செல்வம் குறைவு, நேர்மை உண்மை, தைரியம் என்பன இருக்கும்.

**இரண்டாம் வீடு,** இந்த வீட்டை தனஸ்தானம், வாக்குஸ்தானம் என்றும் கூறுவர்.

**சூரியன்இருந்தால்,**தில்லுமுல்லுகளைச் செய்தல், முரண்படுதல், வீண்வார்த்தை பேசுதல் என்பன இடம்பெறும்.

**சந்திரன் இருந்தால்**, வாக்குவன்மை, மேன்மையான கல்வி, மதிப்பு, புகழ் என்பன இடம்பெறும்.

**செவ்வாய் இருந்தால்**, முன்கோவம், வாக்குவாதம், கலகம் உண்டாகும்.

**புதன் இருந்தால்**, செல்வச்சேர்க்கை, வாக்கு வசீகரம், நல்ல குடும்பம் என்பன அமையும்.

**குரு இருந்தால்**, நல்ல குடும்பம் அமைதல், தனம் சேரும், புகழ் மதிப்பு என்பன உண்டாகும்.

**சனி இருந்தால்,** குடும்பக் கஷ்டம், பொய், ஏமாற்றுதல், சலனம் என்பன உடையவர்களாவர்.

சுக்கிரன் இருந்தால், ஆயுள்விருத்தி, தனச்சேர்க்கை, நல்ல குடும்பம் அமையும்.

**ராகு இருந்தால்**, முற்கோபம், தர்கப்படல், திக்குவாய், அவமானம் என்பன உண்டாகும்.

**கேது இருந்தால்**, வீண் சண்டை, சச்சரவுகள், வரவுக்கு மேலான செலவு, கண் நோய்களால் பாதிப்பு என்பன உண்டாகும்.

**மூன்றாம் வீடு,**

**சூரியன் இருந்தால்**, செல்வம், செல்வாக்கு தைரியம் பராக்கிரமம் என்பன இருக்கும்.

**சந்திரன் இருந்தால்**, சகோதரர்களால் உதவிகள், செல்வம், மகிழ்ச்சி என்பன கிடைக்கும்.

**செவ்வாய் இருந்தால்,** தனம் சேரும், சகோதரர்களால் உபத்திரவம் கேட்டல் குறைபாடு என்பன இருக்கும்.

**புதன் இருந்தால்,** சகோதரர் மீது பற்றும் பாசமும், மகிழ்வுள்ளவர்களாகவும் இருப்பர்.

**குரு இருந்தால்**, வீண்வார்த்தை பேசல், சந்தேகம், மனக்குழப்பம் என்பன இருக்கும்.

**சுக்கிரன் இருந்தால்,** அடிக்கடி நோயுண்டாகும். வறுமை, சந்தோசக்குறைவு என்பன இருக்கும்.

**சனி இருந்தால்,** ஆயுள் விருத்தி, தைரியம், மதிப்பு, தனம் என்பன இருக்கும்.

**ராகு இருந்தால்,** திடமான மனம், அறிவு, ஆயுள் விருத்தி என்பன இருக்கும்.

**கேது இருந்தால்,** ஆசாரம், தெய்வ பக்தி, செல்வம், மனத்திடம் என்பன இருக்கும்.

**நான்காம் வீடு**

**சூரியன் இருந்தால்** , தாயாருக்குக் கெடுதல், மனக்குழப்பம், வீண் பகை என்பன உண்டாகும்.

**சந்திரன் இருந்தால்**ஜ காணி, பூமி வாகனம் சேரும். தாயாருக்கு கெடுதல் என்பன உண்டு.

**செவ்வாய் இருந்தால்** , வீடு, காணி, பூமி ஆபரணங்கள் சேரும். தாயாரின் உடல்நலம் பாதிப்படையும்.

**புதன் இருந்தால்** , மேன்மை, புகழ், தனம், வாக்குவன்மை என்பன உண்டு.

**குரு இருந்தால்** , கல்வியில் மேன்மை, தாயாரின் அன்பு, சுகமான வாழ்வு உண்டாகும்.

**சுக்கிரன் இருந்தால்** , வீடு, பூமி, வாகனம், லச்சுமிகரம், கல்வியில் மேன்மை உண்டு. மாளவயோகமும் உண்டு.

**சனி இருந்தால்** , தாயாருக்கு நோய், கல்வியில் அக்கறையின்மை, காணி பூமிகளை விற்றல் போன்றன உண்டாகும். சனி சொந்த வீட்டில் அல்லது உச்சம் பெற்றிருந்தால் சசயோகம் உண்டாகும்.

**ராகு இருந்தால்,** மந்த புத்தியும் சோம்பலும் அக்கறையின்மையும் இருக்கும். யோகக் கிரகங்களின் பார்வை இருந்தால் நல்ல பலன்கள் பலவும் உண்டாகும்.

**கேது இருந்தால்** , தாயாருக்கு நோயுண்டாகும். கல்வியில் மேன்மை கலைகளில் வல்லமை என்பன உண்டாகும்.

**ஐந்தாம் வீடு** , இந்த வீட்டைப் புத்திர ஸ்தானம் என்றும், பூர்வ புண்ணிய தானம் என்றும் கூறுவர்.

**சூரியன் இருந்தால்** , புத்திர தோஷம், மகிழ்ச்சியின்மை, பணத்தட்டுப்பாடு என்பன உண்டாகும்.

**சந்திரன் இருந்தால்** , கல்வியில் மேன்மை, உயர்ந்த பதவி, மகிழ்வான வாழ்வு உண்டாகும்.

**செவ்வாய் இருந்தால்,** பிள்ளைகளுக்கு நோய், கல்விக்குறைவு, மனக்குழப்பம் என்பன இருக்கும்.

**புதன் இருந்தால்,** மேன்மை, சிறப்பு, தெய்வபக்தி, மேலான கல்வி என்பன உண்டாகும்.

**குரு இருந்தால்,** பிள்ளைகளால் துன்பம், மேலான கல்வி, கலைகளில் விருப்பு என்பன உண்டாகும்.

**சுக்கிரன் இருந்தால்** மேலான செல்வம், புத்திரப்பேறு, தாராள மனப்பாங்கு என்பன இருக்கும்.

**சனி இருந்தால்,**மனக்குழப்பம், பணமுடை, புத்திரரால் துன்பம் என்பன ஏற்படும்.

**ராகு இருந்தால்** , புத்திரர் குறைவு, மனக்கஷ்டம், குழப்பம் என்பன உண்டாகும்.

**கேது இருந்தால்**, தல யாத்திரை செய்தல், தானதர்மம் செய்தல், மேலான கல்வி என்பன இருக்கும்.

**ஆறாம் வீடு**

சூரியன் இருந்தால், சௌபாக்கியம், வசதி வாய்ப்பு, யோகம் என்பன உண்டு.

**சந்திரன் இருந்தால்**, மதிப்பு, மரியாதை, சமூகத்தின் மதிப்பு, பூரண ஆயுள் என்பன உண்டு.

**செவ்வாய் இருந்தால்**, சத்துரு ஜெயம், பூரண ஆயுள், கீர்த்தி, செல்வம் என்பன உண்டாகும்.

**புதன் இருந்தால்**, வீண் வார்த்தை பேசுதல், அவமானப்படல் சோம்பல் என்பன இருக்கும்.

**குரு இருந்தால் ,**சமய சம்பிரதாயங்களில் நம்பிக்கை, தலயாத்திரை, சமயப் பிரசாரம் செய்தல் என்பன இருக்கும்.

**சுக்கிரன் இருந்தால்** , நீரால் கண்டம், முயற்சியின்மை, எதிரிகளால் தொல்லை, பொறுப்பின்மை என்பன உண்டாம்.
**சனி இருந்தால்** , தைரியம், கல்வி கேள்விகளில் மிகுந்திருத்தல், தனம். சத்துரு ஐயம் என்பன உண்டாகும்.

**ராகு இருந்தால்** , தனச்சேர்க்கை, ஆயுள் விருத்தி, சுகவாழ்வு என்பன உண்டாம்.

**கேது இருந்தால்** , எதிரிகளை அடக்கல், தீர்க்க ஆயுள் செல்வம், செல்வாக்குண்டு.

**ஏழாம் வீடு**

**சூரியன் இருந்தால்**, காரியத்தடை, நோய், குடும்பத்தில் கலகம், துட்டரின் சகவாசம் கீழான நிலை.

**சந்திரன் இருந்தால்** , மேன்மை, நினைத்த காரியச் சித்தி, மனைவியால் சுகம் உண்டு.

**செவ்வாய் இருந்தால்,** களத்திர தோசம், கடன்படல், நோய்த் தாக்கம், துன்பம் உண்டு.

**புதன் இருந்தால்**, குடும்பசுகம் மனைவி வழியால் பொருள் வரவு, சுகமான வாழ்வு காரியசித்தி உண்டு.

**குரு இருந்தால்**, மனைவி வழியால் பொருள் சேர்க்கை, வாகன சுகம், பணவரவு, புத்திர பாக்கியம், மகிழ்ச்சி உண்டு.

**சுக்கிரன் இருந்தால்** , செல்வம் சேரல், பெண்களால் உதவி, அயலவரால் துன்பம், விபரீதம், சலனபுத்தி உண்டு.

*சனி இருந்தால்* , பணமுடை, எதிலும் தோல்வி, குரோதம், நிம்மதிக்குறைவு உண்டு.

**ராகு இருந்தால்** , புத்திரதோஷம், தொழிலில் நட்டம், பெண்களால் துன்பம், களத்திரதோஷம் உண்டு.

**கேது இருந்தால்** , குடும்பத்தில் மகிழ்ச்சியின்மை, பெண்களால் அவமானம், சோம்பல், புத்திரதோசம்.

**எட்டாம் வீடு,** சூரியன் இருந்தால், அற்ப ஆயுள், மனக்குழப்பம், நேத்திரரோகம், முற்கோபம்.

**சந்திரன் இருந்தால்** , பொருட்செலவு, நேத்திரரோகம், நீரால் கண்டம், நோய் உபாதை. செவ்வாய் இருந்தால், களத்திரதோஷம், அற்ப ஆயுள், எதிரிகளால் நன்மை, விபத்து.

**புதன் இருந்தால்** , தீர்க்காயுள், பணச்சேர்க்கை, மதிப்பு, புகழ் தெய்வ நம்பிக்கை.

**குரு இருந்தால்** , தீர்க்காயுள், பணம் சேர்தல், புகழ், மதிப்பு, புத்திராரிஷ்டம்.

**சுக்கிரன் இருந்தால்,** கல்வி, கலை, சாத்திரங்களில் மேன்மை, தீர்க்காயுள், தனச்சேர்க்கை.

**சனி இருந்தால்** , நிலை தடுமாற்றம், தீர்க்காயுள், தொழிலின்மை, தனவிரயம்.

**ராகு இருந்தால்** , விஷபயம், விபத்து, பணவிரையம், குழப்பம். கேது இருந்தால், மனைவிக்கு நோய், குடும்பக் கலகம் அல்லது பிரிவு, புத்திரக் குறைவு.

**ஒன்பதாம் வீடு**

இதை பூர்வபுண்ணிய ஸ்தானம், பாக்கியஸ்தானம் என்றும் சொல்வர்.

**சூரியன் இருந்தால்,** தனம் சேரும், தர்மத்தில் விருப்பு முன்கோபம், குடும்ப மகிழ்ச்சி என்பன இருக்கும்.

**சந்திரன் இருந்தால்** அதிகபிள்ளைகள், அறிஞர்களாக இருத்தல், கல்வியில் மேம்பாடு, லட்சுமி கடாட்சம், புகழ் என்பன இருக்கும்.

**செவ்வாய் இருந்தால்** , பிதாவுக்கு நோய் நொடிகள், தீய நண்பர் சேர்க்கை, பின் அழிவு, நோய் என்பன இருக்கும்.

**புதன் இருந்தால்** , கல்வியில் சிறப்பு, மேன்மை, புகழ், உயர்ந்த ஸ்தானம், தனம் என்பன இருக்கும்.

**குரு இருந்தால்** , புத்திக்கூர்மை, நற்புத்திரர், செல்வம் செல்வாக்கு காணி பூமி என்பன இருக்கும்.

**சுக்கிரன் இருந்தால்** , பணம், கௌரவம், உயர்ந்த பதவி, குடும்ப சுகம் என்பன இருக்கும்.

**சனி இருந்தால்,** தீயகுணங்கள், முரண்படுதல், வறுமை, பிதாவால் செலவு என்பன இருக்கும்.

**ராகு இருந்தால்** , ஆடை ஆபரணம், காணி, பூமிச் சேர்க்கை, புத்திரரால் கவலை என்பன இருக்கும்.

**கேது இருந்தால்** , வறுமை, தொழில் கஷ்டம், குடும்ப கலகம், பெரியாரின் வெறுப்பு என்பன இருக்கும்.

**பத்தாம் வீடு**, இதைத் தொழிற் ஸ்தானம் என்று சொல்வர்.

**சூரியன் இருந்தால்.** தனவான், தொழிலில் திறமை, உயர்ந்த பதவி என்பன இருக்கும்.

**சந்திரன் இருந்தால்** ,நல்ல குணங்கள், தரும சிந்தை, தானம், கல்வியில் மேன்மை என்பன இருக்கும்.

**செவ்வாய் இருந்தால்** , கல்வியில் மேன்மை, பொருள் உடைமை, புகழ், தெய்வ நம்பிக்கை என்பன இருக்கும்.

**புதன் இருந்தால்** , தனவான், சத்தியவான், பலமுள்ளவன், புத்திரர்களை உடையவனாக இருப்பான்.

**குரு இருந்தால்**, தலைமை தாங்கும் பண்பு, புகழ், உயர்ந்த கல்வி, தனம் என்பன இருக்கும்.

**சுக்கிரன் இருந்தால்** , மேலான பதவி, மேற்படிப்பு, நல்ல குடும்பம், செல்வம் என்பன இருக்கும்.

**சனி இருந்தால்** , பெரும் உயர்பதவி, காரியசித்தி, செல்வம், புகழ் என்பன இருக்கும்.

**ராகு இருந்தால்,** புத்திரர் குறைவு, தனம், தெய்வ நம்பிக்கை, மதிப்பு என்பன இருக்கும்.

**கேது இருந்தால்** , அரசமதிப்பு. தான தர்மவிருப்பு, செல்வம், விவேகம் என்பன இருக்கும்.

**பதினொராம் வீடு**

**சூரியன் இருந்தால்** , பிதாவுக்கு நோய், தீர்க்காயுள், மன மகிழ்ச்சி, செல்வம் என்பன இருக்கும்.

**சந்திரன் இருந்தால்** , வாய்மை, தான தர்ம விருப்பு, செல்வம், நல்ல குடும்பம் என்பன அமையும்.

**செவ்வாய் இருந்தால்** , பிதாவுக்குக் கஷ்டம், செல்வம், மகிழ்ச்சி நற்பிள்ளைகள் என்பன இருக்கும்.

**புதன் இருந்தால்,** தீர்க்காயுள், செல்வம், கீர்த்தி, மேன்மை என்பன இருக்கும்.

**குரு இருந்தால்** , கௌரவம், புகழ், தனம், உயர்ந்த பதவி, பொது சனமதிப்பு என்பன இருக்கும்.

**சுக்கிரன் இருந்தால்** , செல்வம், செல்வாக்கு, தான தர்ம விருப்பு, தெய்வ நம்பிக்கை என்பன இருக்கும்.

**சனி இருந்தால்** , ஆரோக்கியம், செல்வம், தீர்க்காயுள், தந்திரம், விகடம் என்பன இருக்கும்.

**ராகு இருந்தால்** , பிதாவுக்கு நோய், செல்வம், மனக்குழப்பம், குடும்ப சுகமின்மை ஆகியன இருக்கும்.
கேது இருந்தால் ஞ இரக்கம், தர்ம சிந்தனை, கடவுள் பக்தி, புகழ் என்பன இருக்கும்.

**பன்னிரண்டாம் வீடு** , இதை விராயஸ்தானம், மோட்ச ஸ்தானம் என்றும் கூறுவர்.

**சூரியன் இருந்தால்,** பிதாவுக்கு நோய், வறுமை, பார்வைக் குறைபாடு, மனத்தைரியம் என்பன இருக்கும்.
**சந்திரன் இருந்தால்,** குடும்பத்தை விட்டு நீங்கி இருத்தல், தனம், ஆசாரம் என்பன இருக்கும்.

**செவ்வாய் இருந்தால்,** தீயவர் சேர்க்கை, குற்றப்படல், வீண் வார்த்தைகள் பேசேல், ஏமாற்றுதல் ஆகியன இருக்கும்.

**புதன் இருந்தால்,** செல்வம், புகழ்,மதிப்பு உண்டு. மனதில் குரூரம் இருக்கும்.

**குரு இருந்தால்** , அறிவு, புகழ், கல்வியில் மேன்மை செல்வம் ஆகியன இருக்கும்.

**சுக்கிரன் இருந்தால்** , பெண்களின் உதவி, நட்பு, செல்வம், செல்வாக்கு என்பன இருக்கும்.

**சனி இருந்தால்** , எதிரிகளின் தொல்லை, நோய், கஞ்சத்தனம், முற்கோபம் என்பன இருக்கும்.

**ராகு இருந்தால்** , விஷபயம், வரவுக்கு மீறிய செலவு, வறுமை தெய்வ பக்தி, என்பன இருக்கும்.

**கேது இருந்தால்** , கல்வி கேள்விகளில் மேன்மை, பேச்சு வன்மை, ஞானம் மோட்சம் என்பன இருக்கும்.

## கோசாரத்தில் குருவின் பலன்

**ஜென்மத்தில் குரு இருந்தால்,** அரச பயம், வழக்குகள், விபத்துக்கள், வறுமை, மனவேதனை, குடும்பத்தில் குழப்பம், பகை என்பன உண்டாகும்.

**மூன்றிற் குரு இருந்தால்,** குடும்பப் பிரிவு, வருமானக் குறைவு, பிள்ளைகளால் பிரச்சினை, நண்பர் சுற்றத்தினருடன் முரண்படல் என்பன உண்டாகும்.

**நான்கில் குரு இருந்தால்,** பதவி மாற்றம், அவமானம், செல்வ அழிவு, குடும்பக்கலகம், வீண் பகை, பெரியோரைப் பகைத்தல் என்பன உண்டாகும்.

**ஆறில் குரு இருந்தால்ஜ** விபத்துக்கள், வரவுக்கு மீறிய செலவு, வீண்பழி கேட்டல், முரண்பாடு, பகை அதிகரித்தல், குடும்பப் பிரச்சினை என்பன ஏற்படும்.

**எட்டில் குரு இருந்தால்ஜ** புகழ், கௌரவம், பதவி முதலியன கெடும். உற்றார் பகைவராவர், பெற்றோர் வெறுப்பர், காணி, பூமிகளால் வழக்கு ஏற்படும்.

**பத்தில் குரு இருந்தால் :** நிலை மாற்றம், அஞ்ஞானவாசம், பணத்தட்டுப்பாடு, குடும்பப்பிரிவு, பொருட்களை விற்றல், மனக்குழப்பம் என்பன ஏற்படும்.

**பன்னிரண்டில் குரு இருந்தால்,** பணச்செலவு, பதவி உயர்வுகள் கிடையாமை,ஏமாற்றம், பெரியோரின் வெறுப்பு என்பன ஏற்படும்.

குரு, 2,5,7,9,11 இல் இருந்தால் மேன்மை, புகழ், செல்வச் சேர்க்கை, வசதியான இடமாற்றம், பதவி உயர்வு, திருமணம், புத்திரப்பேறு, அதிஷ்டம், காணி, பூமி வாங்குதல் அலங்காரமான மனை அமைதல் என்பன இடம்பெறும்.

**குரு இரண்டாமிடத்தில் இருந்தால்,** நினைத்தவை நடைபெறும், பணவரவு, மகிழ்ச்சியான இடமாற்றம், பதவி உயர்வு, கௌரவம், மதிப்பு உயரல், அரச உதவிகள் கிடைத்தல், பிள்ளைகளால் இன்பம் என்பன கிட்டும்.

**குரு ஐந்தில் இருந்தால்,** வெளிநாட்டு உதவி, வெளிநாடு செல்லல், பரீட்சையில் சித்தி, வழக்குகளில் வெற்றி, காணி, பூமி, ஆபரணங்கள் சேர்க்கை. நினைத்தவை நிறைவேறல் என்பன நடைபெறும்.

**குரு ஏழில் இருந்தால்,** பொன், பொருள் ஆடை ஆபரணச் சேர்க்கை, கௌரவம், மதிப்பு உயரல், பணம், காணி, பூமி சேர்க்கை,கலைஞர்களுக்கு விருதுகள் கிடைத்தல், பதவி உயர்வு. நினைத்தவை நடைபெறல் ஆகியன நிகழும்.

**குரு ஒன்பதில் இருந்தால்,** பல வழிகளாலும் பணம் சேரல், மங்கள காரியங்கள் நடைபெறல், புதிய மனை அமைத்தல், காணி, பூமி வாங்குதல், பதவி உயர்வு, கௌரவம் மதிப்பு உயரல், நோய் நீங்குதல் என்பன நடைபெறும்.

**குரு பதினொன்றில் இருந்தால்,** நண்பர், இனசன உதவி கிடைத்தல், பொருள் சேரல், அதிஷ்டலாபச் சீட்டின் மூலம் பணம் சேரல், காணி, பூமி, சேரல், பெற்றோரின் சொத்துக்கள் சேரல், அரசமதிப்புக்கள் கிடைத்தல் என்பன நடைபெறும்.

## கோசாரத்தில் சனியின் பலன்

**ஜென்மத்தில் சனி இருந்தால்:** நோய், வறுமை, அதிக செலவு, விபத்துக்கள், அலைச்சல் என்பன இருக்கும்.

**இரண்டில்சனி இருந்தால்:** விபத்து, விஷபயம் பணத்தட்டுப்பாடு, வழக்கு, தாழ்ந்த நிலை என்பன உண்டாகும்.

**நான்கில்சனி இருந்தால்:** குடும்பப் பிரிவு, பகைவரால் தொல்லை, அடிமைப்படல், பணத்தட்டுப்பாடு, நண்பர், எதிரியாதல் என்பன உண்டாகும்.

**ஏழில் சனி இருந்தால்:** குடும்பத்தில் கலகம், மனைவி நோய்வாய்ப்படல், புத்திரரால் கவலை, மனக்குழப்பம் என்பன உண்டாகும்.

**எட்டில் சனி இருந்தால்,** காரியத்தடை, தொழிலில் குழப்பம், வியாதி, வறுமை, பயம், முரண்பாடு என்பன உண்டாகும்.

**பத்தில் சனியிருந்தால்,** நோய் அதிகரித்தல், மனப்பயம், அதிக செலவு, காரியத்தடை, பெண்களால் உபத்திரவம் என்பன உண்டாகும்.

**பன்னிரண்டில் சனி இருந்தால்** , தரித்திரம், குறை கேட்டல், வரவுக்கு மீறிய செலவு, வழக்கு, தொழில் சிக்கல், முயற்சி பலியாமை, பெரியோரின் வெறுப்பு என்பன உண்டாகும்.

ஒரு மனிதனின் சாதகத்தில் சந்திரன் உள்ள இராசிக்கு 12,1,2 இல் சனிபகவான் சஞ்சரிக்கும் போது ஏழரைச்சனி நடைபெறும். இக்காலம் மிகவும் கஷ்டமான காலமாகும். தெய்வ நம்பிக்கையுடன் வாழ்ந்தால் சிறிதளவாவது ஆறுதல் கிடைக்கும்.

மூன்றாம், ஆறாம், பதினொராம் இடங்களில் சனிபகவான் வரும் போது சாதகர்களுக்கு எல்லையில்லாத இன்பங்களை அள்ளிக் கொடுப்பார். இக்காலங்கள் சாதகர்களுக்குப் பொன்னான காலங்களாகும்.

**மூன்றில் சனி இருந்தால்,** கல்வியில் சிறப்பு, குடும்பத்தில் மகிழ்ச்சி, வருமானம் உயர்வு, தொழில் விருத்தி, ஆபரணச்சேர்க்கை, பிறரால் மதிக்கப்படல் எண்ணியவை நடைபெறும்.

**ஆறில் சனி இருந்தால்,** மதிப்பு, மரியாதை ஏற்படும், கௌரவம், பதவி, பட்டம், விருதுகள் கிடைக்கும். பணம் பல வழிகளாலும் சேரும். புத்திர பாக்கியம் உண்டு. புத்திரரால் மகிழ்ச்சி உண்டாகும்.

**பதினொன்றில் சனி இருந்தால்:** சகல போகங்களும் கிட்டும் பதவிகள் தேடி வரும், பணம் குவியும், நன்மையான இடமாற்றம் ஏற்படும், கலைஞர்கள் போற்றப்படுவர்.

இப்பலன்கள் சாதகத்தில் கிரகங்கள் நன்றாக இருந்தால் மேலும் உயர்வடையும். சாதகத்தில் கிரகங்கள் பலம் குன்றியிருப்பின் பெரும் பலன் கிடைக்காவிட்டாலும், நல்ல பலன்கள் ஏற்படும்.

## சந்திர ராசிக்கு ராகு மாற்றம்

ராகுவும், கேதுவும் ஒன்றரை வருடங்களுக்கொருமுறை தாம் இருக்கும் இராசியை விட்டுச் செல்வார்கள்.

**ராகு லக்கினத்தில் இருந்ததால்,** சிரமம், வறுமை, பொருள் விரையம், மனக்குழப்பம் என்பன உண்டாகும்.

**இரண்டில் இருந்தால்** மத்திமமான பலனைக் கொடுப்பார். வரவும், செலவும் சமமானதாக இருக்கும். நோயின் தாக்கம் குறைவாக இருக்கும். பொருள் வந்து போகும்.

**ராகு மூன்றில் இருந்தால்,** மிகவும் நல்ல பயன்களைத் தருவார், கல்வியில் சிறப்பு, பொருளாதாரத்தில் வளர்ச்சி, புகழ், பதவி பெறல் என்பன ஏற்படும்.
**ராகு நான்கில் இருந்தால்,** மத்திமமான பலனையே தருவார், காரியங்கள் இழுபட்டு நிறைவேறும். பரீட்சைகளில் மத்திமமான பலன் கிடைக்கும். பொருள் வந்து போகும் நிலை உண்டாகும்.

**ராகு ஐந்தில் இருந்தால் ,** வரவும் செலவும் சமமாக இருக்கும். தேவைக்குப் பணம் வரும். பலமான முயற்சியின் பின்பே பயன் கிடைக்கும். முதலீடுகள் இறுதியில் லாபம் தரும்.
**ராகு ஆறில் இருந்தால் :** நினைத்தவை யாவும் வெற்றியாய் முடியும். பணம், செல்வாக்கு அதிகரிக்கும், புதிய முயற்சிகள் இலாபம் தரும்.

**ராகு ஏழில் இருந்தால்:** செய்காரியங்கள் அனைத்தும் தோல்வியடையும், தொழிலில் நட்டம் உண்டாகும். உறவினர் வெறுப்பர், வழக்குகள் தோல்வியைத் தரும்.

**ராகு எட்டில் இருந்தால்,** காதலில் தோல்வி, தொழிலில் குழப்பம், குடும்பத்தில் கலகம், பணத்தட்டுப்பாடு, வீண் பழிகேட்டல், காரியத்தடை என்பன ஏற்படும்.

**ராகு ஒன்பதில் இருந்தால்,** பணவருவாய் குறையும், தொழிலில் மந்த நிலை காணப்படும். உடல் நலம், பாதிக்கப்படும். வீண்பழி கேட்க நேரிடும்.

**ராகு பத்தில் இருந்தால்,** தொழிலில் முன்னேற்றம் இராது, குடும்பத்தில் கவலை உண்டாகித் தீரும். பணக் கஷ்டம் இருந்தாலும் உதவப்பலர் முன்வருவர்.

**ராகுபதினொன்றில் இருந்தால்:** தொழிலில் அதிக இலாபம்,பதவி உயர்வு, காணி, பூமி, ஆபரணச்சேர்க்கை, குடும்பசுகம் உண்டாகும்.

**ராகு பன்னிரண்டில் இருந்தால்,** முரண்பாடு வலுக்கும். இடமாற்றம் ஏற்படும். புகழ், கௌரவம் பாதிக்கப்படும். மனக் குழப்பம் உண்டாகும்.

## சந்திர ராசிக்கு கேது மாற்றம்

**கேது லக்கனத்தில் இருந்தால்** , கடுமையான உழைப்பின் பின்னே காரியம் சித்தியாகும். பணத்தட்டுப்பாடு இருக்கும், இடமாற்றம் ஏற்படும்.

**கேது இரண்டில் இருந்தால்,** விபத்து, பணத்தட்டுப்பாடு, திருமணத்தில் குழப்பம் என்பன ஏற்படும். முயற்சி பலனளிக்காது. மனக்குழப்பமும் முன்கோபமும் விபரீதத்தைத் தரும்.

**கேது மூன்றில் இருந்தால்,** காரிய சித்தி, கல்வியில் மேன்மை, தொழிலில் அதிக லாபம், வசதியான இடமாற்றம், குடும்பத்தில் மகிழ்ச்சி என்பன இருக்கும்.

**கேது நான்கில் இருந்தால்,** மத்திமமான பலனே கிடைக்கும். வரவுக்கேற்ற செலவு, நேரத்திற்கு உணவு, படிப்புக்கேற்ற பெறுபேறு, முதலுக்கேற்ற வருமானம் கிடைக்கும்.

**கேது ஐந்தில் இருந்தால்,** மகிழ்வும் துக்கமும் மாறி மாறி வரும் முயற்சிக்கேற்ற பலன் கிடைக்கும். நோய் பெரும் தாக்கத்தை தராது. பணம் வந்து செலவாகும்.

**கேது ஆறில் இருந்தால்,** செய்காரியங்கள் அனைத்தும் வெற்றியளிக்கும். பணம் வந்து சேரும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். மதிப்பு, புகழ் உயரும்.

**கேது ஏழில் இருந்தால்:** தொழிலில் நட்டமும் பணவிரயமும் ஏற்படும். நோயின் தாக்கம் அதிகரிக்கும். முயற்சிகள் தோல்வியைத் தரும். பகை வளரும்.

**கேது எட்டில் இருந்தால்:** தீ, நீர், வாகனத்தால் தீமை உண்டாகும். தொழிலில் நட்டம் உண்டாகும். சிலர் தொழிலை இழப்பார்கள். அவமானம் உண்டாகும்.

**கேது ஒன்பதில் இருந்தால்:** வரவும், செலவும் சமமானதாக இருக்கும். தொழிலில் பெரும் முன்னேற்றம் இராது. வியாபாரிகள் அதிகமுதலீடு செய்வது நட்டத்தை உண்டாகும்.

**கேது பத்தில் இருந்தால்,** அவதானமாக எக்கருமத்தையும் செய்தல் வேண்டும். தொழிலில் ஏமாற்றங்கள் ஏற்படும். வரவுக்கேற்ற செலவு உண்டாகும். நண்பர் உதவிசெய்வர்.

**கேது பதினொன்றில் இருந்தால்:** நினைத்த காரியம் வெற்றியைத் தரும். கல்வி, செல்வம், புகழ் என்பன பெருகும். உயர் பதவிகள் வந்து சேரும். நோய்கள் விலகும்.

**கேது பன்னிரண்டில் இருந்தால்,** விஷபயம் இருக்கும், நண்பர்கள் முரண்படுவர். செய்தொழில் நட்டத்தைத் தரும். பணவிடயத்தில் ஏமாற்றப்படுவீர்கள். மனம் ஒரு நிலைப்பட்டிராது.

## தினப்பலன் பார்க்கும் முறை

ஒரு சாதகர் தான் பிறந்த நட்சத்திரத்தை தெரிந்திருப்பார். அதை நினைவில் வைத்துக்கொண்டு பலன் பார்க்கும் தினத்தின் நட்சத்திரத்தைப் பஞ்சாங்கத்தில் இருந்து தெரிந்து கொள்ளவும். பின் அடுத்த பக்கத்தில் உள்ள கூட்டில் தான் பிறந்த நட்சத்திரம் உள்ள கூட்டைப் பார்த்து அது எந்தத் தொகுதியில் உள்ளது என்று அறிந்து கொள்ளவும். அதன் பின் அன்றைய நட்சத்திரம் குறிக்கும் கூட்டத்தைப் பார்த்து அன்றைய நட்சத்திரம் உள்ள கூட்டைத் தெரிந்து கொள்ளவும். அதன் பின் 94ஆம் பக்கத்தில் உள்ள கூட்டைப் பார்த்து அன்றைய நட்சத்திரத்திற்குரிய

கிரகத்தை அறிந்து கொள்ளவும் அதன் பின் மறுபக்கத்தில் உள்ள கிரகத்தின் அன்றைய பலனைத் தெரிந்த கொள்ளவும்.

உதாரணமாக ஒருவர் முதலாவது கூட்டிலுள்ள முதலாவது நட்சத்திரமான அஸ்வினி நட்த்திரத்தில் பிறக்கிறார். அன்றைய பஞ்சாங்கத்தின்படி அன்றைய நட்சத்திரம். பூசம், எனவே பஞ்சாங்கத்தில் உள்ள அன்றைய நட்சத்திரம் இரண்டாவது கூட்டில் முதலாவதாக உள்ளது.அதை அறிந்த பின் பத்தாவது கூட்டில் உள்ள கிரகம் எது என்று அறியுங்கள். அது சந்திரன். பின் சந்திரனுக்குக் குறிப்பிட்ட பலனைப் பாருங்கள் அது தான் உங்கள் அன்றைய பலன்.

1) **சூரியன்** முரண்பாடு, அலைச்சல், பகைவர் தொல்லை, வயிற்றுக் கோளாறு, தனச் சேர்க்கை, நண்பர் உதவி.

2) **சந்திரன்,** காரிய சித்தி, மகிழ்ச்சியான செய்தி, பணவரவு, பதவி உயர்வு, புகழ், மேன்மை

3) **செவ்வாய்,** முயற்சி பலிதம், வெளிநாட்டுத் தொடர்பு, முரண்பாடு, பணத்தட்டுப்பாடு, பெரியவர் சீற்றம்.

4) **புதன்,** வீட்டில் சுப நிகழ்வு,தொழிலில் லாபம், பிரயாணம், நண்பர் சேர்க்கை, விருந்துபசாரம்.

5) **குரு,**மகிழ்ச்சிப்பெருக்கு, தானதர்மம் செய்தல், பெரியவர்களின் உதவி, காரிய சித்தி, தனவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி.

6) **சுக்கிரன்** கலைகளில் விருப்பு, புதிய முயற்சி, பதவி உயர்வு, சுபச்செய்தி, விருந்துணவு, நண்பர் சேர்க்கை, மேலதிகாரிகள் உதவி.

7) **சனி** வீண்வார்த்தைகள் பேசல் பொருள் இழப்பு, அகால போசனம், முயற்சி பலியாமை, தீயோரின் நட்பு, அவமானம்.

8) **ராகு** வயிற்றுக்கோளாறு, குடும்பப்பிரிவு, வீண்சண்டை, வழக்கு, திருடர் பயம், அகால போசனம்.

9) கேது, நோய், மனக்குழப்பம், இழந்தவை கிடைத்தல், பெண்களால் உபத்திரவம், முற்கோபத்தால் தீங்கு.

| **ஜன்ம நட்சத்திரம்** | **(1)<br>அச்சுவினி<br>மகம்<br>மூலம்** | **(2)<br>பரணி<br>பூரம்<br>பூராடம்** | **(3)<br>கார்த்திகை<br>உத்திரம்<br>உத்திராடம்** | **(4)<br>ரோகிணி<br>அத்தம்<br>திருவோணம்** | **(5)<br>மிருகசீருடம்<br>சித்திரை<br>அவிட்டம்** |
|---|---|---|---|---|---|
| பஞ்சாங்க ரீதியான என்றைய நட்சத்திரம் (1) | ரோகிணி<br>அத்தம்<br>திருவோ | மிருகசீரிடம்<br>சித்திரை<br>அவிட்டம் | திருவாதிரை<br>சுவாதி<br>சதையம் | புனர்பூசம்<br>விசாகம்<br>பூரட்டாதி | பூசம்<br>அனுஷம்<br>உத்.ராடதி |
| (2) | பூசம்<br>அனுஷம்<br>உ.டாதி | ஆயில்யம்<br>கேட்டை<br>ரேவதி | அச்சுவினி<br>மகம்<br>மூலம் | பரணி<br>பூரம்<br>பூராடம் | கார்த்திகை<br>உத்தரம்<br>உ.டம் |
| (3) | கார்த்<br>உத்திரம்<br>உ.டம் | ரோகிணி<br>அத்தம்<br>திருவோணம் | மிருகசீருடம்<br>சித்திரை<br>அவிட்டம் | திருவாதிரை<br>சுவாதி<br>சதையம் | புனர்<br>விசாகம்<br>பூரட்டாதி |
| (4) | புனர்<br>விசா<br>பூ.டாதி | பூசம்<br>அனுஷம்<br>உத்தரட்டாதி | ஆயில்யம்<br>கேட்டை<br>ரேவதி | அச்சுவினி<br>மகம்<br>மூலம் | பரணி<br>பூரம்<br>பூராடம் |
| (5) | பரணி<br>பூரம்<br>பூ.டம் | கார்த்திகை<br>உத்திரம்<br>உ.டம் | ரோகிணி<br>அத்தம்<br>திருவோணம் | மிருகசீருடம்<br>சித்திரை<br>அவிட்டம் | திருவோணம்<br>சுவாதி<br>சதையம் |
| (6) | திருவா<br>சுவாதி<br>சதை | புனர்பூசம்<br>விசாகம்<br>பூரட்டாதி | பூசம்<br>அனுசம்<br>உ.டாதி | ஆயில்யம்<br>கேட்டை<br>ரேவதி | அச்சுவினி<br>மகம்<br>மூலம் |
| (7) | அச்சுவி<br>மகம்<br>மூலம் | பரணி<br>பூரம்<br>பூராடம் | கார்த்திகை<br>உத்தரம்<br>உ.டம் | ரோகிணி<br>அத்தம்<br>திருவோணம் | மிருகசீரிடம்<br>சித்திரை<br>அவிட்டம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (8) | மிருக<br>சித்தி<br>அவிட் | திருவாதிரை<br>சுவாதி<br>சதை | புனர்பூசம்<br>விசாகம்<br>பூரட்டாதி | பூசம்<br>அனுஷம்<br>உ.டாதி | ஆயில்யம்<br>கேட்டை<br>ரேவதி |
| (9) | ஆயில்யம்<br>கேட்டை<br>ரேவதி | அச்சுவினி<br>மகம்<br>மூலம் | பரணி<br>பூரம்<br>பூராடம் | கார்த்திகை<br>உத்தரம்<br>உ.டம் | ரோகிணி<br>அத்தம்<br>திருவோணம் |

| (6)<br>**திருவாதிரை**<br>**சுவாதி**<br>**சதயம்** | (7)<br>**புனர்பூசம்**<br>**விசாகம்**<br>**பூரட்டாதி** | (8)<br>**பூசம்**<br>**அனுஷம்**<br>**உத்திரட்டாதி** | (9)<br>**ஆயில்யம்**<br>**கேட்டை**<br>**ரேவதி** | (10)<br>**கிரகம்** |
|---|---|---|---|---|
| ஆயில்யம்<br>கேட்டை<br>ரேவதி | அச்சுவினி<br>மகம்<br>மூலம் | பரணி<br>பூரம்<br>பூராடம் | கார்த்திகை<br>உத்தரம்<br>உத்திராடம் | சூரியன் |
| ரோகிணி<br>அத்தம்<br>திருவோணம் | மிருசீருடம்<br>சித்திரை<br>அவிட்டம் | திருவாதிரை<br>சுவாதி<br>சதையம் | புனர்பூசம்<br>விசாகம்<br>பூரட்டாதி | சந்திரன் |
| பூசம்<br>அனுஷம்<br>உ.டாதி | ஆயில்யம்<br>கேட்டை<br>ரேவதி | அச்சுவினி<br>மகம்<br>மூலம் | பரணி<br>பூரம்<br>பூராடம் | செவ்வாய் |
| கார்த்திகை<br>உத்திரம்<br>உ.டம் | ரோகிணி<br>அத்தம்<br>திருவோணம் | மிருகசீரடம்<br>சித்திரை<br>அவிட்டம் | திருவாதிரை<br>சுவாதி<br>சதையம் | புதன் |
| புனர்பூசம்<br>விசாகம்<br>பூரட்டாதி | பூசம்<br>அனுஷம்<br>உத்.டாதி | ஆயில்யம்<br>கேட்டை<br>ரேவதி | அச்சுவினி<br>மகம்<br>மூலம் | குரு |
| பரணி<br>பூரம்<br>பூராடம் | கார்த்திகை<br>உத்திரம்<br>உ.டம் | ரோகிணி<br>அத்தம்<br>திருவோணம் | மிருகசீருடம்<br>சித்திரை<br>அவிட்டம் | சுக்கிரன் |
| திருவோணம்<br>சுவாதி<br>சதையம் | புனர்பூசம்<br>விசாகம்<br>பூரட்டாதி | பூசம்<br>அனுஷம்<br>உ.டாதி | ஆயில்யம்<br>கேட்டை<br>ரேவதி | சனி |
| அச்சுவினி<br>மகம்<br>மூலம் | பரணி<br>பூரம்<br>பூராடம் | கார்த்திகை<br>உத்தரம்<br>உ.டம் | ரோகிணி<br>அத்தம்<br>திருவோணம் | ராகு |
| மிருகசீரிடம்<br>சித்திரை<br>அவிட்டம் | திருவாதிரை<br>சுவாதி<br>சதயம் | புனர்பூசம்<br>விசாகம்<br>பூரட்டாதி | பூசம்<br>அனுஷம்<br>உ.டாதி | கேது |

## யோகங்கள்

ஒருவரின் சாதகத்தில் ஒரு கிரகத்திற்கும் இன்னொரு கிரகத்திற்கும் உள்ள நல்ல உறவை யோகம் என்பார்கள். யோகங்கள் 300 இற்கு மேற்பட்டவை. இருந்த போதும் சில யோகங்கள் சாதகனைப் பெரும் இன்பத்தில் ஆழ்த்தும் வகையில் பொன் பொருட்களைக் குவிக்கும் இருப்பினும் யோகங்கள் கிரகங்கள் துர்ஸ்தானங்களில் இருந்தால் நல்ல பலன்களை எதிர்பார்க்க முடியாது.

## சந்திரயோகங்கள்

1) **துருதுராயோகம் :** சந்திரனுக்குப் பின்பும், முன்பும் உள்ள ராசிகளில் ராகுவையும் கேதுவையும் தவிர்ந்த ஏனைய கிரகங்கள் இருந்தால் துருதுரா யோகம் உண்டாகும். இதனால் செல்வம், காணி பூமி, வாகனம், புகழ் செல்வாக்கு உண்டாகும்.

2) **அநபாயோகம் :** சந்திரனுக்கு 12 வது ராசியில் ராகு கேதுக்களைத் தவிர்ந்த ஏனைய கிரகங்கள் இருப்பதை அநபா யோகம் என்பர். இதனால் பேரும் புகழும் உயர்பதவியும் செல்வமும் கிட்டும்.

3) **சுநபாயோகம்:** சந்திரனுக்குப் பின்னும் முன்னும் கிரகங்கள் இல்லாதிருத்தலைச் சுநபாயோகம் என்பர். இதனால் மதிப்பு மரியாதை உயர் பதவி வாகனம் என்பன கிட்டும்.

4) **கஜகேசரி யோகம் :** இதைக் கேசரி யோகம் என்றும் சொல்வர். சந்திரனுக்குக் கேந்திரத்தில் அதாவது 1,4,7,10,ஆம் வீடுகளில் குரு

இருப்பதைச் கஜகேசரி யோகம் என்பர். இதனால் தீர்க்காயுள், நன்மக்கட் பேறு, செல்வம், புகழ், உயர் பதவி என்பன கிட்டும்.

5) **அதியோகம் :** சந்திரனுக்கும், 6,7,8ஆம் வீடுகளில் சுபர்கள் குரு, புதன், சுக்கிரன் என்ற கிரகங்கள் தனித்தோ அல்லது ஒன்றாகவோ இருப்பதை அதியோகம் என்பர். இவ்யோககாரர் உயர்பதவி வகிப்பர். செல்வம், காணி, பூமிக்குரியவராவர். மனைவி அல்லது கணவன் பெருந்தனவந்தனாக அமைவர்.

6) **லக்கன அதியோகம் :** லக்கணத்திற்கு 6,7,8 இல் சுபர்கள் இருந்தால் லக்கண அதியோகம் உண்டாகும்.இதனால் பெரும் பதவி, கல்வியின் மேன்மை, பணக்கார மனைவி, கணவன் அமைவர்.

## சூரியயோகங்கள்

1) **வாசி யோகம் :** சூரியனுக்கு 12 இல் ராகு கேதுக்களைத் தவிர மற்றக் கிரகங்கள் இருப்பதை வாசி யோகம் என்பர். இதனால் புகழ், கௌரவம், செல்வம், அதிஷ்டம் என்பன ஏற்படும்.

2) **வேசி யோகம் :** சூரியனுக்கு 2 இல் இராகு கேதுக்களைத் தவிர வேறு கிரகங்கள் இருந்தால் அதை வேசியோகம் என்பர். இதனால் பொன்பொருட் சேர்க்கை, நல்ல குடும்பம் அமையும்.

3) **சுப உபயசாரி யோகம் :** சூரியனுக்கு இருபக்கங்களிலும் கிரகங்கள் இருப்பதை சுப உபயசாரி யோகம் என்பர். தனம், விவசாயத்தில் முன்னேற்றம், நல்ல குடும்பம் அமையும்.

4) **அட்ட லக்சுமி யோகம் :** இராகு ஆறில் இருந்து குரு கேந்திரத்தில் இருந்தால் இந்த யோகம் ஏற்படும். இதனால் சலக ஐஸ்வரியங்களும் கிட்டும்.

5) **வசுமதி யோகம் :** சுபக்கிரகங்கள், உபசய வீடுகளான 3,6,10,11 இல் இருந்தால் வசுமதியோகம் உண்டாகும். இதனால் சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும்.

6) **விபரீத ராஜயோகம் :** துர்ஸ்தானங்களாகிய 6,8,12 இன் அதிபதிகள் தனித்தோ அல்லது ஒன்று கூடியோ 6,8,12 ஆம் வீடுகளில் இருந்தால் இவ்யோகம் உண்டாகும். இதனால் சாதகர் எதிர்பாராத வகையில் கோடீஸ்வரர் ஆவார்.

7) **நீசபங்க ராஜயோகம் :** கிரகங்கள் நீசராசியில் இருந்தால் நீசராவர். இருப்பினும் இவர்கள் நின்ற ராசிநாதன் ஆட்சி அல்லது உச்சம் பெற்றாலும், அல்லது லக்கனத்திற்கோ சந்திரனுக்கோ கேந்திரத்தில் இருந்தாலும் நீசபங்க ராசயோகம் உண்டாகும். அதாவது நீசம் நீங்கி உச்சமடையும். இதனால் சகல ஐஸ்வரியங்களும் உண்டாகும்.

**பஞ்சமகா புருஷ யோகங்கள்:**

8) **சகயோகம் :** சனி ஆட்சி, உச்சங்களில் கேத்திரத்தில் நிற்பதால் சகயோகம் உண்டாகும். கல்வியறிவு, சொத்து, காணி, பூமி, வாகனம், உயர்ந்த தொழில் ஏற்படும்.

9) **கம்ச யோகம் :** சுக்கிரன் ஆட்சி அல்லது உச்சம் பெற்று லக்கினத்திற்கோ அல்லது சந்திரனுக்கோ கேந்திரத்தில் இருந்தால்

இவ்யோகம் உண்டாகும். தனம், ஆடை, ஆபரணம், வீடு,வாசல் காணி,பூமி சேரும்.

10) **பத்தரயோகம்** : புதன் ஆட்சி, அல்லது உச்சம் பெற்று லக்கணத்திற்கோ, சந்திரனிற்கோ கேந்திரத்தில் இருந்தால் இவ்யோகம் உண்டாகும். கம்பீரமான தோற்றம், தனச்சேர்க்கை, பேச்சு வன்மை, புகழ், மதிப்பு என்பனவாகும்.

11) **ருசகயோகம் :**செவ்வாய் ஆட்சி அல்லது உச்சம் பெற்று லக்கினத்திற்கோ அல்லது சந்திரனுக்கோ கேந்திர திரிகோணங்களில் இருந்தால் இவ் யோகம் உண்டாகும். மேலதிகாரம், எதிரிகளை வெல்வல், சகல செல்வங்களும் பெறல், வாகனச் சேர்க்கை என்பன இடம்பெறும்.

12) **மாலவ்விய யோகம் :** சுக்கிரன் ஆட்சி அல்லது உச்சம் பெற்று லக்கணத்திற்கோ, சந்திரனுக்கோ கேத்திரத்தில் நிற்பதால் இவ்யோகம் உண்டாகும். பேர், புகழ், மதிப்பு மரியாதை, கௌரவம், அழகிய தோற்றம், பணம், பதவி கலைகளில் ஆர்வம் இருக்கும்.

**சகடயோகம் :** சந்திரனுக்குக் குரு 8 அல்லது 12 இல் இருந்தால் சகடயோகம் ஏற்படும். இந்தச் சாதகர் சக்கரம் போன்ற வாழ்வைப் பெறுவர். துன்பங்களே அதிகமாக வரும்.

**அகண்ட சாம்ராஜ்ய யோகம்**

2,9 அல்லது 11 இற்கு உரியவன் ஆட்சி அல்லது உச்சம் பெற்று, பலம் பெற்று குரு ஐந்திற்கோ அல்லது பத்திற்கோ அதிபதியாகிக் கேந்திரங்களில் இருந்தால் இந்த யோகம் உண்டாகும். இதனால் கல்வி, தனம், காணி, பூமி சேரும்.

# திருமணப் பொருத்தம்

திருமணங்கள் சொர்க்கத்தில் நிட்சயிக்கப்படுகின்றன என்றும், மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்தவரம் என்றும், இந்து சமயம் கூறுகிறது. ஓர் ஆணும் ஒரு பெண்ணும் சமய சம்பிரதாயங்களின்படி இணைந்து கொள்வதே திருமணம். பெரியோர்கள் நிட்சயித்து சமயவிதிமுறைக்கேற்ப நடக்கும் சடங்குதான் திருமணம். வாழ்வில் அன்பு, பண்பு, அமைதி, பணம், பொருள், காணி, பூமி பிள்ளைகள் என்பன இருவரையும் சேர வேண்டும் என்பதற்காகச் சுபநாளில், சுபவேளையில் நடைபெறுவது திருமணம். இவை சேரப் பொருத்தங்கள் அமைதல் வேண்டும். அதற்காகவே சோதிடர்கள் பொருத்தம் பார்க்கின்றனர். இது அவசியமான ஒன்றாகும்.

## பொருத்தங்கள்

தினப் பொருத்தம், கணப்பொருத்தம், யோனிப் பொருத்தம், ரச்சுப் பொருத்தம், வேதைப் பொருத்தம், ராசிப் பொருத்தம், நாடிப்பொருத்தம், நட்சத்திரப் பொருத்தம், மகேந்திரப் பொருத்தம், ஸ்திரிதீர்க்கப் பொருத்தம், ராசி அதிபதிப் பொருத்தம் போன்ற பொருத்தங்களைப் பார்ப்பது வழக்கம்.

திருமணம் என்பது எதிர்காலத்தில் நல்ல குடிமக்களை உருவாக்குவதற்காகப் பெரியோர்களால் செய்து வைக்கப்படும் முக்கியமான சடங்காகும். பொருத்தங்கள் பார்த்தல் வேண்டும். முக்கியமாக மனப்பொருத்தம் பார்த்தல் வேண்டும். உறவுகளையோ, பணம், பொருள், தகுதி, தராதரத்தையோ பார்த்துத் திருமணம் செய்யக்கூடாது. எதிர்காலம் இன்பமாக அமையவேண்டுமென்பதே திருமணங்களின் குறிக்கோளாக அமைய வேண்டும்.

முதலாவதாக நட்சத்திரங்கள் பொருந்த வேண்டும். அவை பொருந்தா விட்டால், தோஷங்கள் உண்டாகும். விலக்கப்பட்ட நட்சத்திரங்களையும், பொருந்தாத நட்சத்திரங்களையும் விலக்க வேண்டும். இவை பொருந்தாவிட்டால் குடும்பத்தில் பொருள் இருந்தாலும் நிம்மதி இராது.

அடுத்துக் கணப்பொருத்தம் இதிகாசங்களையும், புராணங்களையும் எடுத்து நோக்கினால், தேவர், மனிதர், இராட்சதர் என்ற மூன்று இனங்களும் தான் இன்று மூன்று கணங்களாவதைக் காணலாம். இராட்சதர்களும், தேவர்களும், நிரந்தரப் பகையாளிகள், புராண இதிகாசங்களின்படியே கணங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

அடுத்து மகேந்திரப் பொருத்தம் பார்ப்பது நன்மக்கட் பேற்றிற்காக பெண் சகல வசதிகளுடனும் தீர்க்க சுமங்கலியாக வாழ வேண்டுமென்று எண்ணியே இப்பொருத்தம் பார்க்கப்படுகிறது.

அடுத்து யோனிப்பொருத்தம் ஆண், பெண் உறவில் இன்பத்தைக் கொடுப்பதற்காகப் பார்க்கப்படுவது. பொருத்தமான யோனிகளானால் அன்பு,

ஆசை, விருப்பு, நெருக்கம், பிரிவின்மை, மகிழ்வு என்பன உண்டாகும். இதற்காகவே இப் பொருத்தம் பார்க்கப்படுகிறது.

அடுத்து இராசிப் பொருத்தம் இரும்பைக் காந்தம் கவர்வது போல இராசியை இராசி கவர்ந்து மகிழ்வைக் கொடுக்கும். இராசி அதிபதிகள் பொருத்தமானவர்களாக இருந்தால் ஊடல் ஏற்படுமே தவிரப் பிரிவு ஏற்படாது.

அடுத்து வசியப் பொருத்தம் பிரச்சினைகள் துன்பங்கள் வந்தாலும் வசியம் செய்யப்பட்டவர்கள் போல பிரியாமல் வாழ இப்பொருத்தம் உதவும்.

அடுத்து இரச்சுப் பொருத்தம் என்கின்ற தாலிப் பொருத்தம் இப்பொருத்தம் இல்லாதவிடத்து புருஷன் நோயாளியாகலாம், மரணமடையலாம், பணக்கஷ்டம், உறவினர் பகை, மனைவிக்குத் தீராத நோய் என்பன உண்டாகும்.

நாடிப்பொருத்தம் என்பது இரத்தம் பொருந்துவது. சிலரின் இரத்த வகை சிலருக்குப் பொருந்தாது. இதனால் வலது குறைந்த பிள்ளைகள் பிறப்பார்கள். ஆண் பெண் உறவில் திருப்தியிராது.

அடுத்து வேதைப் பொருத்தம் என்பது குற்றம், குறைகளைப் பொறுத்துக் கொள்ளும் தன்மையை உண்டாக்குவது. மேற்சொல்லப்பட்ட காரணங்களுக்காகத்தான் திருமணத்தின் போது பொருத்தம் பார்க்கப்படுகிறது.

## முக்கியமான பொருத்தங்கள்

தினப்பொருத்தம், கணப்பொருத்தம், யோனிப்பொருத்தம், ராசிப் பொருத்தம், ரச்சுப்பொருத்தம் என ஐந்து பொருத்தங்கள் இருப்பின் திருமணம் செய்யலாம். இதில் மூன்று கட்டாயம் பொருந்த வேண்டும். ரச்சுப் பொருந்தா விட்டால் திருமணம் செய்யக்கூடாது.

### 1) தினப் பொருத்தம்

பெண்ணின் நட்சத்திரம் முதல் புரிசனின் நட்சத்திரம் 2,4,6,8,9,11,13,15,18,20,24,26 என எண்ணிக்கையில் இருப்பது உத்தமம்.இவ்வெண்ணிக்கையில்லாத நட்சத்திரம் பொருந்தாது.

ரோகிணி, திருவாதிரை, மகம், விசாகம், திருவோணம், அத்தம், உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் ஆணும் பெண்ணும் பிறந்திருந்தால் உத்தமம்.

பூரம், உத்திரம், சித்திரை, புனர்பூசம், பூசம், அஸ்வினி, கார்த்திகை, பூராடம், உத்திராடம், மிருகசீரிடம், அனுசம் ஆகிய நட்சத்திரங்களில் பெண்ணும் ஆணும் பிறந்திருந்தால் மத்திமம். ஏனையவை பொருந்தாது.

### 2) கணப்பொருத்தம்

#### தேவகணம்

அஸ்வினி, மிருகசீருடம், புனர்பூசம், பூசம், அத்தம், சுவாதி, அனுசம், திருவோணம், ரேவதி ஆகிய 9 நட்சத்திரங்களும் தேவகணம்.

#### மனுச கணம்

பரணி, ரோகிணி, திருவாதிரை, பூரம், உத்தரம், பூராடம், உத்திராடம், பூரட்டாதி, உத்தரட்டாதி ஆகிய 9 நட்சத்திரங்களும் மனுச கணம்.

**இராட்சத கணம்**

கார்த்திகை, ஆயிலியம், மகம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், அவிட்டம், சதயம், ஆகிய 9 நட்சத்திரங்களும் இராட்சத கணம்.

பெண்ணும் மாப்பிள்ளையும் இராட்சத கணம் தவிர ஒரே கணமாக இருந்தால் உத்தமம்.

பெண் தேவகணம், மாப்பிள்ளை மனிதகணமானால் மத்திமம்

பெண் தேவகணம், மாப்பிள்ளை இராட்சதகணமானால் அதமம். இது போல பெண் மனித கணமும், மாப்பிள்ளை இராட்சதகணமானால் அதமம். பெண் இராட்சதகணமும் மாப்பிள்ளை மனிதகணமும் ஆனால் பொருந்தாது.

**3) மகேந்திரப்பொருத்தம் ~ புத்திரப்பேறு, தனதானிய விருத்தி**

பெண்ணின் நட்சத்திரம் முதல் புரிசனது நட்சத்திரம் வரை எண்ணினால் 4,7,10,13,16,19,22,25 வருமாயின் உத்தமம்.

**4) ஸ்திரிதீர்க்கம்**

சகல சம்பத்துக்களும் விருத்தியாகும். தீர்க்க சுமங்கலியாகப் பெண் இருப்பதற்கு பெண்ணின் நட்சத்திரம் முதல் மாப்பிள்ளையின் நட்சத்திரம் வரை எண்ணினால் 13 இற்கு மேலிருந்தால் பொருத்தம். அதற்குக் குறைவாக இருந்தால் பொருந்தாது.

## 5) யோனிப் பொருத்தம் (தாம்பதிய சுகம்)

ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் ஒவ்வொரு மிருகம் உண்டு. பெண்ணுக்குப் பெண் யோனியாகவும், ஆணுக்கு ஆண் யோனியாகவும் பகையில்லாத யோனியாக இருந்தால் உத்தமம். இருவருக்கும் ஆண் யோனியானால் பொருந்தாது.

| | |
|---|---|
| அச்சுவினி | ~ ஆண்குதிரை |
| பரணி | ~ ஆண் யானை |
| கார்த்திகை | ~ பெண் ஆடு |
| ரோகிணி | ~ ஆண் நாகம் |
| மிருகசீரிடம் | ~ பெண்சாரை |
| திருவாதிரை | ~ ஆண் நாய் |
| புனர்பூசம் | ~ பெண் பூனை |
| பூசம் | ~ ஆண் ஆடு |
| ஆயில்யம் | ~ ஆண் பூனை |
| மகம் | ~ ஆண் எலி |
| பூரம் | ~ பெண் எலி |
| உத்தரம் | ~ எருது |
| அத்தம் | ~ பெண் எருமை |
| சித்திரை | ~ ஆண்புலி |
| சுவாதி | ~ ஆண் எருமை |
| விசாகம் | ~ பெண்புலி |
| அனுஷம் | ~ பெண்மான் |
| கேட்டை | ~ கலைமான் |
| மூலம் | ~ பெண்நாய் |

| | |
|---|---|
| பூராடம் | ~ ஆண்குரங்கு |
| உத்திராடம் | ~ மலட்டுப்பசு |
| திருவோணம் | ~ பெண்குரங்கு |
| அவிட்டம் | ~ பெண்சிங்கம் |
| சதயம் | ~ பெண்குதிரை |
| பூரட்டாதி | ~ ஆண்சிங்கம் |
| உத்தரட்டாதி | ~ பாற்பசு |
| ரேவதி | ~ பெண் யானை |

(இதில் சில பஞ்சாங்கங்களில் உத்தராடம் ~ கீரி என்று குறிப்பிட்டுள்ளது)

| | |
|---|---|
| பாம்பு ~ கீரி | ஜென்ம விரோதிகள் |
| யானை ~ சிங்கம் | |
| குரங்கு~ஆடு | |
| மான் ~ நாய் | |
| எலி ~ பூனை | |
| குதிரை ~ எருமை | |
| பசு — புலி | |

மேலே சொல்லப்பட்ட இரண்டு நட்சத்திரங்களில் முதல் நட்சத்திரம் ஆணாகவும், இரண்டாவதைப் பெண்ணாகவும் அறிந்து விவாகம் செய்தல் நலம். ஒரே இனமாக யோனி ஏற்படுவதால் தம்பதிகளுக்குள் ஒற்றுமை அதிகம் உண்டு. உதாரணமா அச்சுவினி, சதயம் இவற்றில் அச்சுவினி

ஆணாகவும், சதயம் பெண்ணாகவும் இரண்டும் பொருந்தி உள்ளது. இதைப் போல ஏனையவற்றையும் பார்த்துச் செய்யவும்.

### 6) இராசிப்பொருத்தம் (வம்ச விருத்தி)

பெண்ணின் இராசியில் இருந்து மாப்பிள்ளையின் இராசியினை எண்ணினால் 6 இற்குமேல் இருந்தால் பொருத்தம். ஆறாவதும் பொருந்தாது. இருப்பினும் கும்பமும் சிங்கமும், மகரமும், கடகமும் பொருந்தாது. 2,6,8,12, உம் பொருந்தாது. பெண் இராசிக்கு மாப்பிள்ளையின் இராசி 6,8~8,6 ஆக வந்தால் சஷ்டாஷ்க தோசம் உண்டாகும். இது மிகவும் தீமையானது. இதற்கு விலக்குண்டு.

பெண்ணின் இராசியும் மாப்பிள்ளையின் இராசியும் ஒரே இராசியாக இருந்தால் சுபம். 1,3,4,5,9,11 ஆக வரின் மத்திமம்.

## அனுகூல சஷ்டாஷ்டம்

| | **பெண்ணின் இராசி** | **மாப்பிள்ளையின் இராசி** |
|---|---|---|
| 1) | மேடம் | கன்னி |
| 2) | தனுசு | இடபம் |
| 3) | துலாம் | மீனம் |
| 4) | கும்பம் | கடகம் |
| 5) | சிங்கம் | மகரம் |
| 6) | மிதுனம் | விருட்சிகம் |

இவ் ஆறு இராசிக்காரர்களுக்கும் சஷ்டாஷ்டக தோஷம் இராது.

### 7) இராசி அதிபதிப் பொருத்தம் (சந்ததி விருத்தி)

| கிரகம் | நட்பு | சமம் | பகை |
|---|---|---|---|
| 1.சூரியன் | சந்,செவ்,குரு | புதன் | சுக்,சனி,ரா,கே |
| 2.சந்திரன் | சூரிய,புத | செ,குரு,சுக்,சனி | ராகு,கேது |

| | | | |
|---|---|---|---|
| 3.செவ்வாய் | சூரி,சந்,குரு | சுக்,சனி | ராகு,கேது,புத |
| 4.புதன் | சூரி,சுக் | செ.கு.ரா,கேது,ச | சந்திரன் |
| 5.குரு | சூரி,சந்,செவ் | சனி,ரா,கேது | புதன்,சுக் |
| 6.சுக்கிரன் | பு,ச,ரா,கேது | செவ்,குரு | சூரி,சந்,செ |
| 7.சனி | பு,சுக்,ரா,கேது | குரு | சூரி,சந்,செ |
| 8.ராகு,கேது | சனி,சுக் | புதன்,குரு | சூரி,சந்,செவ் |

1. இருவருக்கும் நட்பானால் உத்தமம்.
2. ஒருவருக்குச் சமம், ஒருவருக்கு நட்பானால் உத்தமம்.
3. ஒருவருக்குப் பகை, ஒருவருக்கு நட்பானால் மத்திமம்
4. ஒருவருக்குச் சமம், ஒருவருக்குப் பகையானால் பொருத்தமில்லை
5. இருவருக்கும் பகையானாலும் பொருத்தமில்லை.

**8) வசியப்பொருத்தம்.**

**(கவர்ச்சி, அன்னியோன்யம் இசைந்து போதல்)**

**பெண்ணின் இராசி ~மாப்பிள்ளையின் இராசி**

மேடம் ~ சிங்கம், விருட்சிகம்
இடபம் ~ கடகம், துலாம்
மிதுனம் ~ கன்னி
கடகம் ~ விருட்சிகம், தனுசு
சிங்கம் ~ மகரம்
கன்னி ~ இடபம், மீனம்
துலாம் ~ மகரம்
விருட்சிகம் ~ கடகம், கன்னி
தனுசு ~ மீனம்
மகரம் ~ கும்பம்
கும்பம் ~ மீனம்
மீனம் ~ மகரம்
ஏனைய இராசிகள் பொருந்தாது.

**9) இரச்சுப் பொருத்தம். தாலிப்பொருத்தம் மிகமுக்கியமானது.**

ரச்சு 5 வகைப்படும். பெண் பிள்ளைகளுடைய நட்சத்திரங்கள் ஒரே ரச்சுவாக இல்லாமல் பார்த்துச் செய்தால், பெண் தீர்க்க சுமங்கலியாக வாழ்வாள்.

ஒரே ரச்சுவிலும், ஆரோஹணம், அவரோஹணம் என்று இரு பிரிவுகள் உண்டு. சிலர் ஆண்,பெண் நட்சத்திரங்கள் ஒரே ரச்சுவில் இருந்தாலும், ஆரோஹணம், அவரோஹணமாக இருந்தால் செய்யலாம் என்பார்கள். என்றாலும் ஒரே ரச்சுவாக இல்லாமலிருப்பது நல்லது.

1. சிரோ ரஜ்ஜீ ~ புருஷன் மரணம்
2. கண்ட ரஜ்ஜீ ~ பெண் மரணம்
3. உதார ரஜ்ஜீ~ புத்திரதோஷம்
4. ஊரு ரஜ்ஜீ ~ பண நஷ்டம்
5. பாத ரஜ்ஜீ ~ பிரயாணத்தில் துன்பம்

1. மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் ~ சிரஸ்

2. ரோகிணி,அத்தம்,திருவோணம், ஆரோஹணம்
திருவாதிரை,சுவாதி,சதயம், அவரோஹணம் } கண்டம்

3. கார்த்திகை,உத்தரம்,உத்ராடம், ~ஆரோஹணம்
புனர்பூசம்,விசாகம்,பூரட்டாதி, ~ அவரோஹணம் } உதர

4. பரணி,பூரம்,பூராடம், ~ ஆரோஹணம்
பூசம்,அனுஷம்,உத்ரட்டாதி,~ அவரோஹணம் } ஊரு

5. அச்சுவினி,மகம்,மூலம்,~ ஆரோஹணம்
ஆயில்யம்,கேட்டை,ரேவதி,~அவரோஹணம் } பாதம்

## ୨) வேதைப் பொருத்தம்

வேதை என்றால் விட்டுக்கொடுத்து வாழுதல், ஒருவரை ஒருவர் தாங்குதல் என்று பொருள். வேதையில் இருக்கும் நட்சத்திரங்கள் பொருந்தாது. மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் இம்மூன்று நட்சத்திரங்களுக்குள் ஒன்றுக்கொன்று வேதை உண்டு. ஆகவே அவை பொருந்தாது. ஒன்றுக்கொன்று வேதை இல்லாதிருப்பதே பொருந்தும்.

| | | |
|---|---|---|
| அச்சுவினிக்கு | கேட்டை | வேதையாகும் |
| பரணிக்கு | அனுசம் | வேதையாகும் |
| கார்த்திகைக்கு | விசாகம் | வேதையாகும் |
| ரோகிணிக்கு | சுவாதி | வேதையாகும் |
| திருவாதிரைக்கு | திருவோணம் | வேதையாகும் |
| புனர்பூசத்துக்கு | உத்ராடம் | வேதையாகும் |
| பூசத்துக்கு | பூராடம் | வேதையாகும் |
| ஆயில்யத்துக்கு | மூலம் | வேதையாகும் |
| மகத்துக்கு | ரேவதி | வேதையாகும் |
| பூரத்துக்கு | உத்ரட்டாதி | வேதையாகும் |
| உத்திரத்துக்கு | உத்ரட்டாதி | வேதையாகும் |
| அத்தத்திற்கு | சதயம் | வேதையாகும் |

## ১0) நாடிப் பொருத்தம்

பெண்ணின் நாடியும், ஆணின் நாடியும் வெவ்வேறாக இருத்தல் வேண்டும். ஒரே நாடியானால் குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்படும். இது

இன்றைய மருத்துவத்தின் இரத்தப் பிரிவைக் குறிக்கும். குறைப் பிரசவம், அங்கவீனங்கள் ஏற்படாதிருக்க இப்பொருத்தம் உதவும்.

| **வாத நாடி** | **பித்த நாடி** | **சிலோத்துவ நாடி** |
|---|---|---|
| அஸ்வினி, | பரணி, | கார்த்திகை |
| திருவாதிரை | மிருகசீருடம் | ரோகிணி |
| புனர்பூசம் | பூசம் | ஆயிலியம் |
| உத்தரம் | பூரம் | மகம் |
| அத்தம் | சித்திரை | சுவாதி |
| கேட்டை | அனுசம் | விசாகம் |
| மூலம் | பூராடம் | உத்தராடம் |
| சதயம் | அவிட்டம் | திருவோணம் |
| பூரட்டாதி | உத்தரட்டாதி | ரேவதி |

ஆண்,பெண் இருவருக்கும் சிலேத்துவ நாடியாக இருந்தாலும் பொருத்தம் உண்டு.

## விருட்சம்

| **பால் உள்ளவை** | **பால் இல்லாதவை** |
|---|---|
| கார்த்திகை – அத்தி | அஸ்வினி –எட்டி |
| ரோகினி – நாவல் | பரணி – நெல்லி |
| பூசம் ~ அரசு | மிருகசீரிடம் ~ கருங்காலி |
| ஆயிலியம் ~ புன்னை | திருவாதிரை –செங்கருங்காலி |
| மகம் ~ ஆல் | புனர்பூசம் ~ மூங்கில் |
| பூரம் ~ பலா | சித்திரை – வில்வம் |
| உத்தரம் ~ அலரி | சுவாதி – மருதம் |
| அத்தம் ~ வேல் | விசாகம் ~ விளா |
| கேட்டை – பிராய் | அவிட்டம் ~ வன்னி |
| மூலம் ~ மாமரம் | அனுசம் ~ மகிழ் |

| | |
|---|---|
| பூராடம் ~ வஞ்சி | சதயம் ~ கடம்பு |
| உத்தராடம் ~ பலா | உத்தரட்டாதி – வேம்பு |
| திருவோணம் ~ எருக்கு | |
| பூரட்டாதி – தேமா | |
| ரேவதி ~ இலுப்பை | |
| | |
| | |

பால் மரம் இல்லாதிருப்பின் மகேந்திரப் பொருத்தம் உண்டானால் திருமணம் செய்யலாம். மகேந்திரப் பொருத்தமும் இல்லாதவிடத்து ஆண், பெண் சாதகத்தில் 5ஆம் இடம், 5ஆம் இடத்திற்குரியவர், குருவின் நிலை இவற்றை ஆராய்ந்து முடிவெடுக்கலாம்.

## விவாகப் பொருத்தமுள்ள நட்சத்திரங்கள்

| வரிசை எண் | பெண்ணுடைய நட்சத்திரம் | பொருந்தக் கூடிய வரனின் நட்சத்திரங்கள் | பொருந்தாத நட்சத்திரங்கள் |
|---|---|---|---|
| 1 | அச்சுவினி<br>மகம்<br>மூலம் | பரணி,ரோகி,திருவாதி,<br>பூச,பூரம்,அத்தம்,<br>சுவாதி,அனுஷ,பூராடம்<br>திருவோ,சதை,உத்தரட் | கார்த்,மிருகசீ<br>புனர்,உத்தி,சித்தி,<br>விசாக,உத்தராடம்,<br>அவிட்,பூரட்டாதி |
| 2. | பரணி<br>பூரம்<br>பூராடம் | கார்த்திகை<br>மிருக,புனர்,ஆயி,உத்தி<br>சித்திர,விசா,கேட்,உத்,<br>அவிட்,பூர்,ரேவ | ரோகி,திருவாதி.பூசம்<br>அத்தம்,சுவாதி,அனுஷ.<br>திருவோ,சதை,உ.டாதி |
| 3. | கிருத்திகை<br>உத்திரம்<br>உத்திராடம் | ரோகி,திருவாதி,<br>பூச,மகம்,அத்,சுவாதி.<br>அனு,மூலம்,திருவோ<br>சதை, உ.டாதி,அச்சுவினி | மிருக,புனர்,ஆயி,சித்தி,<br>விசா,கேட்டை,அவிட்<br>பூரட்,ரேவதி |
| 4. | ரோகிணி<br>அத்தம்<br>திருவோணம் | மிரு,புனர்.ஆயி,பூர<br>சித்,விசா,கேட்,பூரா<br>அவிட்,பூரட்,ரேவ<br>பரணி | திருவா,பூசம்,மகம்,<br>சுவாதி,அனுஷ,<br>மூலம்,சதயம்,உ.டாதி<br>அசுவ |
| 5 | மிருகசீர்டம்<br>சித்திரை<br>அவிட்டம் | திருவா,பூசம்,மகம்<br>உத்ரம்,சுவா,அனு,<br>மூலம்,உ~டம்,சதை<br>உ~ாதி,அசுவ,கார்த் | புனர்,ஆயில், பூரம்<br>விசா,கேட்,பூராடம்<br>பூரட்,ரேவதி,பரணி |
| 6 | திருவாதிரை<br>சுவாதி<br>சதையம் | புனர்,ஆயி,பூரம்,<br>அத்,விசா,கேட்,<br>பூரா,திருவோ,பூரட் | பூசம்,மகம்,உத்திரம்<br>அனுஷம்,மூலம்,உ~ம்<br>அச்சுவினி,கார்த்திகை |

| | | | |
|---|---|---|---|
| | | ரேவ, பரணி,ரோகி | |
| 7 | புனர்வசு<br>விசாகம்<br>பூரட்டதி | பூசம்.மகம்,உத்தரம்<br>சதி,அனு,மூலம்,<br>உ.டாதி,அசு,க்ருத்,<br>மிரு | ஆயில்,பூரம்,அத்,<br>கேட்,பு.டம்,திருவோ,<br>ரேவதி,பரணி,<br>ரோகிணி |
| **8.** | பூசம்<br>அனுஷம்<br>உத்தரட்டாதி | ஆயில், பூரம்,அத்<br>சுவா,கேட்,பூரா,<br>திருவோ,சதை,ரேவதி<br>பரணி, ரோகி, திருவா | மகம்,உத்தரம்,சித்தி,<br>மூலம்,அவிட்,அச்சுவினி,<br>கார்த்திகை,மிருகசீருடம் |
| 9 | ஆயில்யம்<br>கேட்டை<br>ரேவதி | மகம், உத்ரம்,சித்<br>விசா,மூலம்,உ~டம்,<br>அவிட், பூரட்டாதி,<br>அச்சு,கார்த்,மிருக,புனர் | பூரம், அத்,சுவாதி,<br>பூரா,திருவோ,சதை,<br>பரணி,ரோகி,திருவாதி |

**செவ்வாய் தோசம்**

திருமணத்தின் போது மிகவும் அவதானமாகப் பார்க்க வேண்டிய விடயம் இது. இலக்கணம், சந்திரன், சுக்கிரன், ஆகியவற்றிற்கு 1,7,8~2,4,12, ஆகிய இடங்களில் செவ்வாய் இருந்தால் தோசமெனக் கொள்ளல் வேண்டும். மற்றைய பாவக் கிரகங்கள் இருந்தாலும் தோசம் உண்டு. மேடம், விருட்சிகம், மகரத்தில் செவ்வாய் இருந்தால் தோசம் இல்லை. சூரியன் குரு, சனி ஆகியோருடன் சேர்ந்தோ அல்லது பார்க்கப்பட்டிருந்தாலோ தோசமில்லை. செவ்வாய் தோசம் இருவருக்கும் இருத்தல் வேண்டும். ஒருவருக்கிருந்து மற்றவருக்கு இல்லாவிட்டால் பெருந்துன்பங்கள் வாழ்வில் ஏற்படும். அதனால் சோதிடநூல்கள் செவ்வாய் தோஷபரிகாரமாகப் பலவற்றைக் கூறியுள்ளன. அந்தப் பரிகாரங்களும் இல்லாவிட்டால் திருமணம் செய்யக்கூடாது.

1) கடக லக்கினம், சிம்ம இலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு செவ்வாய் எங்கிருந்தாலும் தோசம் இல்லை.

2) செவ்வாய் இருக்கும் இரண்டாம் இடம் மிதுனம் அல்லது கன்னியானால் தோஷமில்லை.

3) செவ்வாய் இருக்கும் நான்காமிடம், மேடம், விருட்சிகமானால் தோஷமில்லை.

4) செவ்வாய் இருக்குமிடம் 7ஆம் இடம், கடகம் மகரமானால் தோசமில்லை.

5) செவ்வாய் இருக்குமிடம் எட்டாம் இடம், தனுசு மீனமானால் தோசமில்லை.

6) செவ்வாய் இருக்குமிடம், பன்னிரண்டாம் இடம், இடபம், துலாமானால் தேசாமில்லை.

7) செவ்வாய் குருவுடன் சேர்ந்திருந்தால் தோஷமில்லை.

8) செவ்வாய் சந்திரனுடன் சேர்ந்திருந்தால் தோஷமில்லை.

9) செவ்வாய் புதனுடன் சேர்ந்திருந்தாலும், புதன் பார்த்தாலும் தோஷமில்லை.

10) செவ்வாய், சூரியனுடன் சேர்ந்திருந்தாலும், சூரியன் பார்த்தாலும் தோஷமில்லை.

11) செவ்வாய் இருக்கும் இராசியின் அதிபதி லக்கனத்திற்கு 1,4,5,7,9,10 இவற்றில் எங்கிருந்தாலும் தோஷமில்லை.

12) 8,12,இல் செவ்வாய் இருக்கும், ராசி, மேடம், சிங்கம், விருச்சிகம், மகரமானால் தோஷமில்லை.

13) செவ்வாய் தனது உச்ச வீடான மகரத்திலாவது, சொந்த வீடுகளான மேடம், விருச்சிக ராசிகளில் இருந்தால் தோஷமில்லை.

14) சனி,ராகு,கேது இவர்களுடன் கூடியிருந்தாலும் இவர்களாற் பார்க்கப்பட்டாலும் தோசமில்லை.

15) செவ்வாய் தனது மித்திரர்களாகிய சூரியன், சந்திரன், குரு இவர்களது வீடுகளாகவும், சிங்கம், கடகம், தனுசு, மீனம் ஆகிய ராசிகளில் எங்காவது இருந்தாலும் தோஷமில்லை.

## கிரகபாவ அட்டவணை

fpuf ght ml;ltiz

**மீனம்**

| | 1,7,8 | 2,4,12 |
|---|---|---|
| சூரியன் | 4 | 1 |
| சனி | 4 | 1 |
| ராகு | 4 | 1 |
| கேது | 4 | 1 |
| செவ்வாய் | 32 | 8 |

**மேடம்**

| | 1,7,8 | 2,4,12 |
|---|---|---|
| சூரியன் | 12 | 3 |
| சனி | 16 | 4 |
| ராகு | 16 | 4 |
| கேது | 16 | 4 |
| செவ்வாய் | 16 | 4 |

**இடபம்**

| | 1,7,8 | 2,4,12 |
|---|---|---|
| சூரியன் | 16 | 4 |
| சனி | 4 | 1 |
| ராகு | 16 | 4 |
| கேது | 16 | 4 |
| செவ்வாய் | 8 | 2 |

**மிதுனம்**

| | 1,7,8 | 2,4,12 |
|---|---|---|
| சூரியன் | 16 | 4 |
| சனி | 4 | 1 |
| ராகு | 4 | 1 |
| கேது | 4 | 1 |
| செவ்வாய் | 8 | 2 |

**கும்பம்**

| | 1,7,8 | 2,4,12 |
|---|---|---|
| சூரியன் | 16 | 4 |
| சனி | 8 | 2 |
| ராகு | 16 | 4 |
| கேது | 16 | 4 |
| செவ்வாய் | 32 | 8 |

**கடகம்**

| | 1,7,8 | 2,4,12 |
|---|---|---|
| சூரியன் | 16 | 4 |
| சனி | 16 | 4 |
| ராகு | 16 | 4 |
| கேது | 16 | 4 |
| செவ்வாய் | 32 | 8 |

**மகரம்**

| | 1,7,8 | 2,4,12 |
|---|---|---|
| சூரியன் | 16 | 4 |
| சனி | 8 | 2 |
| ராகு | 4 | 1 |
| கேது | 4 | 1 |
| செவ்வாய் | 24 | 6 |

**சிங்கம்**

| | 1,7,8 | 2,4,12 |
|---|---|---|
| சூரியன் | 8 | 2 |
| சனி | 16 | 4 |
| ராகு | 16 | 4 |
| கேது | 16 | 4 |
| செவ்வாய் | 32 | 8 |

**தனு**

| | 1,7,8 | 2,4,12 |
|---|---|---|
| சூரியன் | 4 | 1 |
| சனி | 4 | 1 |
| ராகு | 4 | 1 |
| கேது | 4 | 1 |
| செவ்வாய் | 32 | 8 |

**விருச்சிகம்**

| | 1,7,8 | 2,4,12 |
|---|---|---|
| சூரியன் | 16 | 4 |
| சனி | 16 | 4 |
| ராகு | 12 | 3 |
| கேது | 12 | 3 |
| செவ்வாய் | 16 | 4 |

**துலாம்**

| | 1,7,8 | 2,4,12 |
|---|---|---|
| சூரியன் | 16 | 4 |
| சனி | 12 | 3 |
| ராகு | 4 | 1 |
| கேது | 4 | 1 |
| செவ்வாய் | 8 | 2 |

**கன்னி**

| | 1,7,8 | 2,4,12 |
|---|---|---|
| சூரியன் | 16 | 4 |
| சனி | 4 | 1 |
| ராகு | 4 | 1 |
| கேது | 4 | 1 |
| செவ்வாய் | 8 | 2 |

லக்கனத்திற்கு கிரகபாவம் பார்ப்பது போல, சந்திரனையும், சுக்கிரனையும் லக்கினமாகக் கொண்டும் கிரக பாவம் பார்ப்பதுண்டு. அப்படிப் பார்ப்பதாயின் சந்திரனை எண்ணி, கணிக்கப்படும் பாவத்தின் அரைப்பங்கையும், சுக்கிரனை எண்ணிக் கணிக்கப்படும் பாவத்தின் காற்பங்கையும் லக்கின பாவத்துடன் கூட்டிப் பார்த்தல் வேண்டும்.

ஆணின் கிரகபாவமும், பெண்ணின் கிரகபாவமும் சமமாக இருப்பினும், ஆணின் கிரகபாவத் தொகையில் 75 வீதத்திற்கு மேல் நூறுக்குள் பெண்ணின் கிரகபாவம் இருப்பினும் உத்தமம்.

ஆணின் கிரகபாவத் தொகையில் ஐம்பது வீதத்திற்கும் எழுபத்தைந்து வீதத்திற்கும் இடைப்பட்ட எண்ணிக்கையில் பெண்ணின் கிரகபாவம் இருப்பின் மத்திமம். பெண்ணின் கிரகபாவம் ஆணின் கிரகபாவத்திலும் ஐம்பது வீதத்திற்கு குறைந்தால் பொருந்தாது.

திருமணம் செய்ய உகந்தநாட்கள், தலைப்பிள்ளையாக இருந்தால் பிறந்த வாரம், பிறந்த நட்சத்திரம், பிறந்த மாதத்தில் திருமணம் செய்யக்கூடாது.

அஸ்வினி, புனர்பூசம், பூசம், சித்திரை, அவிட்டம், சதயம், ரோகிணி, மிருகசீரிடம், மகம், உத்தரம், அத்தம், சுவாதி, அனுசம், மூலம், உத்தராடம், திருகோணம், உத்தரட்டதாதி, ரேவதி, ஆகிய நட்சத்திரங்கள் சிறந்தவை, தலைப்பிள்ளை ஆணும், பெண்ணும் ஆனிமாத்திலோ அல்லது கேட்டை நட்சத்திரத்திலோ பிறந்திருந்தால் திருமணம் செய்தலாகாது.

ஏக நட்சத்திரங்களில் சில பொருத்தம் பார்க்காமலே திருமணம் செய்யலாம். உதாரணமாக திருவோண நட்சத்திரத்தில் பிறந்த ஆணும் பெண்ணும் திருமணம் செய்யலாம் என்று சோதிட நூல்கள் கூறுகின்றன. ஆனால் கிரகங்கள் மாறும் போது இருவருக்கும் ஒரே பலனே நடக்கும். ராகு,கேது, குரு, சனி என்பன மாறும் போதும் இன்பத்தைக் கொடுக்கும் போதும் துன்பத்தைக் கொடுக்கும் போதும் ஒரே மாதிரியாகவே கொடுக்கும் அட்டமத்துச் சனி, ஏழரைச் சனி என்பன நடக்கும் போது இருவரும் பெரும் துன்பமடைவர். மனைவியின் பலன் கணவருக்கும், கணவனின் பலன் மனைவிக்கும் துன்ப துயர நேரங்களில் உதவும். இருவருக்கும் துன்பமானால் உதவ யாரும் இரார். இது போல வருமானம், தொழில் நோய் என்பதையும் அமையும். எனவே சாதகர்கள் இவ்விடயத்தில் கவனமாக இருத்தல் வேண்டும். கோவலன், கண்ணகி, நளன் தமயந்தி, அரிச்சந்திரன் சந்திரமதி போன்றவர்கள் துன்பபட்பட்ட போது கடவுளால் மட்டுமே உதவ முடிந்தது. எனவே ஏகநட்சத்திரத்தைத் தவிர்த்தல் நன்று.

**சாதகம் இல்லாதவர்களுக்கு** கையில் உள்ள ரேகைகளைக் கொண்டு பலன் சொல்லலாம். இம்முறை 6000 வருடம் பழமையானது. இதைவிடச் சாமுத்திரிகா சாத்திரம் என்று சொல்லப்படுகின்ற உடலில் உள்ள மச்சக்களைக் கொண்டும் அதன் பலன்களை அறியலாம்.

திருமணம் என்றதும் சாதகத்தைப் பார்த்த பின்பே நிட்சயிக்கப்படுகிறது. கைரேகை, மச்சம், எண்கள் மூலமும் திருமணப் பொருத்தம் பார்க்கலாம். இவை யாவும் 2000 வருடங்களாக நடைமுறையில் உள்ளன. உயர்ந்த உத்தியோகத்தில் உள்ள ஒரு பெண்ணை கல்வி கற்காத ஒரு ஆடவன் விரும்பிய போது தராதரம் பார்த்து அவள் மறுத்தாள். அவனது சாதகத்தில்

துர்ஸ்தானம் என்று சொல்லப்படுகின்ற 6,8,12 ஆம் வீடுகளின் அதிபதிகள் ஒன்று கூடிய இருந்தனர்.

இதனால் அவனுக்கு விபரீத ராஜயோகம் உண்டானது. இப்போ அவன் கோடீஸ்வரன். அந்தப் பெண் வயது சென்றும் திருமணமாகாது இருக்கிறாள். தற்போதைய பெண்கள் ஏதாவது தொழிலில் இருந்தால் தாம் படித்தவர்கள் என்ற கர்வத்தில் தொழில் இல்லாதவர்களையும் தனது தொழிலிலும் பார்க்கக் குறைந்த தொழில் செய்பவரகளையும் வெறுக்கின்றனர். ராஜயோகம் உள்ளவன் படிக்காவிட்டாலும் அரசனாகி விடுவான். இதை யாரும் உணர்வதில்லை. ஆணின் சாதகத்தில் பொருத்தம் இருக்கா என்றும் மட்டும் பாராது அவன் பிற்காலத்தில் எவ்வாறு வாழ்வான் என்பதையும் பார்த்தல் வேண்டும். இதைக் கவனத்தில் கொள்ளாமையால் தான் படித்த பல பெண்கள் முதிர்கன்னிகளாக இருக்கின்றனர். விதியை மதியால் வெல்லலாம். அதற்குச் சோதிடத்தில் வழிவகை உண்டு. கைரேகை, மச்சம், எண்கள் பற்றிச் சோதிட நூல்கள் கூறியவற்றை ஆய்வு செய்கிறேன். இம்முயற்சி வெற்றியளித்தால் அவை நூலுருவாகும்.

செவ்வாய் 1,7,8,2,4,12 இல் இருந்தால் தோஷம் உண்டென்று சொல்லப்பட்டபோதும் அதற்கு பரிகாரங்கள் கூறப்பட்டுள்ளன. அதுபோல ஏனைய கிரகங்களும் பகையானால் அப்பகையை நீங்கப் பரிகாரங்கள் உண்டு. அதனால் சாதகர்கள் பயப்படத்தேவையில்லை ஒன்பது கிரகங்களை விடக்கடவுள் சக்தி உள்ளதான மூளையைப் படைத்துள்ளார். அதனால் கல்வியைக் கற்று நூல்கள் பலவற்றைப் படித்து மேம்படலாம் என்பது சமயத்தின் கருத்து. அதனால் கடவுள் தந்த அரிய மூளையைப் பயன்படுத்தி வாழ்க்கையில் வெற்றி பெறுங்கள்.

பொருத்தம் பாராமல் யாரும் திருமணம் செய்வதில்லை. பொருத்தம் பார்க்கும் பலர் சாதகப் பொருத்தத்தை பார்க்கிறார்கள், மாப்பிள்ளையின் உத்தியோகத்தைப் பார்க்கிறார்கள். மிகுதியைப் பெரும்பான்மையானவர்கள் பார்ப்பதில்லை. ஒருவரனின் பிற்காலம் எப்படி உள்ளது? அவர் குடும்பத்தை நல்ல முறையில் கவனிப்பாரா? பதவி உயர்வுகள் பெறுவாரா? சமூகத்துடன் ஒத்துப்போவாரா என்பதைக் கவனிப்பதில்லை. இவற்றைக் கவனித்தால் பெரும்பாலான குடும்பங்களில் குழப்பங்கள் இராது.

“காசோதான் கடவுளடா..”, காசிருந்தால் ஆசைப்பட்ட அனைத்தையும் வாங்கலாம், தேசம் ஞானம் கல்வி ஈசன் பூசை எல்லாம் காசுக்குப் பின்னாலே.. என்பது சினிமாப்பாடல். பொருள் இல்லாதாருக்கு இவ்வுலக இன்பம் இல்லை, தான தருமம் செய்யாதாருக்கு மோட்ச இன்பமும் இல்லை என்பது திருக்குறள். இது இந்து சமயங்களின் கொள்கை. பெண்களைப் பொறுத்தவரை ஆண்களில் தொழிலே முன்னிலை பெறுகிறது. கல்வியறிவுள்ள ஓர் உயர்ந்த உத்தியோகத்தரால் தனது பெண் பிள்ளைகளுக்கு வைத்தியர், பொறியியலாளரை வாங்கிக் கொடுக்க முடியாது. ஆனால் கல்வியறிவில்லாத தனவந்தர்களால் அது முடியும்.

அடுத்து யோகங்களைப் பார்த்தல் வேண்டும். யோகங்களைப் பற்றி எழுதியுள்ளேன். சந்திரனுக்குக் குரு 8 அல்லது 12 இல் இருந்தால் அச்சாதகர் சக்கரம் போலச் சுற்றிக்கொண்டிருப்பார். கஷ்டமான பலன்கள் மேலோங்கியிருக்கும்.

சூரியனுக்கு 2இல் சந்திரன் ராகு, கேதுக்கள் இருக்கக்கூடாது. அதுபோலச் சூரியனுக்கு 12 இல் சந்திரன் ராகு, கேதுக்கள் இருக்கக்கூடாது. இருந்தால் இது வாழ்நாள் முழுவதும் உழைத்தாலும் வறுமையைக் கொடுக்கும்.

சந்திரனுக்கு ஏதேனும் ஒரு கேந்திரத்தில் குரு இருந்தால் பணம் குவியும். சந்திரனுக்கு 6,7,8 ஆம் வீடுகளில் சுபர்கள் குரு, புதன், சுக்கிரன் சேர்ந்தோ தனித்தனியாகவோ இருந்தால் மேலான தொழில், குடும்ப மகிழ்ச்சி பெரும் சொத்து ஆகியன இருக்கும். சந்திரனும் செவ்வாயும் சேர்ந்திருந்தால் பேர், புகழ், பணம். பொருள், காணி, பூமி மேலான தொழில் என்பன கிடைக்கும்.

குரு ஆட்சி, அல்லது உச்சம் பெற்று லக்கணத்திற்கோ, சந்திரனுக்கோ கேந்திரத்தில் இருந்தால் குடும் மகிழ்ச்சி, உயர்வான பிள்ளைகள், பெருந்தொழில், கோடிக்கணக்கான சொத்துக்கள் கிடைக்கும்.

லக்கினம் 7ஆம் ராசியைக் கொண்டே களத்திர பலனைக் கணித்தல் வேண்டும். களத்திரகாரன் சுக்கிரனாவான் அவனோடு குரு கூடியிருந்தால் அவன்னுக்கு உயர்ந்த பெண் கிடைப்பாள். சுக்கிரனுடன் செவ்வாய், சூரியன் கூடியிருந்தால் அவன் அரசனைப் போல வாழ்வான். சந்திரனும், சனியும், சுக்கிரனோடு கூடியிருந்தால் திருமணத்தில் அவதானம் தேவை.

ஏழாம் இராசியில் அவள் பூப்புபெய்துதல், தாம்பத்திய உறவு, கணவனது சுகதுக்கங்களில் பங்குகொள்ளுதல், கணவனிடம்

பற்றுக்கொள்ளுதல், கர்ப்பகால வியாதிகள், அதிஷ்டம், குழந்தைகள் போன்றவற்றை அறிந்து கொள்ளலாம்.

எட்டாம் இராசியில் கணவனது ஆயுள், கணவனின் தொழில், பதவி உயர்வுகள், கௌரவங்கள், மதிப்புகள், அதிஷ்டம், கணவனது நோய்கள், மனைவியைப் பிரிதல் போன்றவற்றை அறிந்து கொள்ளலாம்.

இராகு, கேதுக்களில் ஒருவர் சுக்கிரனோடு கூடியிருந்தால் காதலித்துத் திருமணம் செய்யக்கூடாது. மீறிச் செய்வதால் இனசன விரோதம், பெரும் அவமானம் உண்டாகும். அத்துடன் கேது, சுக்கிரனோடு சேர்ந்து களத்திரஸ்தானதில் ராகு இருந்தபல் அப் பெண் பல ஆண்களுடன் தொடர்பு கொண்டு பின் அவர்களால் கைவிடப்பட்டுப் பைத்தியக்காரி ஆவாள்.

குருவுடன் ராகு,கேது அல்லது சனி சேர்ந்திருந்தால் பெருந்துன்பங்கள் உண்டாகும். விவாகரத்து, கலகம், ஒழுக்கமில்லாத பிள்ளைகள் என்பனவே கிடைக்கும். லக்கணமும் ஏனைய கிரகங்களும் ராகு கேதுக்களுக்கு மத்தியில் இருந்தால் பெருந்துன்பங்கள் உண்டாகும். சட்டியில் இருந்தால் தான் அகப்பையில் வரும். அதுபோல யோகங்கள் இருந்தால் தான் வசதியான வாழ்வு அமையும்.

மனைவியானவள் திடகாத்திரமான உடலை உடையவளாகவும், நற்குணங்கள் உடையவளாகவும், கணவனின் சகோதரர்கள், பெற்றோர். உறவினர்களை மதித்து நடக்கக்கூடியவளாகவும், கிரகதோஷம், பிதிர்தோஷம் இல்லாதவளாகவும், நோய் இல்லாதவளாகவும், புத்திர பாக்கியம் உள்ளவளாகவும் இருத்தல் வேண்டும். இதற்காகத்தான்

பொருத்தம் பார்க்கப்படுகிறது. பண்டைக் காலத்தில் சாதகப் பொருத்தங்களாக பன்னிரண்டு பொருத்தங்களையும், சமூக பொருத்தங்களாக பன்னிரண்டு பொருத்தங்களையும், குடும்பப் பொருத்தங்களாக பன்னிரண்டு பொருத்தங்களையும் பார்த்தனர் இதன்படி முப்பத்தாறு பொருத்தங்கள் பார்க்கப்பட்டன. இவை யாவும் வரனினதும், பெண்ணினதும் சாதகத்தைக் கொண்டே கணிக்கப்பட்டன.

பொருளாதாரம் வளர்ந்த பின் பன்னிரண்டு பொருத்தங்களில் ஐந்து பொருந்தினால் போதும் என்ற நிலையும், தாலிப் பொருத்தம் இல்லா விட்டால், 'அம்மன் தாலி' கட்டலாம் என்று முடிவெடுப்பதும், பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டதே.

நதிகள், நட்சத்திரங்கள், பறவைகள், செடி, கொடிகள் ஆகியவற்றின் பெயர்களைப் பெண்களுக்கு வைக்க கூடாது. திருமணத்தை முடிவு செய்யும் போது இருவரது சாதகத்தின் ஏழாம் பாவத்தைக் கொண்டே முடிவெடுக்கப்படல் வேண்டும்.

களஸ்த்திர தானத்திற்கு இரண்டாம் இராசி நாதன் இராகு, செவ்வாயோடு கூடியிருந்தால் அடங்காத மனைவி அமைவாள்.

ஏழாம் இராசியில் சுக்கிரன் இருந்து அவனுடன் சுபக்கிரகங்கள் சேர்ந்து, பாவிகள் பார்க்காதிருந்தால் திருமகளைப் போன்ற மனைவி அமைவாள்.

முதலாம், ஏழாம் இராசிகளின் அதிபதிகள் கூடிப் பாவக்கிரகங்களில் 6,8,12ஆம் இராசிகளில் நின்றால் திருமணம் நடைபெறாது. இப்படியாகப் பலவற்றைக் கூறலாம்.

ஏழாமிடமான களஸ்திரதானத்தைப் பெரிதாக யாரும் பார்ப்பதில்லை.

இப்படிப்பல பிரச்சினைகளைச் சாதகங்களில் உண்டு. பெரும்பாலான சாதகங்கள் பொருத்தமுடையனவாக இருக்கும். மத்திமமான பொருத்தங்களைப் பொருத்தமென்றும், பொருந்தாத சாதகங்கள் 45~50 வீதம் பொருத்தமானவை என்றும், சோதிடர்கள் கூறச் சம்பந்தப்பட்டோர் தொழில், பணம் முதலியவற்றிற்காகத் திருமணம் செய்கின்றனர். ஆனால் குடும்பம் அல்லோலகல்லோலப்படும். பணம்,அழகு, தொழில் என்பவற்றைப் பார்ப்பதை விட எதிர்காலத்தைப் பார்ப்பது தான் சிறப்பானது. பஞ்சப்பரதேசியாக இருந்த ஒரு பெண் வரனின் சாதகயோகங்களால் கோடீஸ்வரியாவதும் உண்டு. கோடீஸ்வரர்கள் சோற்றிற்கு வழியில்லாமல் இருப்பதும் உண்டு. ஒரு சிறுதொழிலில் உள்ளவன் மேலதிகாரியாவதும் உண்டு. மேலதிகாரியா இருப்பன் தொழில் இல்லாமற் போவதும் உண்டு. இதற்குக் காரணம் யோகங்கள் தான். தொழில், பணம் அழகைப் பார்ப்பது போல சாதகர்களின் எதிர்காலப் பயன்களையும் கணித்தபின்பே திருமணம் செய்தல் வேண்டும். எனக்குத் தெரிந்த கல்வியறிவும். பொருளும் இல்லாத ஒருவர் அதே மாதிரியாக வசதி குறைந்த பெண்ணைத் திருமணம் செய்தார். யோககாரியான அவளின் சாதக பலன்களால் பெரும் கோடீஸ்வரரானார். அவரின் மூன்று மகள்களும் மூன்று வைத்தியர்களைத் திருமணம் செய்தனர்.

வாழ்க்கை என்பது பணம், பொருள், அழகு, தொழில் என்பவற்றில் இல்லை. அது சாதகத்தில் உள்ள யோகங்களில் தான் தங்கியுள்ளது.

துர்ஸ்தானம் என்று சொல்லப்படும் 6,8,12 இன் அதிபதிகள் ஒன்று கூடியோ அல்லது தனித்தனியாகவோ 6,8,12 ஆம் வீடுகளில் இருந்தால் பரம ஏழையாக இருந்தாலும் திடீரென்று கோடீஸ்வரனாவான். இது உண்மையில் நடந்தது. எனக்குத் தெரிந்த ஒருவருக்குச் சாதகத்தில் இப்படி இருந்தது. அவருக்கு ஊரில் பெண் கொடுப்பாரில்லை. அவ்வளவு வறுமை. தொழில் செய்யச் சென்ற இடத்தில் தன்னிலும் வறுமைப்பட்ட பெண்ணைக் காதலித்து அழைத்து வந்து விட்டார். ஊரவர் எவரும் அப்பெண்ணைப் பார்க்கக்கூடச் செல்வில்லை. மூன்று வருடங்களில் அவர் கோடீஸ்வரர் ஆகிவிட்டார். இன்று அவர்தான் ஊரில் பெரும் பணக்காரர். அவரின் ஐந்து பிள்ளைகளும் பெரும் உத்தியோகம் பார்க்கிறார்கள். இவற்றிற்கெல்லாம் காரணம் சாதகத்தில் உள்ள யோகங்கள் தான். யோகங்கள் 300 இற்கு மேலுண்டு. நல்ல கிரகங்கள் நல்ல இடத்திலும், துர்க்கிரகங்கள் பொருத்தமான இடங்களிலும் இருப்பதை யோகம் என்பார்கள். இதைக் கவனித்தால் தான் நல்ல பயன்களைப் பெறலாம். பல சாதகங்கள் யோகம் காரணமாகத் தாமே சேர்கின்றன. பணம், பொருள், அழகு, தொழில் என்பவற்றிற்காக வலிந்து பொருத்தப்படும் சாதகங்களால் சாதகர்களுக்கு எந்நாளும் துன்பங்கள் தான் மேலோங்கும். இதைத் திருமணம் செய்யப்போகும் ஆணும், பெண்ணும், இருவீட்டார்களும் உணரல் வேண்டும். காதலிப்பவர்கள் பொருத்தம் பார்ப்பதில்லை. ஆனால் காதலிப்பவர்களில் 90 வீதமானவர்களின் சாதகம் பொருந்தி இருக்கும். விதி என்பது இரு துருவங்களாக இருக்கும் இரு உள்ளங்களைச் சேர்த்து வைப்பது, இன்பமான, துன்பமான தன்மைகளைத் தருவது. ஒருவர் விதியின் தொடர்பில்லாது இன்னொருவருடன் நட்புக்கூடக் கொள்ள முடியாது. காதல் விதிகாரணமாக வந்து சேர்கிறது. பேசப்படும்

திருமணங்கள் விதியின்படி வந்தாலும் அதை மூளையைப் பாவித்து சாதகத்தில் உள்ள யோகங்களைக் கணித்த பின்பு திருமணம் செய்யலாம். ஆனால் பணம் பொருள், அழகு,தொழில் என்பன அவற்றையெல்லாம் மறைத்து விடுகின்றன. யோகங்கள் உள்ளவர்களுக்கு செய்யும் முயற்சிகள் யாவும் வெற்றியைக் கொடுக்கின்றன.அதிஷ்டத்தைக் கொடுக்கின்றன. யோகமில்லாத ~வர்களுக்குச் செய்யும் முயற்சிகள் தோல்வியைத் தருகின்றன. அதனால் தான் சிலர் வியாபாரத்தில் பெரும் பணம் சம்பாதிக்கின்றனர். பதவி உயர்வுகள் பெறுகின்றனர். பலர் நட்டமடைகின்றனர். பதவி உயர்வுகள் பெறாது நியமனம் பெற்றபடியே ஓய்வு பெறுகின்றனர். ஒரே கல்வியை ஒரே பல்கலைக்கழகத்தில் பெற்ற வைத்தியர்கள் எல்லோரும் நிபுணத்துவம் பெறுவதில்லை. இவற்றைச் சாதகத்தைப் பார்த்து அறிந்து கொள்ளலாம்.

இன்பமும், துன்பமும், மோட்சமும் நரகமும் பூமியில் தான் உண்டு. ஒவ்வொருவரும் வாழும் வீட்டிலேயே இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றனர். பாவப்பட்ட ஆன்மா பாவப்பட்ட குடும்பத்தில் பிறந்து பெருந்துன்பங்களை அனுபவிக்கிறது. புண்ணியம் செய்த ஆன்மா புண்ணியம் செய்தவர்களது குடும்பத்தில் பிறந்து பெரும் இன்பங்களை அனுபவிக்கிறது. எடுத்த பிறப்பில் புண்ணியம் செய்த ஆன்மா செய்த சேவைகளைத் தொடர்ந்து செய்ய இறைவன் அனுக்கிரகம் செய்து நல்ல பிறவியை வழங்குகிறார் என்று பகவத்கீதை சொல்கிறது. கீதை, பகவான் கிருஷ்ணரால் அரிச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்டது. அது உண்மையான தெய்வீக நூல் என்று இந்துக்கள் இப்போதும் நம்புகின்றனர். இது பற்றி விரிவாக, ‘‘இன்பத்தை அள்ளித்தரும் இந்துமதம்’’ என்ற நூலில்

எழுதியுள்ளேன். சமயமும் சோதிடமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள். அதனால் சமயம் கூறும் வழிகளைப் பின்பற்றி என்றும் இன்பம் பெறலாம்.

கடவுளின் பணி, ஓர் ஆன்மாவை அது செய்த புண்ணிய பாவங்களுக்கேற்ற கருப்பையைச் சென்றடைய வழி வகுத்தலே தவிர அதற்கு இன்பதுன்பங்களைக் கொடுப்பதல்ல என்று சைவ சித்தாந்தம் கூறுகிறது. அதனால் பூமியில் நல்ல முறையில் வாழ்பவர்கள் நல்ல குடும்பத்தை அடைந்து சகல சௌபாக்கியங்களும் பெறுவார்கள். எனவே ஒழுக்கமான முறையில் வாழ்ந்தால் அடுத்த பிறவி சிறக்கும். இதைவிடக் கடவுள் பக்தியுள்ளவர்கள், கடவுளின் அருளால் என்றும் நன்மைகளைப் பெறுபவர். தீய பலனைக் கொடுக்கும் ஸ்தானங்களில் தீய கிரகங்கள் இருந்தாலும் அவர்களின் இருப்பு, சேர்க்கையைப் பொறுத்து அவர்கள் பெரும் நன்மைகளைச் செய்வர். இது சாதகத்தில் கிரகங்களின் இருப்பைக் கொண்டே கணிக்க முடியும்.

நிறைவாக விதியைப் பற்றிப்புராண இதிகாசங்கள், புராதன நூல்கள் கூறுவன மிகவும் விசித்திரமானவை.பாரதக் கதையில் கிருஷ்ணருடைய குருவின் மகனைக் கடலரசன் கொன்று விட்டான்.அவனை மீட்கக் கிருஷ்ணர் கடல் அரசனைப் போருக்கு அழைக்கிறார். கடலரசன் வந்து நடு நடுங்கியபடி, ‘‘பிரபு, உங்கள் குருவின் மகனை நான் கொல்லவில்லை பாஞ்சாலன் தான் கொன்றான்’’ என்றான். அதைக் கேட்டு அளவில்லாத சினம் கொண்ட கிருஷ்ணர் கோபாவேசத்துடன் பாஞ்சா,னைப் போருக்கு அழைக்கிறார். அவன் பக்தியுடன் வந்து வணங்கி, ‘‘பிரபு, நான் தங்களது கையில் இருக்கும் பாஞ்சாலம் என்ற சங்கு. அச்சங்கை உங்கள் குருவின்

மைந்தன் ஏளனஞ் செய்தமையால் கொன்றேன்'' என்றார். அதனால் மகிழ்ந்த கிருஷ்ணர் அவனைச் சங்கை மாற்றிச் சாபவிமோசனம் அளித்து ஏற்றுத் தனது கரத்தில் வைத்துக் கொண்டு யமலோகம் சென்றார். யமன் தான் கொன்றவர்களைத் திருப்பிக் கொடுப்பதில்லை. அது முறையும் அல்ல, உலக வழக்குமல்ல அதனால் செல்லுங்கள் என்று இரக்கிறான். கிருஷ்ணர் தான் அவனது சாதகச் சுவடியைப் பார்க்க வேண்டுமென்றார். அதைச் சந்திரகுப்தன் எடுத்துக் கொடுக்கிறான். அது எழுதப்படாத பக்கமாக இருக்கிறது. அது கிருஷ்ணரின் திருவிளையாடல் என்று புரிந்து கொண்ட யமன் பிரச்சினைப்படாது கிருஷ்ணனது குருவின் மகனை வருவித்துக் கொடுக்கிறான். அப்போது நாரதர் அவ்விடம் வந்து ஞ ''பிரபு, கடவுளாலும் விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். விதியை மாற்றாதீர்கள்'' என்றார். அதற்குச் சிரித்த கிருஷ்ணர், ''நாரதரே, விதியை நான் மாற்றவில்லை விதிப்படி அவன் இறந்தான். எனது அனுக்கிரகத்தால் அவன் உயிர் பெற்றான்.அது தான் விதி'' என்றார். நாரதரால் எதுவும் பேசமுடியவில்லை. இது தான் சங்ககாலம் தொடக்கம் இன்று வரை நடக்கிறது. பதவிகள், பட்டங்கள் விருதுகள் யாவும் மேலதிகாரிகளின் கையாட்களுக்கே கொடுக்கப்படுகின்றன. அதைப் பாதிக்கப்பட்டோர் விதியென்று நம்பி திருப்திப்படுகின்றனர். பட்டங்கள், பதவிகள், விருதுகள் யாவற்றையும் தமக்கு வேண்டியவர்களுக்கு வழங்கி விட்டு, ''கல்வி மிகவும் தரம் குறைந்து விட்டது'' என்று கவலை வெளியிடுவதும் விதிதான். இது தான் நடைமுறை. ஏற்றுத்தானே ஆகவேண்டும்.

## தோஷங்களும் பரிகாரங்களும்

தற்பொழுது பல்வேறு காரணங்களுக்காகப் பொருத்தங்கள் முறையாகப் பார்க்கப்படுவதில்லை. இதனால் தோஷங்கள் ஏற்படும். இதற்குப் பரிகாரங்கள் இருந்தபோதிலும் அவை பூரணமான பலனைத் தரும் என்றில்லை. ஆண், பெண் சாதகங்களில் ஒன்றிலோ, அல்லது இரண்டிலுமோ சூரியனும், சந்திரனும் சேர்ந்து மறைவிடங்களான 6,8,12 ஆம் இராசிகளில் இருந்தாலும், அல்லது அந்த இராசிகளைப் பார்த்தாலும் அல்லது அந்த இராசிகள் ஆண் இராசியாக இருந்தாலும், தோஷம் ஏற்படும். குடும்பத்தில் நிம்மதி குறைவு, தாம்பத்திய உறவில் திருப்தியின்மை, புத்திரபாக்கியமின்மை என்பன உண்டாகும். இவர்களின் சந்திர ராசிகள் இரட்டைப்படை, (பெண்) இராசிகளில் இருந்தால் பரிகாரம் செய்யலாம். இது பிதிர்தோஷமாகும். பிதிர்களுக்கு பூசை அன்னதானம் செய்தல், குல தெய்வழிபாட்டின் மூலம் இத்தோஷத்தை நீக்கலாம். பிரேதச் சாபத்தாலும் இத்தோஷம் ஏற்படும்.

குரு, சந்திரன், சுக்கிரன், இராகு ஆகிய கிரகங்களால் தோசம் உண்டாகும். இத்தோசங்களைத் சோதிடர்களைக் கொண்டு கணிப்பித்து திருமணத்திற்கு முன்பதாக தோச பரிகாரங்கள் செய்யப்படவேண்டும்.

குருவால் திருமணம் தடைப்பட்டால் ருக்மணி கல்யாணம், பாமாவிஜயம், சீதா கல்யாணம், விஸ்ணு தோத்திரம் முதலியவற்றைப் படித்தால் இத்தோஷம் நீங்கும்.

சுக்கிரனால் திருமணம் தடைப்படுமானால் லட்சுமி பூசை, வேப்பமர பூசை, புண்ணிய தீர்த்தங்களில் நீராடல், பௌர்ணமி தினத்தில்

சத்தியநாராய பூசை செய்து மூன்று அடியவர்களுக்கு உணவளித்தல் வேண்டும். அத்துடன் திருவிளக்குப் பூசை, லலிதாம்பிகை பூசை, லலிதா சகஸ்ர நாமம் படிப்பதன் மூலம் தோஷம் நீங்கும்.

இராகு,கேதுக்களால் திருமணம் தடைப்பட்டால், செவ்வாய்க் கிழமை, திருவாதிரை நட்சத்திரமன்று தேவி பூசை, சர்ப்ப பூசை செய்தால் இத்தோஷம் நீங்கும்.

இதைவிட ஒவ்வொருவரும் பிறந்த நட்சத்திரத்தினாலும் தோஷம் ஏற்படலாம். இது கிரகதோஷத்தை விடக் கொடியது. அச்சுவினி, மகம், மூல நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு திருமணத் தடை ஏற்பட்டால் கணேச கவசம் படித்து, கணபதி ஹோமம் செய்து மோதகம், அவல், சர்க்கரைச் சாதம் படைத்தல் வேண்டும்.

பரணி, பூரம், பூராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு நட்சத்திர தோஷம் உண்டானால் இலட்சுமி, நரசிம்மருக்கு அபிசேகம் செய்து, ருக்மணி கல்யாணம், பராயணம் கேட்டு, குங்குமப் பூவில் பால் கலந்து காய்ச்சி கிருஷ்ணருக்குப் படைத்தல் வேண்டும்.

திருவாதிரை, சுவாதி, சதயநட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு இராகுவினால் திருமணத் தடை ஏற்பட்டால் இராஜராஜேஸ்வரி, புவனேஸ்வரி அம்மனுக்கு சிவப்பு புடைவை, பிச்சிப்பூ சமர்ப்பித்து அர்ச்சனை செய்தல் வேண்டும். அத்துடன் ஏழைக் கன்னிப் பெண்களுக்குச் சேலை தானம் செய்து, உழுத்தம் மாவினால் கோலமிட்டு அம்பாளைக் கர்ப்பூரத்தால் அர்ச்சித்தல் வேண்டும்.

இவற்றோடு துர்க்கைக்கு எலுமிச்சம்பழ மாலை அணிவித்தல், ஞாயிற்றுக்கிழமைகளில் விநாயகருக்கு வெள்ளெருக்கம்பூ மாலை அணிவித்தல், சிவனுக்கு அபிசேகம் செய்தல், அயோத்தியா காண்டம் படித்தல் வேண்டும்.

கேது, திருமணத்திற்குத் தடை செய்வதில்லை. சிலவேளைகளில் தோசம் இருக்கும் என்று எண்ணினால் கணபதி ஹோமம் செய்து விநாயகருக்கு அறுகம்புல் மாலை சாத்துதல் வேண்டும்.

ஆண்களின் சாதகத்தில் சூரியன் 4,7,12 ஆம் இராசிகளில் இருப்பதும், சனியோடு சேர்ந்திருந்தாலும் தோசமாகும். இதனால் ஆண்மைக்குறைவு, இருதயநோய், பக்கவாதம், என்னும் நோய்களைக் கொடுக்கும். பெண்களின் சாதகத்தில் இவ்வாறு இருந்தால் பலவீனம் கணவன் மனைவியிடையே ஒற்றுமையின்மை ஏற்படும். இதற்கு சத்தியநாராயண பூசை செய்து பசுவிற்கு தலைவாழையிலையில் சர்க்கரைப் பொங்கலும் பழமும் படைத்து அதை உண்ணக் கொடுத்தல் வேண்டும். பிராமணர்களுக்குத் தானம் கொடுப்பது சிறப்பு.

செவ்வாய் தோஷம் இருந்தால் நடராஜர், சோமஸ்கந்தர், சிவன், லிங்கோத்பவர் ஆகிய சிவலிங்கங்களுக்கு அபிசேகமும் அர்ச்சனையும் செய்தல் வேண்டும். பொதுவாகத் தோஷங்களுக்குப் பல்வேறு காரணங்கள் இருக்கும். சைவர்கள் சிவனையும் சக்தியையும் வணங்கி வந்தால் அனைத்துத் தோஷங்களும் நீங்கும். திருநீற்றுப்பதிகம், நமசிவாய பதிகம், கோளறுபதிகம், சிவபுராணம் என்பவற்றைத் தினமும் ஓதிச் சிவழிபாடு செய்து

வந்தால் எல்லாத் தோசமும் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். தோசமுள்ள சாதகர்கள் தோச நீங்கத்திற்காகச் செய்யும் பூசைகளையும், தானங்களையும் தமது சொந்த உழைப்பில் செய்தல் வேண்டும். பிறரின் பணமானால் புண்ணிய பலன்கள் பொருள் தந்தார்களைக் சேர்ந்து விடும் என்று சைவசமயம் கூறுகிறது. அதனால் பயனில்லாது போய்விடும். பிரார்த்தனைகள் ஆசைகளைத் தீர்ப்பதற்கான வழியாக இருக்கக்கூடாது. அத்துடன் நிபந்னைகள் இல்லாதிருத்தலும் வேண்டும். செயல்களுக்கான பலன் கட்டாயம் கிடைக்கும். ஆனால் அதைப் பற்றி எண்ணக்கூடாது என்கிறது. பகவத்கீதை. வணங்கும் நோக்கம் கடவுளுக்குத் தெரியும் என்பதை நம்புபவர்கள் பலனைக் கேளாமலே பெறுவர்.

நிறைவாக பெண்களின் சாதகத்தை எவ்வாறு கணிப்பது என்பதைப் பார்ப்போம். ஆண்டவரின் படைப்பில் ஆண், பெண் என்ற இருவகைப் பிரிவு இருக்கிறது. சோதிட வல்லுனர்கள் பெண்களின் சாதகத்தை ஒருவிடயத்தில் மட்டும் வித்தியாசப்படுத்தியுள்ளனர். பெண் குழந்தையாக இருந்து கன்னியாக மாறும் நாளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ருதுவான தினத்தின் நட்சத்திரம், தினம், கிரகங்கள் நிற்கும் நிலையைக் கொண்டும் பலன் சொல்வர். இது தவிர பிறப்பு, தொழில், படிப்பு, யோகம், போகம், சந்தானம், ஆயுள், திருமணம் பிள்ளைப் பாக்கியம், ஆரோகியம், விரயம், துர்நடத்தை, நன்நடத்தை போன்றவை பார்க்கும் போது ஆண்களுக்குப் பார்ப்பது போல் பார்த்தல் வேண்டும்.

இது தவிர ருது காலப் பலன்களையும் பார்த்தல் வேண்டும். நம் முன்னோர் எழுதிய அரிய நூல்களைப் படிப்பதன் மூலம் நல்ல பிள்ளைகளைப் பெறலாம்.

திருமூலர் தனது திருமந்திரத்தில் நல்ல பிள்ளைகளைப் பெறும் வழி பற்றி நாற்பது பாடல்களில் கூறியுள்ளார்.

**"ஆண்மிகில் ஆணாகும் பெண்மிகில் பெண்ணாகும்**
**பூணிரண்டொத்தப் பொருந்தில் அலியாகும்.**
**தான்மிகுமாகில் தரணி முழுதாளும்**, என்றும்,

**பாய்கின்ற வாயு குறையிற் குறளாகும்**
**பாய்கின்ற வாயு இளைக்கின் முடமாகும்**
**பாய்கின்ற வாயு நடுப்படிற் கூனாகும் என்றும்**

**மாதா உதரம் மலமிகில் மந்தனாம்**
**மாதா உதரம் சலமிகில் மூங்கையாம்**
**மாதா உதரம் இரண்டொக்கில் கண்ணில்லை**
**மாதா உதரத்தில் வந்த குழவிக்கே**

என்றும் கூறியுள்ளார். பகவத்கீதை நீதான் உனக்கு நண்பன். நீதான் உனக்கு எதிரி. உனக்கு நீயே உதவி செய்தல் வேண்டும் வேறு எவரும் செய்யமாட்டார் என்று கூறுகிறது.

ஒருவரின் கிரக நிலைப்படி வாழ்வு அமைந்தாலும் திட்டமிட்டு வாழ்வைச் சீர்செய்யலாம்.அதற்கு இறைவன் உதவுவார். கணவன் மனைவி உறவில் கவனம் தேவை. பழைய காலத்தில் வேத, உபநிடதங்களுடன் காம சாத்திரத்தையும் மாணவர்களுக்குக் கற்பித்தமையால் தான் நல்ல பிள்ளைகளைப் பெறமுடிந்தது. இது பற்றி மிகவும் விளக்கமாக ஆசாரக் கோவை, திருமந்திரம், காமசூத்திரம், திருக்குறள் போன்ற நூல்கள் கூறுகின்றன. அவற்றை விரிவாக எழுதியுள்ளேன். www.gunasegaram.com இல் பார்க்கலாம்.

ஒருவனுக்கு மனைவி மட்டுமல்ல பெற்றோர், நண்பர்கள், வளர்ப்பு மிருகங்கள் கூடக் கிரகபாவங்களால் தான் வந்தடையும். நான் 1989ஆம் ஆண்டு நாவலர் தமிழ் வித்தியாலயத்திற்கு அதிபராகச் சென்ற போது திருமதி. சாந்தினி வாகீசன் முதல் நியமனம் பெற்று வந்தார். அன்றிலிருந்து 2005 ஆம் ஆண்டுவரை நல்ல நண்பராக இருந்து எனக்குதவி செய்து பாடசாலையை உச்சநிலைக்கு கொண்டு வந்தார். அவரைக் கொண்டு செய்யும் செயல்கள் அனைத்தும் பெருவெற்றியைத் தந்தன. அதனால் பாடசாலை பெரும் புகழ் அடைந்தது. இவ்வாறு சேர்பவர்களும் ஒருவரின் நிலையான பலனை நிர்ணயிக்கிறார்கள். இப்பொழுது திருமதி சாத்தினி அவர்கள் கடத்த 10 வருடங்களாக நாவலர் தமிழ் வித்தியாலைத்தின் அதிபர் பதவியை ஏற்று மிகவும் சிறப்பாக நடாத்தி வருகின்றார். இந்நூல் பற்றிய சந்தேகங்களைக் கடித மூலம் கேட்டறியலாம். இல்லாவிட்டால் 094 0776450185 என்ற கைத்தொலைபேசி மூலம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

நன்றி.